Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



சிவப்பிரகாசர் போற்றும் வீரசைவம்

பேராசிரியர் தி.இராசகோபாலன்

மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளியீட்டு எண்: 94

சிவப்பிரகாசர் போற்றும் வீரசைவம்

பேராசிரியர் தி. இராசகோபாலன்
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி

திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்
குருவருள் வீரசைவ ஞானாசிரியர்
வீரசைவ ஞானபீடத்தில் திகழ்
திருவருட் குருமகாசந்நிதானம் இருபதாம் பட்டம்
ஸ்ரீ ல ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்களின்
திருவருட் குருவாணையின் வண்ணம் வெளிவருகிறது.

மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு - 2015
மயிலம் - பொம்மபுரம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல் குறிப்பு

நூல் தலைப்பு	:	சிவப்பிரகாசர் போற்றும் வீரசைவம்
ஆசிரியர்	:	பேராசிரியர் தி.இராசகோபாலன்
முதற்பதிப்பு	:	2015
உரிமை & வெளியீடு	:	மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம் - 604304 பொம்மையபாளையம் - 605104
பொருள்	:	வீரசைவ வரலாற்று ஆய்வு
அளவு	:	1/8 டெமி
புள்ளி	:	12 புள்ளி
பக்கங்கள்	:	152
விலை	:	ரூ. 90/-
வடிவமைப்பு	:	கபிலன் ஒளியகம், புதுச்சேரி-8
அச்சிட்டோர்	:	கணபதி எண்டர்பிரைசஸ் சென்னை -05.

ISBN NO: 978-93-85508-02-8

இந்நூல் 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று பொம்மையபாளையம் திருமடத்தில் நடைபெற்ற சிவப்பிரகாசர் விழாவில் மயிலம் பொம்மபுர ஆதீனம் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் முன்னிலையில் மாண்புமிகு நீதியரசர் வெ. ராமசுப்பிரமணியன் அவர்களால் வெளியிடப் பெற்றது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ பாலசித்த குருவே போற்றி!

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க!

குருமரபு வாழ்த்து

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிவமயம்

ஸ்ரீபாலசித்த குருவே நம;

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் திருமடம்

மயிலம் – 604304. விழுப்புரம் மாவட்டம்

மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம்

20ஆம்பட்டம் சிவஞானபாலய சுவாமிகள் அருளிய

ஆசியுரை

தெய்வச் சிந்தனையும், தெய்வ நாமங்களும் தெய்வத்தைக் குறித்த வழிபாட்டுப் பாடல்களும், பனுவல்களும் எல்லாவிதமான இன்பத்தையும் அளிக்கவல்லன. எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தேவையான ஒன்று எனப் பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் சுட்டுகின்றது. இன்பத்தைச் சிற்றின்பம், பேரின்பம் என வகுத்தனர் முன்னோர். பேரின்பப் பெருநிலையை அடைய ஆன்மிக அருளாளர்கள் காட்டிய வழிமுறைகள் ஏராளம். அவர்களுள் மயிலம் பொம்மபுர ஆதீனம் பாலசித்தர் பரம்பரையில் ஆதி சிவஞான பாலய சுவாமிகளின் அருட்சீடராகத் தோன்றிய நல்லாற்றூர் ஸ்ரீசிவப்பிரகாசர் குறிப்பிடத்தக்கவர்.

வீரசைவத்தின் பெருமையை உலகறியச் செய்ய 7ஆம் நூற்றாண்டில் உதித்து 500 ஆண்டுகள் வாழ்ந்த ஸ்ரீபாலசித்தர், அவர் வழிவந்த 12 ஆம் நூற்றாண்டில் தோன்றி 17 ஆம் நூற்றாண்டு வரை அருள்பாலித்த ஆதிசிவஞான பாலய சுவாமிகள் வீரசைவத்தை வளர்ச்சிப் பாதையில் உருவாக்கிய பெருமைக்கு உரியவர்கள். வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் வந்து அருட்சீடராக விளங்கிய நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், தமிழ் மீது கொண்ட அளவற்ற பற்றுதலால் மீண்டும் பிறவி வேண்டுமென இறைவனிடம் வேண்டியமையை அவர் இயற்றிய முதல் நூலான சோண சைலமாலை பதிவு செய்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கன்னடம், வடமொழி, தமிழ் எனப் பன்மொழிப் பயிற்சியிருப்பினும் தமிழால் இறைவனைப் பாடி மகிழ்ந்த இவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறையருளைப் பெற எண்ணற்ற நெறி முறைகளைத் தமது இலக்கியங்களில் கூறிச் சென்றுள்ளார். ***கற்பனைக்களஞ்சியம்*** எனப் போற்றப்பெறும் சிவப்பிரகாசரின் வீரசைவ சமயச் சிந்தனைகளை ஆய்வு செய்து, பேராசிரியர் தி.இராசகோபாலன் அவர்கள் நிறைவாக அனைவருக்கும் எளிதில் சென்று சேருமாறு கூறியுள்ளமை பாராட்டத்தக்கது.

கொண்டவனை அன்றிப் பிறர் அறியாக் குலமகள் போல சைவர்களும் சமய நெறியில் ஒப்பற்ற ஓர் இறைமையைக் கண்டு கற்புடன் திகழ வேண்டும் என்பதைக் ***கண்ணுதல் ஒருவற் சார்ந்த கற்புடைச் சைவம் வாழ்க*** என்று சமயிகளுக்கே ஓர் கற்பு வேண்டும் எனக்கூறும் சிவம் பெருக்க வந்த சிவப்பிரகாசர், சங்கமர்கள் நடந்து போவதற்கு ஒற்றையடிப் பாதையாக இருந்த சிவானுபவங்களை நெடுஞ்சாலையாக்கித் தந்திருக்கிறார் என நூலாசிரியர் குறிப்பிடுவது **"*நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்*"** என்ற தொடரை மெய்ப்பிக்கிறது.

சிவஞானத்தை உயிராகக் கொண்டு அல்லமப் பிரபுவின் சரிதத்தைத் தீட்டி வீரசைவத்தை உலகறியச் செய்த சிவப்பிரகாசதேவனை, இழிகுணமுடைய தான் எவ்வாறு எடுத்து ஓத முடியும் என்று வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், தம்மை மிகவும் தாழ்த்திக் கொண்டு சிவப்பிரகாசரைப் போற்றுகிறார்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு

எனும் குறளை நினைவூட்டுகிறார் நூலாசிரியர். உயர்ந்து செல்லச் செல்ல ஒரு மனிதனுக்குப் பணிவு மிகமிகத் தேவையானது என்பதை இக்கருத்து வலியுறுத்துகிறது.

இந்தியாவில் எண்ணற்ற சமயங்கள் இருப்பினும் அவற்றில் வீரசைவம்தான் தொன்மையானது என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறும் சிவப்பிரகாசரின் சீரிய சிந்தனை, நூலாசிரியர் வழி மேலும் வலுப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு குழந்தை தாயின் வயிற்றில் கருவாகின்ற போதே இட்ட லிங்கத்தைத் தாய் தனது கழுத்தில் அணிந்து கொள்வது வீரசைவ முறை. இதைக் கர்ப்பலிங்கதாரணம் என்பர். ஒரு குழந்தை கருவாதற் குரிய அணுக்கள் தாயிடம் பத்து மாதம் வருவதற்கு முன்பே தந்தை-யிடம் இரண்டு மாதங்கள் இருப்பதாக அருணகிரிநாத சுவாமிகள் கூறுகிறார். தாயிடமிருந்து உடலையும், தந்தையிடமிருந்து உயிரையும் பெறுகின்ற மனிதனுள் இறைவன் ஆன்மாவாகப் புகுந்து அவனை இயங்க வைக்கிறார் எனும் கருத்தை வீரசைவ அட்டாவரணங்களுள் ஒன்றான இட்டலிங்கம் சுட்டுவதை நூலாசிரியர் விவரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாதனங்களில் திருநீறும்
தவங்களில் கொல்லாமையும் சிறந்தது

என்ற பாடல் வழி, **கொல்லாமை நெறியே குருவருள் நெறி** என்பதை உணர்ந்து வாய்மை எனும் உயரிய நெறியில் தமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் எனவும், பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை தருவது திருநீறு எனவும் உணர்த்தும் பாங்கு எண்ணத்தக்கது.

நான்முகனும் திருமாலும் தேடிக் கொண்டிருக்கிற சிவனை அங்கைத் தலத்தில் இட்டலிங்கமாக ஏந்தி அர்ச்சிக்கத் தயாராக இருப்பின் 'உம்மை மணப்பேன்' எனக் கௌசிகனிடம், மாதேவி வீராங்கனை போல முழங்குகிறாள். இவ்வாறு மாதேவியைப் பேச வைக்கும் சிவப்பிரகாசர் பெண்ணின் பெருமையை முன்னிறுத்தி, வீரசைவத்தின் பெருமையை நிலை நிறுத்தச் செய்கிறார் எனும் உண்மையை நூலாசிரியர் விவரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீரசைவத்தில் சாதியமைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்த பசவரைத் தொடர்ந்து, பிறப்பு இறப்பால் எல்லோரும் ஓர்குலம் என்பதை நிலைநாட்டியவர் சிவப்பிரகாசர் என்ற உயரிய சிந்தனையை நூலாசிரியர் சுட்டியுள்ளது தற்காலத்திற்குத் தேவையானது.

வீரசைவத்தின் உயிர்நாடி உழைப்பு, உயிரிருக்கும் வரை எத்தகைய சிவயோகியாக இருப்பினும் முடிந்த அளவு உழைக்க வேண்டும். 'உழைப்பே கயிலாயம்' 'உழைப்பில் ஏற்றத்தாழ்வு என்பது இல்லை போன்ற அரிய கருத்துகள் உழைப்பு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒன்றினால்தான் மாந்தர் இனம் உயர முடியும்' என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

அட்டாவரணங்களுள் முதன்மையாகக் குறிப்பிடப் பெறும் விபூதியை அணியும் முறையை வீரசைவம் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

நடுவிரல் அதற்குப் பக்கத்தில் உள்ள மோதிரவிரல் என்ற இரண்டாலும் இடது பக்கத்தின் கடைசியிலிருந்து தொடங்கி இரண்டு கோடுகள் இழுத்து வர வேண்டும். வலது பக்க எல்லை முதல் இடது எல்லை வரை கட்டை விரலை இழுத்துத் தொடங்கிய இடத்திலே கொண்டு போய் நிறுத்திவிட வேண்டும் இது வீரசைவ முறை. மேலான பரசிவத்தினை அடையும் மார்க்கங்களுள் திருநீறு சக்தி வாய்ந்தது என்பதை உணர்த்தும் வகையில் ஞானசம்பந்தர், நாவுக்கரசர் போன்ற சமயகுரவர்கள் திருநீற்றுப்பதிகம் பாடியுள்ளமையை நினைவுகூரும் வகையில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ளார் நூலாசிரியர்.

இறைவனைக் குறித்த மந்திரங்கள் ஏழு கோடி இருப்பினும் அவற்றுள் நமச்சிவாய மந்திரம் தலைமை வாய்ந்தது என்பார் சிவப்பிரகாசர். ***உன்னை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே*** என்பர் சமயச் சான்றோர். உச்சரிப்பவரைக் காக்கும் மந்திரமாக விளங்கும் 'நமச்சிவாய' என்பது அட்டாவரணங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது என்பதைப் பாமரரும் எளிதில் புரிந்து கொள்ளும் நிலையில் கூறியுள்ளமை பாராட்டத்தக்கது.

இட்டலிங்கம் அணிந்துள்ள ஒவ்வொரு வீரசைவனும் தமது இடது கையில் இலிங்கத்தை வைத்துப் பூசை செய்வது மரபு. இதனைச் சிறப்பிக்கும் நிலையில் இட்டலிங்க கைத்தல மாலை எனும் நூலில் உள்ள ஒவ்வொரு பாடலின் நிறைவிலும்

'என்ன மாதவம் செய்ததோ எனது கைத்தலமே' என நெக்குருகிப் பாடுகிறார் சிவப்பிரகாச சுவாமிகள். இக்கருத்தை நூலாசிரியர் பதிவு செய்துள்ள விதம் போற்றுதலுக்குரியது.

அட்டாவரணங்களுள் ஒன்றாகத் திகழும் பாதோதகத்தில் மூழ்கி எழுந்த ஒரு புழுவுக்குக் கிடைத்த பேறு, புனித தீர்த்தங்களில் நீராடிய அன்பருக்குக் கூட கிட்டாது எனக் கூறுவதிலிருந்து,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குருவின் திருவடி நன்னீரின் மகிமை, இந்நூலின் வாயிலாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

கன்னட தேசத்தில் வீரசைவத்திற்கு மறுமலர்ச்சி தந்த பசவரைப் போல தமிழகத்தில் வீரசைவ மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் சுயம் பிரகாசமாகிய ஸ்ரீ சிவப்பிரகாசர் என இந்நூலாசிரியர் கூறி-யிருப்பது மிகப் பொருத்தமான ஒன்றே ஆகும். நகரேஷு காஞ்சி எனச் சிறப்பிக்கப் பெறும் காஞ்சியில் பிறந்த ஸ்ரீ சிவப்பிரகாசர், பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையில் வீரசைவ பரமே காட்ட பரனருளால் வந்துதித்த மயிலம் பொம்மபுர ஆதீனம் ஆதி சிவஞான பாலய சுவாமிகள் குருவருளும், எல்லையில் பெருமை அருணையை நினைக்க எய்தலாம் முக்தி எனும் அண்ணாமலையாரின் திருவருளும் பரிபூரணமாக வாய்க்கப் பெற்றவர் என்பதை "சிவப்பிரகாசர் போற்றும் வீரசைவம்" எனும் இந்நூல் வாயிலாக நூலாசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

தாம் மேற்கொண்ட பணியை முழு ஈடுபாட்டுடனும், தெளிவான சிந்தனையுடனும், செயல் திறத்துடனும் எளிதில் முடிக்கும் வல்லமை பெற்ற பேராசிரியப் பெருமகனார் தி. இராசகோபாலன் அவர்கள் 'ஓதுவது ஒழியேல்' எனும் வாசகத்தை நினைவில் நிறுத்தி இடையறாத வாசிப்புப் பழக்கத்தினால் பல நூல்களை இத்தமிழுலகத்திற்குத் தந்து வாழ்வில் அனைத்து வளங்களும் பெற, **எம்ஆதீன குருமுதல்வர் ஸ்ரீபாலசித்தர், ஆதிசிவஞான பாலய சுவாமிகள் குருவருளையும், எல்லாம் வல்ல மயிலம் தண்மாமலை மணக்கோல முருகன் திருவருளையும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.**

வாழ்க வீரசைவப் பெருநெறி!

(ஒப்பம்)

மயிலம்

02.011.2015

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
20ஆம் பட்டம்
மயிலம் பொம்மபுர ஆதீனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Prof. **T. RAJAGOPALAN,** Ph.D.,
Former Head Professor of Madras Christian College,
44, Mahalakshmi Nagar, Selaiyur. Chennai-600 073

தி.இராசகோபாலன்
44, மகாலட்சுமி நகர், சேலையூர் (அஞ்சல்),
சென்னை – 600073 Ph: 044-22275286

Date 26.10.15

முன்னுரை

அடிமனத்தில் வேர்விட்ட நன்றி மலர்களை நாளும் தூவுவேன்.

****

மயிலம் பொம்மபுர ஆதீனம் 20ஆம் பட்டம் சீர்வளர்சீர் சிவஞான பாலய சுவாமிகளின் அருட்பார்வை, புதுவைத் திருக்குறட் பேரவையில் யான் கலந்து கொண்டபோது எளியேன்மேற் பட்டது. அந்த நயனதீட்சை மீண்டும் மயிலம் திருமடத்தில் நிகழ்வுற்ற குருபூசையின்போது, வாசக தீட்சையாக மலர்ந்தது. அந்த வாசக தீட்சையே இப்பொழுது, "சிவப்பிரகாசர் போற்றும் வீரசைவம்" எனும் பெயரில் ஞானதீட்சையாக மலர்ந்திருக்கிறது.

இராமகிருஷ்ண பரமஹம்சருக்கு சுவாமி விவேகானந்தர் வாய்த்ததுபோல், சிவப்பிரகாச சுவாமிகளுக்கு வாய்த்த பீடாதிபதி, 20ஆம்பட்டம் அவர்கள், "ஆன்ற புலவோர் அளவில்லார் ஆய்ந்துரைக்கும் தேன்ததும்புப் பாவுரை" தந்தருள பலரிருக்கையில், எளியேனைக் கருத்தில் கொண்டது என்தவப்பேறு. குருமகாசந்நிதானம் அவர்கள் **"அடிக்கமலத்தைச் சும்மா தலைமீது சுமத்தினனால் கைம்மாறு உளதோ"** என்று எண்ணிக் கடையேன் கடைத்தேறுவேன்.

தொலைபேசி வழியும் அஞ்சல் வழியும் என்னை ஆற்றுப் படுத்தி அழைத்துச் சென்ற இளையபட்டம் திரு.விசுவநாதன், திருமடம் அவர்களுக்கு, நெஞ்சிற் கனல் மணக்கும் பூக்களை அள்ளித் தருகின்றேன்.

சிவப்பிரகாசர் செந்தமிழ் உயராய்வு மன்றத்தினருக்கு எனது உளமார்ந்த நன்றி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யான் இழுக்கல் உற்று இடறிய பொழுதெல்லாம், எனக்கு ஊன்றுகோலாய் நின்று உற்றுழி உதவிய பேராசிரியர் டாக்டர் கி.சிவகுமார் அவர்களுக்கு இதயம் நிறைந்த நன்றி.

தரிசு நிலத்தில் புதுமாடாய் நுழைந்த எனக்குக் கயிறு பூட்டி, சாலையைச் சரிப்படுத்தித் தந்து பயணத்தைப் பக்குவப்படுத்திய கல்லூரி முதல்வர் டாக்டர் சு.விஜயகாந்தி அவர்கட்கும், தொலைபேசி வழி யான் தந்த தொந்தரவுகளை எல்லாம் தாங்கி, இராப்பகலாக உதவிய பேராசிரியர் டாக்டர் ச. திருநாவுக்கரசு அவர்கட்கும் மற்றும் பேரா.இரா. வள்ளி அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி மலர்களை உரித்தாக்குகின்றேன்.

புதிய பாதையில் நடக்கத் துணிந்த எனக்கு நம்பிக்கையோடு கைகொடுத்து அழைத்துச் சென்ற முதுபெரும் பேராசிரியர்கள் டாக்டர் சித்தலிங்கையா, பேராசிரியர் டாக்டர் சு. திருநாவுக்கரசு ஐயா, பேராசிரியர் தெ.முருகசாமி ஆகியோர்க்கும் இதய மலர்களை இருகை ஏந்தி வழங்குகின்றேன்.

பெற்ற தாய்க்கு ஒருநாள்தான் பிரசவ வலி; ஆனால், மருத்துவம் பார்க்கும் செவிலிக்குப் பலநாள் வலி. அப்படிப் பலநாள்கள் யான் தந்த வலியெல்லாம் பொறுத்து, பிறந்த குழந்தையைச் சீவிமுடித்துச் சிங்காரித்து அழகு பார்க்கும் பேராசிரியர் சொ. அருணன் அவர்கட்கும், வேர்விட்ட மருக் கொழுந்தின் இழைகளை எப்போதும் அள்ளிப் பூச்சூட்டுவேன்!

(தி.இராசகோபாலன்)

எண்: 4, வ.உ.சி தெரு,
மகாலட்சுமி நகர், சேலையூர்,
சென்னை – 600073

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளடக்கம்

1.	மயிலத்தின் மகத்துவம்	12
2.	வீரசைவம்: தோற்றமும் வளர்ச்சியும்	28
3.	சிவம்பெருக்கும் ஸ்ரீசிவப்பிரகாசர்	41
4.	சிவப்பிரகாசர் போற்றும் அருளாளர்கள்	55
5.	சிவப்பிரகாசர் போற்றும் வீரசைவம்	73

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மயிலத்தின் மகத்துவம்

மகத்துவம் பல பெற்ற மயிலாசலத்தில் முதன்மையான அதிசயம், ஸ்ரீபாலசித்தர் இங்கு வருவிக்கப் பெற்றமைதான். திருமால் பத்து அவதாரம் எடுத்தபிறகு (பத்தாவது கல்கி அவதாரம் இன்னும் வரவில்லை) தாமே இந்நிலவுலகிற்கு வருவதில்லை; அருட்தூதர்களைத்தாம் அனுப்பி வைப்பது வழக்கம். வள்ளலார், 'அகத்தே கறுத்து' எனத் தொடங்கும் பாடலில், "எனைஇந்த உலகத்தே இறைவன் வருவிக்க உற்றேன்; அருளைப் பெற்றேன்" என்பார். அவ்வகையில் இவ்வுலகத்தே வருவிக்க உற்ற முதல் அருளாளர், சங்குகன்னர் ஆவார்.

ஏழாம் நூற்றாண்டில் வீரசைவம் தழைக்க வருவிக்கப் பெற்றவர், ஸ்ரீபாலசித்தர். சைவம் தழைக்க அனுப்பப் பெற்றவர், சுந்தரமூர்த்தி சுவாமிகள். "தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப் போதுவான்" என்பார், தெய்வச் சேக்கிழார். "ஆலாசிய மகாத்மியம்" எனும் வடமொழி நூல், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வருகை குறித்து ஒரு புதிய செய்தியைத் தருகிறது. திருக்கயிலாயத்தில் சிவபெருமான் நிலைக்கண்ணாடியைப் பார்த்தபொழுது, அதிலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டு வந்தது; அதுதான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருவுருவம் எனச் சொல்கிறது அந்நூல். ஆனால், சங்குகன்னர் சிவபெருமானுடைய ஓர் பிரதிநிதியாகவே வருகின்றார். அவர் எந்தத் தாய் வயிற்றிலும் பிறக்கவில்லை. அல்லமதேவர் ஒரு தாய் வயிற்றில் வளராமையைச் சிவப்பிரகாசர், "வினையினால் ஒருவன் தருமேனியாளன் அல்லது ஒரு மனிதனாகி நடித்திடும் வடிவன் ஆதலின் அல்லமன்" எனப்பாடுகிறார்.

சித்தர்கள் சிவபெருமானைப் போலவே, "போக்கும் வரவும் அற்ற" புண்ணியர்கள். சித்தர்களுக்குப் பிறப்பும் கிடையாது; இறப்பும் கிடையாது. அப்பரடிகள், "பிறருருவும் தம்முருவும் தாமேயான்" என்றதுபோல், சங்குகன்னர் சிவ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெருமானின் அம்சமாகவே வருவிக்கப் பெற்றவர். இதுவரை வந்த அருட்தூதர்களில் திருச்சின்னங்களோடு வந்த மகான், சங்குகன்னர் ஒருவரே.

செஞ்சடை, குண்டலமணிந்த திருச்செவிகள், இட்டலிங்கம் அணிந்த மார்பு, திருநீறு, உருத்திராக்கம், கல்லாடை, சின்முத்திரையுடன் கூடிய வலக்கை, திருநீற்றுப்பை, மந்திரக் கோல் கொண்ட இடக்கையுடன், பொம்மபுரம் கடற்கரையில் தென்பட்டார், சங்குகன்னர்! இதுவரை அருள்தூதர்கள் குழந்தைகளாக வந்து பிறந்ததுதான் வழக்கம்; ஆனால், சங்கு கன்னர் ஒருவரே வளர்ந்த பாலகனாக வந்து உதித்தார்.

சங்குகன்னர் இளமையிலேயே பல சித்துகளை நிகழ்த் தியமையாலும், கள்ளிப்பாலை உண்டு வாழ்ந்தமையாலும், ஸ்ரீபாலசித்தர் எனும் திருநாமம் பெற்றார். பாற்கடலில் விளைந்த நஞ்சினை உண்டு சிவபெருமான் வாழ்கிறான். அச்சிவபெருமானின் அம்சமாக வந்த ஸ்ரீபாலசித்தர் கள்ளிப் பாலை உண்டு வாழ்ந்தார்; வாழ்விக்கின்றார். மகிமைகள் பல பெற்ற மயில மாமலையில் இஃதும் ஓர் அதிசயம்தானே! **"பொம்மபுரமும் புவியும் புரந்தருளும் செம்மல் சிவஞானி சீர்உணரச் செய்யுமிடம்"** என வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடியது பொருத்தம்தானே!

பொம்மபுரம் சார்ந்தவரைத் தன்வயமாக்கும் என்பதைச் சிவப்பிரகாசர், **"தன்னை மருவினரைத் தானாக்கும் சிவஞானி என்றென்றும் பொருந்தி வாழும் பொம்மபுரம்"** *(நெஞ்சு விடு தூது)* எனச்சுட்டுவார்.

பொம்மபுரத்திலிருந்த ஸ்ரீபாலசித்தருக்கு, நாரதர் எடுத்துச் சொல்லும் அளவிற்கு மயிலாசலம் பெருமை பெற்றதாக அமைந்திருந்தது. சிவப்பிரகாச சுவாமிகள் கயிலைமலைக்கும் மயிலை மலைக்கும் எந்த வேறுபாடும் இல்லை எனும் பொருளில், கயிலையே மயிலை என்னும் நோக்கில், **"கயிலை மலை மீதிருந்த காட்சி போல் வந்து மயிலமலை மீதிருக்கும் வள்ளல்"** *(நெஞ்சுவிடுதூது)* எனப் பாடுகின்றார். மேலும், சாதாரண இடத்திலிருந்து ஐந்தெழுத்தை ஒருமுறை ஓதினால்,

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

ஒரு தடவைக்கு உரிய பலன்தான் கிட்டும். ஆனால், மயிலத்திலிருந்து ஒருமுறை 'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்தை ஓதினால், ஆயிரம் முறை ஓதினமைக்குரிய புண்ணியம் கிட்டும் என்பதைச் சிவப்பிரகாசர், **"முக்கண்ணனார் மந்திரம் ஒன்று ஆயிரமாய் வளர்ந்து பயன் தந்திடும் ஒண்மயிலைத் தண்மலையும்"** *(நெஞ்சுவிடுதூது-201)* என்று வரையறுத்துப் பாடுகின்றார்.

மகாபாரதத்தில் அருச்சுனன் சிவபெருமானிடமிருந்து பாசுபதாஸ்திரத்தை வாங்குவதற்காகக் கயிலையங்கிரிக்குச் சென்று, பஞ்சாக்கினியில் நின்று தவம் செய்கின்றான். அவனுக்கு வந்த சோதனையிலிருந்து அவனைக் காப்பாற்றச் சிவபெருமான், வேடன் வடிவமெடுத்துச் செல்கிறான். ஒரு பன்றியின் நிமித்தமாக அருச்சுனனோடு போரிட வேண்டிய நிர்ப்பந்தம் சிவனுக்கு ஏற்படுகின்றது. விற்போரில் தொடங்கி மற்போர் ஆகின்றது. மற்போரில் சிவபெருமான் அருச்சுனனை ஓங்கி உதைக்கின்றான். அது அருச்சுனனுக்கு ஸ்பரிச தீட்சை தருவதற்காக! அதுபோலவே ஸ்ரீபாலசித்தர் வள்ளி மணாளனோடு மற்போர் செய்கிறார். அப்பொழுது ஸ்ரீபாலசித்தருக்கு ஸ்பரிச தீட்சை கிடைக்கின்றது. மகாபாரதத்தில் அருச்சுனன், சிவன் இருக்கும் கயிலைமலைக்குச் செல்கிறான். மயிலமலையில் ஸ்ரீபாலசித்தர் இருக்கும் இடத்திற்குப் பெம்மான் முருகன் எழுந்தருளுகின்றான். இதுவும் மயிலமலைக்குள்ள ஒரு மகத்துவம் ஆகும்.

'எண்ணரிய திறல் பெற்ற சூரன்' என வள்ளலாரால் வருணிக்கப்படும் சூரபன்மன், முதல் வரத்தையடுத்து, மயிலாக மட்டுமல்லாது, மயிலம்மலை வடிவாகவும் ஆகவேண்டும் என்று முருகனிடம் வரம் வேண்டுமளவிற்கு, மகத்துவம் பெற்றது, அம்மலை. இன்னும், அது மேருமலையைக் காட்டிலும் சிறந்து விளங்கக் கூடியது என்பதைப் "பொன் மேருவினும் மீயுயர் மயிலம் விளங்கிடத் தோன்றும்" என்று ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் பதிற்றுப்பத்து அந்தாதி பகருகின்றது. இது எப்படி? முப்புரத்தை எரிப்பதற்குச் சிவனுக்கு வில் வேண்டும். வில்லாக வளைப்பதற்குத் தான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேருமலை பயன்பட்டது. ஆனால், அதை வளைத்த சிவனே சிவஞானியாக வந்து தங்குவதற்குப் பயன்பட்ட மலை, மயிலமலை. எனவே பண்ணுருட்டி அய்யர், இதனை "அறம் தழைக்கும் மயிலை வரை" என்றார்.

'அதிசயம் அநேகமுற்ற பழநி' எனப் பழநிமலையைப் பார்த்து வியந்து நின்றார் அருணகிரிநாத சுவாமிகள். பழநிமலையைப் போலவே, பக்தர்கள் பார்த்து வியந்து நிற்கும் ஒரு மலை, மயிலமலை ஆகும். '**கொலை கொண்ட**' எனத் தொடங்கும் திருப்புகழின் மூலம் மயிலாசலத்தைப் பார்த்தும், அருணகிரியார் வியந்து நின்றிருக்கிறார் என்பதை அறியலாம்.

"அலைசூழ் கடல் கோ, கோ என ஒலித்து, வாய்விட்டு நின்று ஓலமிட, அதனுள் மாமரமாய் நின்றான் சூரபன்மன். அவன் வைத்திருந்த வில் வேறுபட்டு விழ, பொடியாகுமாறு, ஒளிவிடுகிற ஒளியைக் கொண்ட வேலாயுதத்தை ஏவினான் முருகன். அவ்வேல் பெருமை நீண்டது; நேர்மை நிறைந்தது; நெருப்பை உமிழக் கூடியது. அத்தகைய வேலைச் செலுத்திய வீரன் - தீரன் முருகன்.

முருகன் அருமையான வடிவுடையவன்; ஒப்பற்றவன். மலையை இருப்பிடமாகக் கொண்ட வேடுவர்களில் காட்டில், வேற்று வடிவமெடுத்துச் சென்று, வள்ளிப்பிராட்டியின்மீது அன்புவைத்து, மோகங்கொண்டு உலாவியவன், குமாரக் கடவுள். குன்றத்துக் குமரன் ஞானம் மிகுந்த ஞானாசிரியன்: வேலாயுதன். தொண்டனாக வந்து உபதேசத்தைச் செய்த பெருமையினன், முருகன். மயிலம் என்ற குளிர்ந்த பெருமையான மலையினில் வாழ்பவன்; தேவர்கள் போற்று கின்ற பெருமான்.

மாதர்களுடைய கண்கள், கொலைத் தொழிலைச் செய்யும் போர்க்குரிய அம்பாகவும், வாளாகவும், நஞ்சு நிறைந்த பாவத்தொழில் செய்யும் வேலாகவும் தென்படுகின்றன. மேலும், அவை சேல்மீன்கள் போன்றும், காதிலுள்ள தோட்டினைத் தொடுமளவுக்கு உலாவி வரும் கெண்டை

Digitization by Hindu-Heritage-Foundation of America 1 HHFA(USA)

மீன்களாகவும், மானாகவும் மனத்திற் பதிகின்றன. அவர்கள் குயில் போன்ற இனிய குரலினாலே இனிய சொற்களைப் பேசக்கூடியவர்கள். நூலிழை போன்ற மெல்லிய இடை-யினாலே வருத்தக் கூடியவர்கள். மேருமலை போன்ற தனங்களை உடையவர்களால், பலவகையாக நெஞ்சம் கலங்குகின்றது. என்நெஞ்சம் நெருப்புலையில் பட்ட மெழுகு போல் உருகுகின்றது.

நான், காமம் என்னும் அலைகள் வீசும் கடலில் மூழ்கி, உடல் ஐந்து பாதகத்துக்கும் ஈடாகி, நோயால் அழிவேனோ? எமதூதர்கள் கையிலே பாசக்கயிற்றையும் சூலாயுதத்தையும் தாங்கி, ஆரவாரத்துடன் என்னை நெருங்கி வருகிறார்கள். மயிலத்தில் வீற்றிருக்கும் மாமயிலோனே! உன் பாதமலர்களை அருள்வாயே" என அத்திருப்புகழ் பேசுகிறது. 370ஆவது திருப் புகழ் வருமாறு:

கொலைகொண்ட போர்விழி கோலோ வாளோ
விடமிஞ்சு பாதக வேலோ சேலோ
குழைகொண்டு லாவிய மீனோ மானோ எனுமானார்
குயில்தங்கு மாமொழி யாலே நேரே
யிழைதங்கு நூலிடை யாலே மீதூர்
குளிர்கொங்கை மேருவி னாலே நானா விதமாகி

உலைகொண்ட மாமெழு காயே மோகா
யலையம்பு ராசியி னூடே மூழ்கா
வுடல்பஞ்ச பாதக மாயா நோயா லழிவேனோ
உறுதண்ட பாசமொ டாரா வாரா
எனையண்டி யேநம னார்தூ தானோர்
உயிர்கொண்டு போய்விடு நாள்நீ மீதா ளருள்வாயே

அலைகொண்ட வாரிதி கோகோ கோகோ
எனநின்று வாய்விட வேநீள் மாசூ
ரணியஞ்ச ராசனம் வேறாய் நீறா யிடவேதான்
அவிர்கின்ற சோதிய வாரார் நீள்சீ
ரனலங்கை வேல்விடும் வீரா தீரா
அருமந்த ரூபக ஏகா வேறோர் வடிவாகி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மலைகொண்ட வேடுவர் கானூ டேபோய்
குறமங்கை யாளுட னேமா லாயே
மயல்கொண்டு லாயவள் தாள்மீ தேவீழ் குமரேசா
மதிமிஞ்சு போதக வேலா ஆளா
மகிழ்சம்பு வேதொழு பாதா நாதா
மயிலந்தண் மாமலை வாழ்வே வானோர் பெருமாளே

பெருமாளுக்குப் பல திவ்விய தேசங்கள் உண்டு என்றாலும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற தலங்களுக்கோர் தனிச்சிறப்பு உண்டு. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் மயிலாசலத்தின் மீது ஓர் ஒப்பற்ற பதிகம் பாடியிருக்கின்றார். இப்பதிகத்தை ஓர் அருளிச் செயல் எனச் சொல்லலாம். வண்ணச்சரபம் மயிலத்து வள்ளி மணாளனை வேண்டுமாறு: "மன்மதனுக்கு நாணம் ஏற்படும் வண்ணம் குளிர்ந்த மயிலமலை மீது வீற்றிருக்கும் முருகா! யான் உன் பாதத்தில் அணிவதற்குத்தான் பாமாலை சூடிக் கொடுத்தேன். ஆனால் நீ உன் பெருங்கருணையினால், தோள்களின்மீதே அணிந்து கொண்டாயே! என்னை உன் சொந்தம் என்று முன் சொன்னாய்: ஆனால், இன்று உன் அருளுக்கு ஏங்க விட்டிருக்கின்றாய், என்மேல் உனக்கு இரக்கம் இல்லையா?

திருநீறு அணிந்து அறியாதவர்கள் என்னைச் சுடு சொற்களால் சுடுகின்றார்கள். உன் கருணை வெள்ளத்தை எனக்களித்து ஆண்டருள்வாய்! சாதாரண மனிதர்களுக்கு எதிரில் நான் இப்படி இருப்பதற்கு உனக்குச் சம்மதம் கிடையாது. என்பதை நான் அவர்கட்கு எப்படி எடுத்துரைப்பேன்? ஏழிசையால் பாடும் பாவலர்களுக்குப் பரிந்து அருள்புரிபவன் சிவபெருமான். அவனுடைய பிள்ளையாகிய நீ என்னை இப்படி வைத்திருக்கலாமா? பாவனை மட்டும் இருந்தால் போதும்; பாவித்தல் வேண்டாம் எனக் கூறித்திரிபவரின் திமிர் அடங்கும்படியாக நீ எனக்குப் புகழை வாரித் தரவேண்டாமா? மெல்லிடையாரின் மயக்கத்தால், நான் ஒடிந்து நிற்கின்றேன். மேலும் பொருளாசையாலும், பொல்லாங்கு உற்று நிற்கிறேன். இனிமேலாவது என்னிடம் இரக்கம் காட்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாட்டாயா? தெள்ளுதமிழ்ப் புலவோரின் பாமாலையைத் தோள்களில் சூடும் அயில்வேலா! உன் திருப்புகழைப் பாடும் திருநெல்வேலிக்காரன் நான். எனக்கு உயர்வையும், உய்தியையும் தருவாயாக" என வண்ணச்சரபம் வழிபட்டுப் பாடுகிறார். அவருடைய பதிகத்தால், மயிலம் பாடல் பெற்ற தலமாயிற்று. பதிகம் வருமாறு;

தாளில் அணியத் தமியேன் தொடுத்ததமிழ்
தோளில் அணியத் துணிந்தானே - வேளினுக்கு
நாணம் பெருக்கி நளிர்மயில மாமலைமேற்
சேணகத்தோர் போற்றநிற்கும் சேய் (காப்புவெண்பா)

இந்தமட் டும்சலித்தேன் உளத்து இரக்கம் இல்லாயோ
சொந்தம் எனஎன்னை முன்னாள் சொன்னசொல் லும்பிழையோ
செந்தமிழ்க் குன்றுடையான் பணி சீருடைத் தாளானே!
அந்தரத் தோர்துணைவா மயி லாசலத் தம்மானே 1

உன்னைமுன் ஈன்றபிரான் தொழும் ஒருவற் கீந்ததுபோல்
பொன்னைநல் லகத்தெரியாய் ஒரு பூவையைத் தந்தனையே!
மின்னைஒப் பாம்இடைசேர் இரு மெல்லிய லார்கணவா!
அன்னையு மாவானே! மயி லாசலத் தம்மானே! 2

கற்கிணற் றால்அடியேன் கொளும் கட்டமெ லாம்தீர்ந்துன்
நற்கிரு பைக்காளாந் தினம் நானிலத்(து) எய்தாதோ?
சொற்கிளி ஒன்றுடையாய் அருட் சோதி வடிவேலா!
அற்கிடை வந்தொளிப்பாய்! மயி லாசலத் தம்மானே 3

பந்துறழ் கொங்கைநல்லார் தரு பாசம திற்கொடிதாம்
வெந்துயர், கற்கிணற்றால் மிக மெலிந்து ளேன்இரங்காய்!
இந்துறை யும்சடையார் விழி ஈன்றரு ளும்புதல்வா!
ஐந்துவன் னச்சிகியாய்! மயி லாசலத் தம்மானே 4

காணமி ரந்தலைந்தேன் தனைக் கற்றொட விட்டதனால்
நாணமி குந்துஉழன்றேன் புனல் நல்கி யளித்தருளாய்!
வேணவ ரந்தருவாய்! குற மின்கொடி தன்கொழுநா!
ஆணமு ளார்க்கெளியாய்! மயி லாசலத் தம்மானே 5

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீறுபு னைந்தறியார் பகர் நிந்தை சுடத்தளர்ந்தேன்
ஊறுபு னற்கொடுத்(து) ஆண்டெனைஉன்அடி யாருள்வைப்பாய்!
ஏறுடை யார்புதல்வா! தகர் ஏறும் இளங்குமரா!
ஆறுமு கத்தரசே! மயி லாசலத் தம்மானே 6

பூரண மெய்ப்பொருள்நீ எனப் புகன்று நாடிலர்போற்
சீரண மாகாமல் அருள் சிறிது நல்காயோ?
வாரண கேதனத்தாய்! மலை மடந்தை கைம்மதலாய்!
ஆரண னைப்புடைத்தாய் மயி லாசலத் தம்மானே! 7

இம்மனி தர்க்கெதிர்நீ எனை இப்படி வைத்திடலுன்
மெய்ம்மனச் சம்மதமன் றென விளக்கு வான்எவனோ?
செம்மலை நேர்முருகா! பசுந் தினைப்பு னக்கிழவா!
அம்மண ரைக்கெடுத்தாய்! மயி லாசலத் தம்மானே 8

ஏழிசைச் செந்தமிழோர்க்(கு) அருள் இறைவர் இன்னருளால்
வாழிய சேயாம்நீ எனை வருத்தல் வண்மையதோ
கோழி யணிக்கொடியாய்! இளங்குறத்தி தோள்புணர்வாய்!
ஆழியிற் சூர்தடிந்தாய்! மயி லாசலத் தம்மானே! 9

பாவனை யேபொருளாம் எனப் பகரும் பண்புடையார்
நாவடங் கும்படிக்காம் புகழ் நல்கவல் லாயலையோ!
மூவகையாம்தொழிலோர்தொழுமுருகனே!முனிவோர்க்(கு)
ஆவலெல் லாம்தருவாய்! மயி லாசலத் தம்மானே! 10

இருட்க ருங்குழலார் மருள் எய்தி இடைந்துளநான்
பொருட்பொல்லாங்குமுற்றேன் இனிப் பொறுக்கஒண்ணாதிரங்காய்!
தெருட்கொள் சீரியர்வாய்த் தமிழ்ச் சீர்விழை யும்புயத்தாய்
அருட்பெ ருங்குணத்தாய்! மயி லாசலத் தம்மானே 11

அந்தண் மலர்ச்சோலை மயி லாசலத் தம்மானைச்
செந்தமிழ் நெல்வேலி நகர்த் திருப்பு கழ்க்காரன்
நிந்தனைச் சூடாறச் செயும் நீர்விழைந் தோதியபா
நந்தமக் கேற்றமென்பார் பெறும் நன்மை மிகப்பெரிதே 12

மலை ஒன்றன்மேல் அடுக்கியிருப்பது போன்று, இங்கு அற்புதங்களும் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சீர்காழியிலே ஒரு குழந்தைக்குப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பார்வதியும் பரமேசுவரனும் ஞானப்பால் கொடுத்து, அக்குழந்தையைச் சைவத்தைப் பரப்பியவர் ஆக்கினர்.

"சைவந் தழைக்கத் தழைத்தாண்டி - ஞான
சம்பந்தப் பேர்கொண்டு அழைத்தாண்டி" (கீர்த்தனை)

என வள்ளலாரும் பாடிச் சென்றுள்ளார். அதுபோன்று வீரசைவம் தழைக்க ஸ்ரீபாலசித்தர் ஒரு குழந்தையை உருவாக்கினார். சிவபெருமான், உருவான குழந்தைக்கு ஞானப்பாலைக் கொடுக்கச் செய்தார்! ஸ்ரீபாலசித்தர் தம்முடைய பிரசாத சேடத்தால், ஒரு குழந்தைப் பேற்றுக்கு அருள்பாலித்து, அக்குழந்தையைத் தம்முடைய சீடராகவும் ஏற்றுக் கொண்டார்.

சீர்காழிக் குழந்தை, ஒரே ஒருமுறைதான் ஞானப்பால் உண்டது. ஆனால், 2ஆம் பட்டமாகிய சிவஞான பாலய தேசிகர் முப்போதும் பாலையே பருகி, பாலயர் எனும் திருப்பெயர் பெற்றார். திருஞானசம்பந்தர், திருமருகலில் அரவுதீண்டி மாண்ட வைப்பூர்த் தாமனைப் பதிகம் பாடியும், திருநீறு பூசியும் எழுப்பியது போல், ஆதிசிவஞானபாலய தேசிகர், மயிலத்தில் அரவு தீண்டி மாண்ட ஒருவனைத் திருநீறு பூசி, உயிர்பெற்று எழச் செய்தார். திருப்பாச்சிலாச்சிரமத்தில் கொல்லிமலைக் கிழவனுடைய மகள், முயலகன் நோய்பற்றிப் படாத பாடுபட்டாள். ஞானசம்பந்தர் இறைவனை வேண்டி, அப்பெண்ணின் நோயை நீக்கிக் குணப்படுத்தினார். அவ்வாறே 2ஆம் பட்டம் சிவஞானபாலய சுவாமிகள் காஞ்சி புரத்தை ஆண்ட நவாபினுடைய மனைவி, சூலைநோயால் பட்ட துன்பத்தைத் தம் தவவலிமையால் நீக்கியருளினார்கள்.

2ஆம் பட்டமும் தம்முடைய தீட்சாகுருவுமாகிய சிவஞான பாலய சுவாமிகள், நோய் நொடிகளிலிருந்தும், பேய் பிசாசுகளிடமிருந்தும் தம்மைக் காப்பதாகச் சிவப்பிரகாசர் விளம்பியுள்ளார்.

"உடற்கு விளையும் சூர்தாக்கும் ஒழித்தற்கு அரிய பலபிணியும்
உடற்றும் பசிநோய் முதலனவும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கழலக் கருணைபுரிந்து எம்மைக் காக்கும் சிவஞானி

(சிவ.பிள்.தமிழ்2)

14.12.1744 (திங்கட்கிழமை) அன்று புதுச்சேரியில் ஆளுநர் டியூப்ளே தம் துணைவியாருடனும், ஆனந்தரங்கம்பிள்ளை அவர்களுடனும் ஆதீன கர்த்தாவாகிய ஸ்ரீசிவஞானபாலய சுவாமிகளிடம் ஆசீர்வாதம் பெறுவதற்காக மயிலம் திரு மடத்திற்கு வருகை புரிந்திருக்கின்றார். ஆறாம் பட்டம் அவர்கள் திருமுன்பு, ஆறு கெஜம் சகலாத்தும் (துணி) இரண்டு பன்னீர் செம்புகளும் சமர்ப்பித்து, வணங்கி, ஆசீர்வாதத் தையும் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். மேலும், மலைக்குக் கீழேயிருக்கும் புளியந்தோப்பிலே தித்திப்பு மேசை போட்டுக் காபியும் குடித்து விட்டு, ஆளுநர் பரிவாரம் நகர்ந்திருக்கிறது.

முருகனையும் அழகையும் எவ்வாறு பிரித்தறிய முடியாதோ, அதுபோலவே கௌமாரத்தையும் (திருமுருகத்துவம்) பாம்பன் சுவாமிகளையும் பிரித்தறிய முடியாது. முருகப்பெருமானே வாழ்வாகவும், வாழ்வே முருகப்பெருமானாகவும் வாழ்ந்தவர் ஸ்ரீபாம்பன் சுவாமிகள். அத்தகைய ஸ்ரீபாம்பன் சுவாமிகள் மயிலம் முருகனை நினைந்து நைந்து உருகுகின்றார்.

“மயிலத்து வாழ்வோனே! உன் திருவடியை எண்ணி யான் மனைவி மக்களை எல்லாம் விட்டகன்றேன். உண்மையான பக்தனிடம் நீ அருள் வைக்காமையினால் கண்ணீர் ஆறாகப் பெருகுகின்றது. உயிர்களை நாளும் வேட்டையாடிக் கொன்று, அதன் இறைச்சியை உண்டு வாழ்கின்ற வேடுவர்களும், நாளும் கள்ளுண்டு களிப்போரும், என்றும் நிலை பெற்று நிற்கும் உன்னைச் சூழ்ந்து நின்று, புண்ணியத்தைப் பெற்றார்கள்-நானோ உன்னருள் பெறாது, வாடி வதங்குகின்றேன்!

உண்மையில்லாதவரும் காமுகர்களும் கள்வர்களும் கூட மயிலாசலனே! உன்னடி அடைந்து உய்வு பெற்றிருக்கிறார்கள். ஆனால், வாழ்நாள் முழுவதும் உன்னடியே சிந்தித்து வாழ்கின்றேன். என்னை மட்டும் அலைய விட்டிருக்கின்றாயே, இது நியாயமா? இருப்பதைக் கொடுக்காது மறைத்தவர்களும், நல்நியாயங்களுக்குப் புறம்பாக நடந்தவர்களும் நின்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சேவடியைச் சிந்தித்து உய்தி பெற்றார்கள். ஆனால், பலகாலும் உன்னடியையே பாடிக் கொண்டிருக்கின்ற எனக்கு மயிலாசலனே! உன்னருளை அருளாதது ஏனோ? ஆராய முடியாத பாவங்களைச் செய்தவர்கள் எல்லாம், உன் திருவடியை நெஞ்சிருத்திக் கடைத்தேறினார்கள். ஆனால், தாராளமாய் உன் திருவடிகளையே துதித்துக்கொண்டிருக்கும் எனக்கு அருளாதது ஏனோ?

போலியான வேடம் பூண்டு உத்தமரைப் போல் வாழ்ந்தோ ரெல்லாம் உன்னைத் தோத்தரித்து, உன்னருகில் வாழ்கிறார்கள். அத்தகைய குறையொன்றுமில்லா யான் உன்னருளைப் பெறாவிடில் வாழ்வேனோ? காட்டிலே உள்ளோர்க்கும் நாட்டிலேயுள்ளோர்க்கும் கருணையினால், உன் தாமரை போன்ற திருவடிகளை நீட்டினாய்! உன்னுடைய திருவருளால் யான் வினையகன்று வாழ வழி செய்ய மாட்டாயோ? வெண்பாக்களாலும், செம்மையான பாடல்களாலும், பொன்போன்ற பாடல்களாலும், கரும்புச்சாறு போன்ற பாடல் களாலும் உன்னைப் பாடிக் கொண்டிருக்கிறேன் மயிலா சலனே! உன் கண்பார்வை பட்டு, யான் கடைத்தேறுவது எக் காலம்?

சிலகாலம் உன்னை நான் மறந்து வாழ்ந்தேன். உன் நினைவு வந்ததற்குப் பின் என் இளமைக்காலம் தொட்டு உன்னைச் சேவித்து வருகின்றேன்! என்னை நீ மறப்பதற்கு நியாயமில்லை! சிந்தை மயங்காமல் என்னைச் சித்தாந்த வீட்டடைவிப்பாய்! தெய்வயானை, வள்ளியர்க்கு வாய்த்த மணாளனே! சந்த முனிவராகிய அருணகிரிநாதரின் நெஞ்சப் பெரும் தாமரையே! என்னையும் வாழ்விப்பாய்!” என மயிலா சலனை மனமுருகி வேண்டுகின்றார், ஸ்ரீபாம்பன் சுவாமிகள். பதிகம் வருமாறு:

சீரார் தெருளாக்கச் சேவடியே சேர்வேனென்று
ஊரார் மனைவிமகார் உற்றாரெல் லாமகன்றேன்
நாரார் மனத்திடை நீ நல்லன்பு வையாயேல்
வாராதோ கண்ணீர் மயிலமலை வாழ்குகனே. .. 1

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

நன்றுகறை யெண்ணா நிடுதேனர்போல் நாளுமுயிர்
கொன்றுபுசித் தோருமிழி கொங்குகுடித் தோருமென்றும்
பொன்றுதலி லாவுனைச்சூழ் புண்ணியத்தி னுய்ந்தார்நான்
மன்றுபட்டும் எய்த்தேன் மயிலமலை வாழ்குகனே. .. 2

கட்டுரையில் லாதாரும் காமிகளும் கள்வருநற்
சிட்டரென வானாருன் சேவடிபா வித்தளவில்
நெட்டுலகில் நின்னடியே நெஞ்சிருத்தி யுன்னொருநான்
மட்டுமலை கின்றேன் மயிலமலை வாழ்குகனே. .. 3

நல்காவன் னெஞ்சருநன் ஞாயம் பிறழ்ந்தவரும்
செல்கால மெய்துமுனுன் சேவடிசிந் தித்துய்ந்தார்
பல்காலு நின்னடியைப் பாடுமெனக்கு உன்அருள்தான்
மல்காது என்னே மயிலமலை வாழ்குகனே. .. 4

ஆராய வொண்ணா அதிபாவ மேபுரிந்த
நீராரு நின்னுருவை நெஞ்சிருத்தி உய்ந்தார்கள்
தாராள மாஉன் இதந்து தாள்துதிக்கு மெற்குன்அருள்
வாராத தென்னே மயிலமலை வாழ்குகனே. .. 5

பாழ்வேட நம்பிப் பதிதர்என நின்றோரும்
சூழ்வேக முள்ளோரும் தோத்திரித்து வாழ்ந்ததுண்டு
தாழ்வேதும் இல்லாவுன் றன்னைநனி கூடினல்லால்
வாழ்வேனோ நான்தான் மயிலமலை வாழ்குகனே. .. 6

காட்டார்க்கும் நாட்டார்க்குங் காசில் கருணையினால்
தாள்தா மரைகொடுத்தாய் தாள்பழிச்சும் என்னைவினை
ஆட்டாது பேரருளால் ஆட்டி யளாவ,வரம்
மாட்டாயோ மாண்பார் மயிலமலை வாழ்குகனே. .. 7

வெண்பாவுஞ் செம்பாவும் வித்தாரப் பொன்பாவும்
பண்பார் கரும்பாவு நின்பேரிற் பாடிடுவேன்
கண்பார்வை வந்தெனது கம்பலையைக் காதியருள்
வண்பாத வம்சால் மயிலமலை வாழ்குகனே. .. 8

நின்னைமிகப் பொச்சாந்து நீளுலகில் நில்லாமல்
தென்னிளமை யில்தானே சேரவந்த பாக்கியநீ
என்னையிது நான்மறக்க ஞாயமிலை யெங்கணுமாய்
மன்னுமதி தாராய் மயிலமலை வாழ்குகனே. .. 9

Digitization by Hindu-Heritage-Foundation of America - HHFA(USA)

சிந்தைமயங் காமலெனைச் சித்தாந்த வீட்டிடைவை
கந்தமணி தெய் வமகள் காட்டார் மகள்கொழுநா
சந்தமுனி நெஞ்சத் தடங்கமல மேஅமுதால்
மந்திகுதி கொள்ளு மயிலமலை வாழ்குகனே. .. 10

தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்கள் முருக பக்தியில் தம்மைக் கரைத்துக் கொண்டவர். அப்பெருந்தகை மயிலம் திருமடத்துக்கு வருகைபுரிந்து, அம்மலையின் அழகிலே மயங்கிவிடுகிறார். மயிலம் மலையைச் சுற்றிப் பச்சைப் பசேலென்று, செடிகொடிகள் மரகதப்போர்வை விரித்தாற் போல் படர்ந்திருக்கிறது. அந்த இயற்கையழகிலும் தெய்வச் சூழலிலும் தம்மை மறந்த தமிழ்த்தென்றல் "பைங்கடலுக்கு மத்தியில் ஒரு படகு மிதப்பது போல், பச்சைப் பயிர்களுக்கு நடுவில் மயிலம் மலை பெருமிதத்தோடு வீற்றிருக்கிறது. பூமிக்கு மேலேயுள்ள வானவர்களும் பூமிக்குக் கீழேயுள்ளோர்களும் வணங்கத்தக்க முருகன், மயிலம் மலைமீது வீற்றிருக்கிறான். பலநாள்கள் மயிலாசலனை வணங்கி மகிழாமல் வறிதே காலத்தைக் கழித்து விட்டேன். முருகா! கடந்ததை மறந்து, என்னைக் கடைத்தேற்றுவாயாக!" என்று வள்ளி மணாளனை வேண்டுகிறார்.

பதிகம் வருமாறு:

பசுங்கடலில் மிதக்கின்ற படகே போன்று
பயிர்சூழ ஓங்கிநிற்கும் பரிவுக் கோயில்
விசும்புள்ளார் பாதலத்தார் விரும்பி யேத்த
வீற்றிருக்கும் பெருமானே! விமலா! பாசம்
நசுங்குவழி காணாது நாயேன் பன்னாள்
நாயகனே! கழித்துவிட்டேன் ஞானம் இன்றுன்
வசம்பெறவே வந்தடைந்தேன்; வள்ளல் பார்த்து
மருள்நீக்கி அருள்செய்க மயில வாழ்வே!

மயிலாசலத்தின் மகத்துவம் பாவேந்தர் பாரதிதாசனை யும் தன்பக்கம் ஈர்த்திருக்கிறது. பிற்காலத்தில் பாவேந்தர் பகுத்தறிவுவாதியாக மாறிப்போனாலும், தொடக்கத்தில் வள்ளிமணாளன் அவரை வெகுவாகவே வசப்படுத்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யிருக்கிறான். மயிலத்தை வலம்வரும் பக்தர்கள் குடும்பத்தில் தானும் பிறக்கவேண்டும் என்று அவர் விரும்புவதைக் கீழ் வரும் பாடலால் அறியலாம்.

எங்கு நோக்கினும் புள்ளினத்து இன்னொலி
இடையில் வேடர்செய் ஆட்டங்கள் பாட்டுகள்
தொங்கும் மாலையின் வெள்ளருவிக் குலம்
தூர நின்றிழி போதொரு சந்தப்பண்
தொழுபக்தர் முருகாவென்
றழுகைக்கண் ணெழுமோசை
சுரமொத்த கரதாளம்
நிரையொத்த திடிமேளம்
சுற்றிவருவார் குடியிலுதிப்பேனோ - உனை
சுப்புரத்தினம் தமிழிற் றுதிப்பேனோ?"

மேலும், மயிலம் சிவசண்முகர்மேல் பஞ்சரத்தினக் கீர்த்தனையே பாடியிருக்கிறார் பாவேந்தர் பாரதிதாசன். தியாகப் பிரும்மம்தான் முதன்முதலில் இராமபிரான்மீதும், அம்பிகை மீதும் பஞ்சரத்தினக் கீர்த்தனை பாடியவர். அவர் பாடியது ஒரு தற்செயல் நிகழ்ச்சி. ஆனால், பாவேந்தர் பாடியது பக்திப் பரவசத்தால்! திருவையாற்றிலிருந்த தியாகய்யர் வீட்டிற்குக் கேரளாவிலிருந்து கர்நாடக இசையில் அசாத்திய திறமை பெற்ற ஒரு சங்கீத வித்வான் வருகிறார். அவர் பெயர் க்ஷட்கால கோவிந்த மாரார் என்பதாகும்.

கோவிந்தமாரார் ஆறுகாலங்களில் (பீட்ஸ்) உச்சஸ்தாயியில் நின்று பாடக்கூடியவர். அவருடைய அசாதாரண ஆற்றலைக் கண்ட தியாகய்யர் தம்மை மறந்தநிலையில், எந்தரோ மகாநுபாவலு என ஐந்து கீர்த்தனைகள் பாடிவிடுகிறார். ஆனால், பாவேந்தர் முருகபக்தியில் மூழ்கிப் பஞ்சரத்தினக் கீர்த்தனை பாடுகிறார். சான்றுக்கு ஒரு கீர்த்தனையைக் காணலாம்.

கனியுதடு புன்னகை கொழிக்கமுக நிலவுதொறும்
கட்டவிழ் குழல்மொய்ப்பதைக்
கையால் விலக்கியே ஒய்யாரமாக நடை
காட்டி என் னகமீதிலே

Digitization by Hindu-Heritage-Foundation of America - HHF(USA)

கனல்மேனி இருள்கடிய வருகோலம் அதுகாணக்
கடும்பகை இருப்பதுண்டோ?
கதியிதென உலகெலாம் வதியும்எழில் மயிலம்வாழ்
கந்தா! குழந்தைவேலா!

பாவேந்தர் பாரதிதாசன் அப்பழுக்கற்ற தமிழ்ப்புலமை பெற்றவர். என்றாலும் மயிலவேலனைப் பாடும்போது, ஏதேனும் குற்றம் ஏற்பட்டுவிட்டால், என்செய்வது எனக் கவலைப்படுகிறார்.

எனவே, தாம் பாடப்போகின்ற 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுதில்' ஏதேனும் வழுவேற்படாமல் காக்கவேண்டும் என்று புதுவை மணக்குள விநாயகனை வேண்டுகிறார். பாடல் கீழ்வருமாறு;

சீர்மணக்கும் தென்மயில வெற்பில் திருமுருகன்
பேர்மணக்கும் பாட்டில் பிழையகல -- ஓர்மணக்கு
ளத்தனப்ப னற்களிற்றி ணைப்பதத்தி னைத்துதிப்ப
னெத்தனப்ப டிக்குவெற்றி யெற்கு

நல்லாற்றூர்ச் சிவப்பிரகாச சுவாமிகளின் உணர்வோடும், ஆன்மாவோடும் ஒன்றியது, மயிலாசலம். சிவப்பிரகாசரின் பெருமிதப் பார்வையில், கீழ்வருமாறு காட்சி தருகின்றன

பொம்மபுரமும் திருமடமும்:

திருமடத்தின் அடியவர்களுக்காகச் சமைக்க, அரிசி கழுவிய நீர், குளம்போல் தேங்கி நிற்கும்; அதில் கழுநீர்ப் பூக்கள் மலரும். சமையற் புகையானது மேகமாகி மூவுலகையும் காக்கும். ஆகமநூல் விதித்த நீதியைக் கடவாத ஒருகோடி அந்தணர்கள் வயிறு நிறையக் கொள்ளும் உணவில் வருபயனை, ஒரு சிவயோகிக்கு மனம் விரும்பியிடும் உணவினாலே பெறலாம் என்றாலும், திருமடத்தில் ஒருகோடி சிவயோகிகளுக்கு உணவினை மகிழ்ந்து சமைப்பார்கள். (நெஞ்சுவிடுதூது, கண்ணி - 216-219)

மயிலாசலம் முன்னைப் பழமைக்கும் பழமையும், பின்னைப் புதுமைக்குப் புதுமையும் கொண்டது. சென்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பையும் ஒருசேரப் பெற்றது. திருவருளும் குருவருளும் ஒருசேரச் சித்திக்கும் இடம் மயிலாசலம் ஆகும். அதிசயம் அநேகம் உற்ற மலை, மயிலாசலம்! 'சித்தர்கள் நம் கண்களுக்கு ஊடாடியும் ஊடாடாமலும் இருந்து, அருள்பாலிக்கும் குருவருள் ஓங்கும் தலம் மயிலம்'.

(மலையைச் சுற்றியுள்ள பயிர்நிலங்கள், ஸ்ரீபாலசித்தரால் அருள்பெற்ற சிவநேசர்கள், நிவந்தமாக அளித்தவை ஆகும். மலையடிவாரத்தில் *1000* ஆண்டுகள் பழமையுடைய ஒரு தீர்த்தக்குளம் இக்கிறது. வராகநதிக்கு அழகு சேர்க்கும் இக்குளத்தில்தான் ஸ்ரீபாலசித்தர் நாள்தோறும் நீராடுவார்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீரசைவம்: தோற்றமும் வளர்ச்சியும்

சமயங்களில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியின் உச்சமே, வீரசைவம் எனலாம். இந்து மதத்தில் - சைவ சமயத்தின் உச்சியில் பழுத்த பழமே வீரசைவம் ஆகும். கிடைத்திருக்கிற வசதி, நம் தேவைக்கேற்றவாறு வளைந்து கொடுக்கவில்லையென்றால், பொருத்தப்பாட்டிற்குரிய ஒன்றைத் தேடிப் போவது, மனித இயல்பு. அப்படிக் கிடைக்கின்ற மார்க்கங்களுக்கு நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை இல்லாது போனதால், நம் ஞானத்திற்கு எட்டியது வீரசைவம் எனும் மார்க்கம் ஆகும். **இக்கோட்பாடு எந்தச் சமயத்தையும் எதிர்த்து வந்ததன்று; எல்லாச் சமயங்களையும் ஏந்திப் பிடித்ததால், விளைந்ததே வீரசைவம் எனலாம்.**

ஐவகை ஒழுக்கம், எண்வகைக் காப்பு, அறுவகை இணைப்பு எனும் மூன்று தூண்களில் நிற்கும் மாளிகைதான், வீரசைவம். இங்கே வீரம் என்பது, எந்தப் போருக்கும் மல்லுக்கும் செல்கின்ற வீரம் அன்று. இட்டலிங்க தாரணத்தில் எந்த எதிர்ப்பு வந்தாலும், அதைத் தாங்கிக் கொண்டு, கோட்பாட்டில் உறுதியோடு நிற்கும் மனநிலைதான், வீரம். **'வீரம் என்னால் விளம்பும் தகையதோ'** என்று தெய்வச் சேக்கிழார், பேசிய வீரம்தான், வீரசைவத்தின் வீரமாகும். மேலும், 24ஆவது தீர்த்தங்கரராகிய மகாவீரர் கடைப்பிடித்த வீரம்தான், வீரசைவத்தின் வீரமும் ஆகும். யாரிடத்தும் எதையும் கேட்டுப் பெறாமைதான் வீரம்.

மகாவீரர் என்று வர்த்தமானரை அழைத்தமைக்குக் காரணம் **"அவர் எல்லாவற்றையும் கண்டவர்; எல்லாவற்றையும் அறிந்தவர்; எல்லாவற்றையும் வென்றவர்"** என்பதாகும். இவ்விலக்கணம் வீரசைவத்திற்குப் பொருந்தும்.

அருமறை முடிவும் சீர்சால் ஆகம முடிவும் ஒத்துப்
பொரும்மறம் இலாமல் முற்றும் பொருளினை விளங்கக் காட்டித்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

**தரும்முறை அதனால் வீர சைவமே தலைமைத் தாம்இவ்
இருமறு வறுநன் னூலும் இதில்பிர மாணம் ஆகும்**

-- சிவப்பிரகாசர், பிரபுலிங்கலீலை, பாடல் 1144

தொன்மைவழி வீரசைவம்:

மனிதன் தோன்றிய அன்றே, வீரசைவமும் தோன்றியதாகப் பௌராணிகர் கூறுவர். குழந்தையைப் பெற்றுவிட்டால், தாயினுடைய கடமை முடிந்ததா? அதனைப் பேணி வளர்ப்பதற்கு ஒரு செவிலித்தாயும் வேண்டுமல்லவா? எனவே மனிதனைப் பிறப்பித்த சிவன், வீரசைவம் எனும் செவிலித்தாயையும் சேர்த்து அனுப்பியிருக்கிறான் போலும். **'உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்து என்னுளம் மன்னி, கருத்திருத்தி, ஊன்புக்கு'** எனக் கண்டபத்தில் மணிவாசகர் பாடியது நோக்கத்தக்கது.

சிவபெருமானின் ஐந்து முகங்களிலிருந்தும் (சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம்) ஐந்து ஆசாரியர்கள், (பஞ்சாசாரியார்கள்) தோன்றினார்கள். வீரசைவத்தைப் போதிக்க, உபதேசிக்க அவர்களில் இரேணுகாசாரியர், சோமேசுவர இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டார். அவர் ராம்பாபுரியில் பீடாதிபதியாயிருந்து வீரசைவத்தைப் பரப்பினார். இராவணன் தம்பி வீடணன் இவரிடம் உபதேசம் பெற்று, ஈழத்தில் மூன்று கோடி இலிங்கங்களை நிறுவியதாக மரபு வழிச் செய்தி.

ஜெகத்குரு தாருகா சித்தலிங்கத்தில் இருந்து வெளிப்பட்டு, உஜ்ஜையினியில் மடம் அமைத்து வீரசைவத்தைப் போதித்தார். ஜெகத்குரு கோராமா ஸ்ரீராம்நாத் இலிங்கத்திலிருந்து தோன்றினார். இவர் கேதார்நாத்தில் திருமடம் அமைத்து வீர சைவத்தைப் பரப்பினார். ஜெகத்குரு பண்டிதராத்யா ஸ்ரீமல்லிகார்ஜுனா இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு, ஸ்ரீசைலத்தில் திருமடம் அமைத்து, வீரசைவத்தைப் போதித்தார். ஜெகத்குரு விஸ்வராத்யா ஸ்ரீவிஸ்வநாத் இலிங்கத்தில் உற்பத்தியாகி, காசியில் திருமடம் அமைத்து, வீரசைவத்தை எடுத்துரைத்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

இரேணுகாசாரியர், தமிழ் வளர்த்த அகத்தியருக்கு வீரசைவத்தை உபதேசம் செய்திருக்கிறார். அகத்தியர் புறத்தீயை வளர்க்காமல், அகத்தீயை வளர்த்த காரணத்தால், இக்கூற்றில் சற்று உண்மை இருக்கக்கூடும். அகத்தியர், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டவர். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட ருக் வேதத்திலும் இலிங்கம் எனும் சொல் தென்படுகிறது.

சித்தம் ஆகும் சிவமயம் ஆகிய
வித்தை யூடு விசேடமது ஆகியே
எத்தினால் இங்கு இரமிப்பன்; அன்னவன்
பொய்த்திடாத புகழ் வீர சைவனே *(சித்.சிகா.74)*

எனும் பாடலைச் சிந்தித்துப் பார்த்தால், பௌராணிகக் கருத்துக்கும் சற்று வலுவேற்படுகிறது.

கர்நாடகாவில் இன்றும் பஞ்சஆசாரிய மரபு என்றும், பசவர் மரபு என்றும் இருவகையும் பின்பற்றப்படுகின்றன.

வரலாற்றின்வழி வீரசைவம்:

இன்றைக்கு இந்தியா முழுமையும் வீரசைவர்கள் பரந்து கிடக்கின்றனர். கர்நாடகா, காஷ்மீர், கேரளா, ஆந்திரா, மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், குஜராத் போன்ற மாநிலங்களில் கணிசமான அளவுக்கு வீரசைவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டினர் வெளிநாடுகளுக்கும் புலம் பெயர்ந்ததால், அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் வீரசைவர்கள், நெறிப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வீரசைவத்தின் தோற்றத்தை ஆராயப்புகுந்த முனைவர் S.C. நந்திமத் “வீரசைவத்தின் தோற்றம் இன்றுவரை அறியப்படாத புதிர்” என்கிறார்.

பல்லாண்டுகளுக்கு முன்பு, ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த வீரசைவர்களின் வாரிசுகள், இலிங்க தாரணத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர். ஜெர்மானிய, பிரெஞ்சு, இத்தாலிய விவசாயிகள், இலிங்க வடிவில் கேக்குகளைச் செய்து, அவற்றை ஊர்வலமாகச் சர்ச்சுகளுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எடுத்துச் செல்கின்றனர். இலிங்கத்தைப் போற்றுதல் என்பது மத்தியதரைக்கடல் பகுதியிலும், மேலைநாட்டின் வடபகுதியிலும் வரலாற்றுக்கு முன்பிருந்து உள்ளது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் டையோனைஸீஸ் (கிரேக்கக் கடவுள்) வழிபாட்டிலும் இலிங்க வடிவம் காணப்பட்டது. செங்குத்தாக நிறுத்தி வைக்கப்பட்ட கல்வடிவத்தில் இலிங்கம் வழிபடப்பட்டது. மெக்காவிலுள்ள கருப்புக்கல்லும் இலிங்க வடிவே! அமர்நாத்திலுள்ள ஐஸ் இலிங்கம், சுயம்பு உருவமாகும்.

சைவர்களும் ஆதிரோமானியர்களும் கழுத்தில் இலிங்கம் அணிந்திருந்தனர். டையோனைஸீஸ், ஒஸிரிஸ் ஊர்வலங்களில் இலிங்கச் சின்னத்தைத் தூக்கிச் சென்றிருக்கின்றனர். ஆங்க்கர் வாட் கல்வெட்டில், அகத்தியர் சிவலிங்க வழிபாட்டிற்காகக் கம்போடியா வந்ததாகப் பொறிக்கப்பட்டுள்ளது. ஜாவாவில் அகத்தியர் சிவகுருவாக **'வலைங்'** என்ற பெயரில் வழிபடப் படுகிறார். கம்போடியாவிலும் ஜாவாவிலும் அகத்தியரும் அவர் மனைவி லோபமுத்திரையும், சிவன் உமாதேவியராகக் கருதப்படுகின்றனர்.

ஹரப்பாவில் இலிங்கம், சூரியன், மரம் மூன்றும் தெய்வங்களாக வழிபடப்பட்டதாக, ஜான் மார்சல் கருதுகிறார். இந்து சமவெளி நாகரிகத்தை ஆராய்ந்த ஆலன், மரத்தொடு கூடிய இலிங்கம் பதித்த நாணயம் கிடைத்துள்ளதாகக் கூறுகிறார். ஸ்பூனர் எனும் அகழ்வாராய்ச்சியாளர், பாஸாரில் கிடைத்த கோயில் முத்திரையில், இலிங்க உருவம் தென்பட்ட தாக எழுதுகிறார்.

நாளந்தாவிலும்- இராஜ்கட்டிலும் இலிங்கம் பொறிக்கப் பட்ட முத்திரை கிடைத்திருக்கின்றது. ராஜகிரியில் மணியார் மதில் சுவர்களில் இலிங்க உருவம் தீட்டப்பட்டிருக்கிறது. வழுவழுப்பான சின்னஞ்சிறு கருங்கற்களினால் செய்த இலிங்கங்கள், பெட்டாமுடியத்தில் கண்டெடுக்கப்பட்டிருக் கின்றன. ரேணிகுண்டாவைச் சேர்ந்த குடிமல்லத்தில் உள்ள இலிங்கம், சிவன் உருவைக் கொண்டுள் ளது. கி.மு. 2ஆம் நூற்றாண்டுக் காலத்தில், பீடாவில் கிடைத்த முத்திரையில்,

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

குன்றின் மேலுள்ளது போல சிவனின் இலிங்க இலச்சினை காணப்படுகிறது. இது அலகாபாத்திற்கு அருகில் உள்ளது.

கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த பீடாவில் கண்டெடுக்கப்பட்ட சிற்பம், இலிங்க வடிவத்திற்குத் தொன்மையான சான்றாகும். இதில் ஐந்து முகங்கள் உள்ளன. கஜாஹீதியின் மகன்கள் வழிபட்ட இலிங்கம், வாசேத்தியின் மகனான நாகாசிரியரால் அர்ப்பணிக்கப்பட்டதாகும். இச்செய்தி, பிராமி எழுத்துகளால் பொறிக்கப்பட்ட கல்வெட்டிலுள்ளது.

சிந்துவெளி நாகரிகத்தை ஆராய்ந்த அருட்தந்தை (ஃபாதர்) ஹீராஸ் பாதிரியார் (ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்) கர்நாடகாவிலுள்ள வீரசைவர்கள் பலருடைய இல்லங்களுக்குச் சென்றிருந்தாராம். அப்பொழுது பெரும்பாலானவர்களின் வீட்டுச் சுவர்களில் **ஸ்வஸ்திக்** என்ற சின்னம் வரையப் பட்டிருந்ததாம். அச்சின்னத்தை அவர் மொஹஞ்சதாரோ / ஹரப்பாவில் கிடைத்த கல்வெட்டுகளில் கண்டாராம். எனவே, அச்சின்னம் இலிங்கத்தைக் குறிப்பதாக இருக்க வேண்டுமென்று அவர் கருதுகின்றார். இவ்வாறாக, இட்டலிங்க தாரணத்திற்கு முன்னோடியாக இருந்த இலிங்க வழிபாடு வரலாற்றாசிரியர்களால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

நாடறிந்த வரலாற்றறிஞர் டாக்டர் ரோமிலா தாப்பர், "வீரசைவத்தின் மையச் செயற்பாடு, தமிழகத்திலிருந்து தொடங்கியது என்றாலும், அது அங்கிருந்து பெயர்ந்து, மைசூரை அடைந்தது என்றும் ஐயந்திரிபறக் கண்டறிந்துள்ளார்.

மனித வடிவில் இம்மண்ணுக்கு வந்த திருமூலர், வீரசைவத்தை ஒரு கோட்பாடாக வரித்துக் கொண்டு, பாடாவிட்டாலும், அக்கோட்பாட்டின் உயிர்நாடியான அம்சங்களைப் பாமரர்களுக்கும் விளங்கும்படியாக எளிமைப் படுத்திப் பாடியுள்ளார். வீரசைவத்தின் ஆதார சுருதி, ஆகமநெறி! அந்த ஆகமத்தின் பெருமையைத் தமிழில் திருமூலருக்கு முன்னர் யாரும் பேசவில்லை. திருமூலர் தாம் ஆகமங்கள் (28) இருபத்தெட்டையும் சிவபெருமான் தன் ஐந்து முகங்களினாலும் உரைத்தருளினான் என்பதை,

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே (திருமந்.57)

எனும் பாடல் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

மேலும், இவ்வாகமங்களின் பெருமையை விண்ணிலே இருக்கும் வானவர்களால் கூட விளங்கிக் கொள்ள முடியாது என்கிறார்.

வீரசைவத்தில் குரு இலிங்கம் ஜங்கமர் ஆகிய மூன்றும் இன்றியமையா அங்கங்கள் ஆவர். இட்டலிங்கத்தை அங்கையில் ஏந்துபவர், ஒரு குருவினால் தீட்சை பெற்றவராக இருக்க வேண்டும். குருவில்லாமல் ஒருவர் சிவவேடம் தரிப்பதென்றால், அது குருடும், குருடும் குருட்டாட்டம் ஆடியது போன்றிருக்கும் என்பார் திருமூலர். குருவினுடைய தவவலிமை எத்தகையது என்பதைச் சாற்ற வந்த திருமூலர்,

கருடன் உருவங் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயம்கெடு மாபோல்
குருவின் உருவம் குறித்தஅப் போதே
திரிமலம் தீர்ந்து சிவனவ ன்ஆமே (திருமந்.2659)

எனப் பாடுவார்.

குருவினை அடுத்து இடம்பெறுவது, இலிங்கத்தின் பெருமை. பிற்காலத்தில் சிவப்பிரகாசர் இட்டலிங்கத்தின் அருமை பெருமைகளைப் பேசுவதற்குச் சிவலிங்கத்தின் சிறப்பைப் பாடி வடிவமைத்துக் கொடுத்தவர் திருமூலர்.

அகார முதலாய் அனைத்துமாய் நிற்கும்
உகார முதலாய் உயிர்ப்பெய்து நிற்கும்
அகர உகாரம் இரண்டு மறியில்
அகார உகாரம் இலிங்கம் தாமே (திருமந்.1753)

என்றும்,

மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

நலந்தரும் சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே. (திருமந்.1776)

என்றும் வீரசைவத்திற்கு, முன் ஏர் ஓட்டியவர் திருமூலர் ஆவார். பின் ஏர்களைப் பசவரும் சிவப்பிரகாசரும் ஓட்டினார்கள்.

குரு - இலிங்கம் - சங்கமர் எனும் வரிசையில் மூன்றாவதாக இடம் பெறுபவர், சரணர்கள் எனும் அடியார்கள். சிவனடியார்கள் நடமாடும் கோயில்கள் என்பதைத் திருமூலர்,

ஞானத்தி னாற்பதம் நண்ணும் சிவஞானி
தானத்தில் வைத்தல் தனிஆல யத்தனாம்
மோனத்தன் ஆதலின் முத்தனாம் சித்தன்ஆம்
ஏனைத் தவ(சி) இவன்என லாகுமே (திருமந்.1674)

என்றும்,

தான்அற்ற தன்மையும் தான்அவ னாதலும்
ஏனைய அச்சிவ மான இயற்கையும்
தானுறு சாதக முத்திரை சாத்தலும்
மோனமும் நந்தி பதம்முத்தி பெற்றதே (திருமந்.1675)

என்றவாறும் பகருகின்றார்.

பிற்காலத்தில் கன்னடத்து அக்கமாதேவி, "ஐயா நும் சரணன் தொட்ட தரை, புனிதமானது ஐயா; ஐயா, நும் சரணர் இருக்கும் நகரம் கைலாசம். ஆனதய்யா. ஐயா! நும் சரணர் நிற்குமிடம் நிஜமாக நீ தங்குமிடமய்யா!" என்று பாடியது இங்கு நோக்கத்தக்கது.

மற்ற சமயங்களில் இல்லாத சிறப்பொன்று, வீரசைவத்திற்கு உண்டு. ஞானியர்கள் தங்கியிருந்த இடங்களே ஆதீனங்கள். ஞானோபதேசம் செய்வதற்கு அமைந்த இடங்களே திருமடங்கள். மற்ற சமயப்பிரிவுகள் மடங்கள் எனச் சொல்லிவந்த காலத்தில், மயிலாசலம்தான் திருமடம் என உச்சரித்தது. அத்திருமடத்தின் பெருமையை முதலில் பாடியவர், திருமூலர். திருமடத்தில் தங்கியிருக்கும் ஞானியின் உள்ளம்தான் இறைவன் வாழும் இல்லம் என்பதைத் திருமூலர் இவன் இல்லம் அல்லது அவனுக்கு அங்கு இல்லை.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

அவனுக்கு வேறு இல்லம் உண்டா அறியில்.... என்பதன் மூலம் உணர்த்துகிறார். மேலும்,

முகம்பீட மாம்மடம் முன்னிய தேயம்
அகம்பர வர்க்கமே ஆசில் செய்காட்சி
அகம்பர மாதனம் எண்ணெண் கிரியை
சிதம்பரம் தற்குகை ஆதாரம் தானே (திருமந்.2653)

என்றும் திருமடத்தின் சிறப்பை எடுத்துரைக்கின்றார், திருமூலர்.

பிற்காலத்தில் பசவரும் அல்லமரும், அனுபவ மண்டபத்தை முதன்மைப்படுத்தியமைக்கும் சிவப்பிரகாசர் மயிலம் திருமடத்தைச் சிறப்பித்தமைக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர் திருமூலரே. திருமூலருக்கு அடுத்த காலகட்டத்தில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் திருக்குடந்தையில் - மகாமகக் குளக்கரையில் வீரசைவத் திருமடம் இருந்ததற்கும், அங்கிருந்த ஞானிகள் வீரமஹேஸ்வரர் என்று அழைக்கப்பட்டதற்கும், தமது தக்க யாகப் பரணி நூல் மூலம் சான்று பகருகின்றார்.

குடந்தையம் பதியில் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மாகேஸ்வரர் வாழியே.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் கன்னடநாட்டில், அந்தணர் குடும்பத்தில் தோன்றி, வீரசைவ நெறிக்குப் புத்துயிரும் புதுப்பொலிவும் ஊட்டியவர் பசவர். நாட்டை ஆண்ட சமண சமயத்தைச் சார்ந்த விச்சலன் என்ற மன்னன் அவருக்கு அமைச்சர் பதவி தந்தான். பணியாற்றியவர், பசவர். சமணமும் வைதிக மதமும் வருணாசிரமத்தையும், சாதி ஏற்றத்தாழ்வையும் எருவிட்டு, நீர்வார்த்ததைக் கண்டு வெகுண்டு எழுந்தவர், பசவர்.

சாதி இழிவினால் மிதிக்கப்பட்டும், வருணாசிரமத்தால் ஒடுக்கப்பட்டும் கிடந்த மக்களுக்கு ஓர் நம்பிக்கை நட்சத்திரமாகத் தோன்றியவர், பசவர். மானுடத்திற்குப் புதுவழிகாட்ட, வீரசைவத்தை ஆயுதமாகவும் கேடயமாகவும் ஏந்தினார். தான் ஓர் அக்கினிப் பிரவேசத்திற்கு உள்ளானால் தான், மக்கள் வீரசைவத்தின் பின்னால் வருவார்கள் என்று,

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

"நான் டோகர கக்கையன் மகன், சென்னையன் என் முப்பாட்டன்; பக்தி நற்குணம் இவற்றைக் கீழ்க்குலத்தாரிடமே அறிந்து கொள்வேன்; உயர்குலத்தில் பிறந்தது என் தலைவிதி" என முழக்கமிட்டார். அவருக்குப் பின் வந்த சர்வக்ஞர் என்ற சிவஞானி, "பசவரே என் தந்தை. அவரே என் வழிகாட்டி" என அறிவித்ததுடன், "கால அறிவை ஊட்டினன் பசவன் எனக்கு; ஞாலமதில் அதை நானுரைப்பேன் - உன் மகனாகி - திருநீறு கோலமேந்தி நாளும் சர்வக்ஞ" எனக் கவிதையும் பாடினார்.

கூடாவொழுக்கத்தை ஒழிப்பதற்காக வீரசைவத்தைப் பின்பற்றும் சிவஞானியர் திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனப் பிரச்சாரம் செய்தார். சிவனே கணவன் (இலிங்கபதி) அடியாரே மனைவி (சரணசதி) எனும் கொள்கையை நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தார். தேவ தாசியம்மய்யன், சிரியாளன் போன்ற ஞானியர்கள் இல்லறத்திலிருந்து வீரசைவத்தை வளர்த்ததை அனைவருக்கும் எடுத்துரைத்தார். பாமர மக்களுக்கும் புரிய வேண்டும் என்பதற்காகக் கவிதை நடையிலிருந்த தொடர்பியலை, வசன நடைக்குக் கொண்டு வந்தார்.

ஏழை மக்களிடம் சென்று - மது, மாமிசம், இலாகிரிப் பொருள்களை நீக்க வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தார். வீரசைவத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பிறந்த ஒருவனும் - வீரசைவத்தைச் சார்ந்த அந்தணர் குடும்பத்தில் பிறந்த ஒருவனும் மணவினை கொள்வதை மன்னனே எதிர்த்து நின்றாலும், மன்னனையும் எதிர்த்துப் போரிடத் துணிந்தவர், பசவர். அர்த்தமற்ற சடங்குகளைச் செய்ய வேண்டாம் என்றும், நாள் - நட்சத்திரம் பார்ப்பதற்குச் சோதிடரிடம் போக வேண்டாம் என்றும் பரப்புரையில் ஈடுபட்டார். நகைநட்டு - ஆடை ஆபரணம் போன்ற ஆடம்பர வாழ்க்கையை விட்டொழிக்குமாறு மக்களை வேண்டினார். நாசக் காசில் ஆசையை நாட்ட வேண்டாமென்று நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெண்ணடிமையை ஒழிக்க முற்றாகப் போராடியவர் பசவர். தம்முடைய சிவானுபவ மண்டபத்தில் பெண்களுக்குச் சமவுரிமை வழங்கி வாதிட வைத்தார். பெண்களுக்குத் தீட்சை கொடுக்கும் உரிமையை வழங்கினார். அக்கமாதேவி, நீலாம்பிகை, கங்காம்பிகை போன்ற பெண் கவிஞர்கள் உருவாவதற்கும் காரணமாக அமைந்தார். கவிஞர் மகாதேவி யக்கா, வீரசைவத்தின் பீடாதிபதியாக விளங்கியவர். மகாதேவி யக்கா இன்றும் வீரசைவத்தின் ஐந்து தூண்களில் ஒருவராகப் பாராட்டப்படுகிறார்.

சாதியிழிவைத் துடைப்பதற்காக, பசவரே ஓர் ஆதிதிராவிடர் குடும்பத்திற்குச் சென்று விருந்துண்டார். வருணாசிரமத்தைக் கடைப்பிடிக்கும் வைதிகக் கோயில்களுக்குச் செல்ல வேண்டாம் என்று மக்களைத் தடுத்தார். உங்கள் உடம்பைக் காட்டிலும் வேறு கோயில் இல்லை. முழுமையை எட்டிப் பிடிக்க வேண்டுமென்றால், உங்கள் உள்ளத்திற்குள் இருக்கும் சிவனை, உங்கள் ஜீவனோடு ஐக்கியப்படுத்துங்கள்; இட்டலிங்கத்தைக் கழுத்தில் அணியுங்கள்; பின்னர் கரத்திலேந்தி வழிபாடு செய்யுங்கள்" என்று வீரசைவத்தின் ஒழுகலாறுகளை எடுத்தியம்பினார்.

உழைப்பின் உயர்வை நாட்டு மக்களுக்கு உணர்த்துவதற்காக, **"உடலிருக்கும்வரைஎப்படிப்பட்டசிவயோகியாகஇருந்தாலும் முடிந்த அளவு உழைக்க வேண்டும்; உழைப்பே கைலாயம்; அதில் இழிவு, ஏற்றத்தாழ்வில்லை"** என அறிவுறுத்தினார். மேலும், **காயகா** எனும் புதிய தொழிற்கொள்கையையும் அறிமுகப்படுத்தினார். பிறந்த சாதிக்கு ஏற்றவாறு தொழிலைச் செய்யாதீர்! தச்சர் குடும்பத்தில் பிறந்தவர், சலவைத் தொழிலைச் செய்யுங்கள்; வண்ணார் குடும்பத்தில் பிறந்தவர் தச்சுத் தொழில் செய்யுங்கள்; இடுகாட்டில் வேலை செய்தவர், கொல்லர் தொழிலில் ஈடுபடுங்கள்" என்ற சாதிப் பாகுபாட்டை ஒழிப்பதற்குக் **காயகா** எனும் புதிய தொழில் திட்டத்தைச் செயல்படுத்தினார்.

தம்முடைய எல்லாப் பணிகளிலும் அல்லமரையே முன்னிலைப்படுத்தினார். அன்றைய கர்நாடகா, ஆந்திரா

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

வோடும், மராட்டியத்தோடும் ஒருங்கிணைந்திருந்ததால், வீர சைவம் அந்தந்த நாடுகளிலும் பரவுதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

பசவருடைய அரும்பெருந் தொண்டால் சமயமும் சீர் பெற்றது; சமுதாயமும் உயர்வு பெற்றது; வீரசைவம் புத்துயிர் பெற்றது. இன்றைக்கும் கன்னட நாட்டிலுள்ள வீரசைவர்கள், இங்கு நாம் பிள்ளையார் சுழிபோட்டுக் கடிதத்தைத் தொடங்குவது போல், பசவாய நம எனக் குறிப்பிட்டே தொடங்குகிறார்கள். இடுக்கண் வரும்போது நாம் சிவாயநம என மனத்திற்குள் உச்சரிப்பது போன்று, அங்கு பசவாய நம எனும் திருநாமத்தையே உச்சரித்திருக்கிறார்கள்.

மற்றமற்ற இடங்களில் எல்லாம் வீரசைவத்திற்குப் புதுரத்தம் பாய்ச்சியவர்கள் மனிதர்கள்- மகான்கள்; ஆனால், மயிலம் திருமடத்திற்குத் தோற்றுவாய் செய்தவன் மகேசன்; கயிலைநாதன். ஸ்ரீபாலசித்தரை அடுத்து வந்த 2ஆம் பட்டம் ஆதிசிவஞானபாலய சுவாமிகள் குருநாதருடைய குறிப்பையும் கொள்கைகளையும் ஏற்று, வீரசைவத்தின் மாண்பினை மணக்கச் செய்தவர் ஆவார். "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொன்னவர்" என்ற காரணத்தால், நாட்டுமக்கள் அவரைத் தேசிகர் எனும் பட்டம் சூட்டி மகிழ்ந்தனர். ஆதி-சிவஞானபாலய சுவாமிகளின் அருட்தொண்டால், சாதாரண மக்களிலிருந்து மன்னர்கள் வரை திருமடத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். கோடிக்குறைகளோடு வந்தவர்களையும் தம்முடைய அருட்பார்வையால் அருள்பாலித்ததால், அவர்களுடைய சிறுசிறு கிராமங்களையும் திருமடத்திற்குச் சர்வமானிய சிலாசாசனம் செய்து கொடுத்துச் சென்றிருக் கின்றனர்.

நடுநாட்டைச் சிலகாலம் ஆண்டு பதவியை இழந்த சிதம்பரபூபதி என்ற மன்னனுக்கு மீண்டும் பதவி கிடைக்க அருள்பாலித்தவர், இரண்டாம் பட்டம். மேலும், நல்லாற்றூர்ச் சிவப்பிரகாசரைத் தொண்டராக ஏற்று, திருமடத்திற்குச் சீடராக்கியது, தமிழுக்கும்- வீரசைவத்திற்கும் ஆற்றிய அருந் தொண்டாகும். மற்றும் காஞ்சிபுரம், செய்யூர், பழனி,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நல்லாற்றூர் போன்ற இடங்களில் கிளை மடங்கள் தோன்று வதற்கும் கருவியாகவும் காரணமாகவும் அமைந்தார்கள்.

அடுத்து ஆதீனகர்த்தாவாக எழுந்தருளியுள்ள 18ஆம் பட்டம் சீர்வளர்சீர் சிவஞானபாலய சுவாமிகள் (1928- 1965) சமயத்தையும், சமுதாயத்தையும் தம் இருகண்களாகப் பாவித்து, அருட்தொண்டாற்றினார்கள். சமயப் பணியின் ஓரங்கமாகக் கல்வியைக் கருதி, பல கல்வி நிறுவனங்கள் உருவாவதற்குக் கர்த்தாவாகத் திகழ்ந்தார். தாம் காசியாத்திரை சென்ற காலத்து, அதனை ஒரு தமிழ்யாத்திரையாகவும் கருதி, சிவப்பிரகாசரின் அரிய நூல்களுக்குப் பொருத்தமான விளக்கங்களைத் தந்தருளி, அவை வெளிவருவதற்கும் ஆவன செய்தார்கள்.

தொடர்ந்து 19ஆம் பட்டமாக எழுந்தருளிய ஆதீனகர்த்தர் அவர்கள், வித்துவான் பட்டம் பெற்றவர்கள் என்ற காரணத்தால் சிவப்பிரகாசருடைய ஒட்டுமொத்தப் படைப்புகளையும் வெளிக்கொண்டு வந்து விடவேண்டும் என்பதை வைராக்கிய மாகக் கொண்டிருந்தார்கள். பனையோலையில் படுத்துக் கிடந்த சிவப்பிரகாசரின் பனுவல்களைத் தேடிக் கொண்டு வந்து அச்சு வாகனம் ஏற்றினார்கள். மேலும், கன்னட நாட்டில் வீரசைவத்திற்கு வித்திட்ட பசவருடைய வசனங்களை எல்லாம் சிறுசிறு நூல்களாக அச்சிட்டுச் சின்னஞ்சிறார்களும் படிக்கத்தக்க வகையில், பதிப்பித்து அருளினார்கள்.

இன்னும், மயிலம் முருகன் பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவத்திலுள்ள **பால்மாரி பெய்து உடல் வழிந்தென்ன** - எனும் பாடலைச் சந்நிதானம் பாடியருளினால், கல்லும் கரைந்துருகும் என்பார்கள்.

இன்றைக்கு 20ஆம் பட்டமாக எழுந்தருளியிருக்கும் ஆதீனகர்த்தர் வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கும் பெருமரபில், அறங்கிடந்த நெஞ்சோடும் அருள்ஒழுகும் கண்களோடும் வீற்றிருக்கிறார்கள். திறக்காத கதவுகள் - மனக் கதவுகள் திறக்கப்படுகின்றன. இதுவரை படியேறாதவர் கள், மலை ஏறி வருகிறார்கள். அவர்களின் அருள்திறம் கேட்டு,

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

இதர மாநிலங்களிலிருந்தும் அன்பர்கள் அருள்வேண்டி வருகிறார்கள்.

முன்னோர் மொழிபொருளையே முதன்மையாகக் கொண்டு, அவ்வழியே அருட்தொண்டு செய்து வருபவர் தற்போதைய ஆதீன கர்த்தராகிய இருபதாம் பட்டம் ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் ஆவார்.

கல்விப் பணிகள், பக்தி அருளுரைகள், குடமுழுக்கு நிகழ்வு களில் பங்கேற்றல், சமுதாயத் தொண்டாற்றல், சமய வகுப்புகள் நடத்துதல், திருவிழாக்களை முன்னின்று நிகழ்த்துதல், இளைஞர்களிடம் பக்தியை வேரூன்றச் செய்தல் எனும்படியாக அவர்தம் திருத்தொண்டுகள் அமைந்து வருகின்றன. பட்டி தொட்டிகள் என எங்கும் பம்பரமாய்ச் சுழன்று பக்திப் பயிரை வேரூன்றி வளர்த்து வருகிறார்கள்.

தமிழ்போற்றும் தொண்டாக, ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகளின் புகழ் பரப்பும் ஆன்றோர்களைத் திருமடத்தில் பாராட்டி விருதளித்தலைத், தொடர்ந்து ஆண்டுதோறும் நடத்தி வருகிறார் கள்.

ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகளின் கருத்துகள் உலகமெங்கும் சென்று சேரவேண்டும் என்னும் நோக்கோடு அவர்தம் அரிய நூல்கள் பலவற்றையும் பதிப்பிக்கும் பணியையும், அவற்றை மொழிபெயர்க்கும் திருப்பணியையும் அருளாணையின் மூலம் நடத்தி வருகிறார்கள்.

மயிலம் திருக்கோயிலைப் புனரமைத்துப் பொலிவு பெறச் செய்ததோடு, பொம்மையபாளையத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஆதீனக் குருமுதல்வர்களால் தொழப்பெற்ற ஸ்ரீ பாலசுப்பிரமணியர் சந்நிதி, 3, 14, 15, 16, 17, 18, 19 ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஆகியோர்களின் சமாதித் திருப்பணிகள் ஆகியவை திருவருளாலும் குருவருளாலும் இருபதாம் பட்டம் சுவாமிகளின் மூலம் இனிதே நிறைவடைந்துள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவம்பெருக்கும் ஸ்ரீ சிவப்பிரகாசர்

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர், வீரசைவம் விளங்குவதற்காக, கி.பி. 17ஆம் நூற்றாண்டில் இம்மண்ணிற்கு வருவிக்கப்பட்டவர். இவருடைய தந்தையார், குமாரசாமி தேசிகர், திருஞானசம்பந்தருடைய தந்தையார் சிவபாத இருதயருக்கு ஈடானவர்; இணையானவர். காஞ்சிபுரத்தில் தொண்டை மண்டல சமூகத்தினர்க்குத் தீட்சை வழங்கக் கூடியவர். சிவப்பிரகாசர் கருவிலே திருவுடையவராகத் திகழ்ந்தமைக்குத் தந்தையாரே காரணம். குமாரசாமி தேசிகரும் ஓர் அருட்கவியே!

குமாரசாமி தேசிகர் தமக்கு வாய்த்த மூன்று பிள்ளைகளும் ஒரு பெண்ணும் ஞானம் உடையவர்களாகவும், அருட்கவி இயற்றும் வல்லவர்களாகவும் அமைந்தமையை எண்ணி,

கயல்வாய்த்த கண்ணிஉல கீன்றவல்லி பங்காஉனது
செயல்வாய்த்த அன்பருக்கும் அல்லாதார்க்கும் சிரிப்புஅல்லவோ
இயல்வாய்த்த எந்தைக்கு யான் வாய்த்ததுவும் இங்குஎன் றெனக்கு
வயல்வாய்த்தது மனைவாய்த்தது மைந்தர்கள் வாய்த்ததுமே.

என இறும்பூது எய்திப் பாடியிருக்கிறார்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சிவப்பிரகாசரைத் தம்முடைய குருவாகவும், சைவத்திற்கும், தமிழுக்கும் வாய்த்த தலைமைப்பீடமாகவும் கருதி, "தெய்வப் புலமைச் சிவப்பிரகாசக் குருவைச் சைவத் தலைமைத் தமிழ்க் கடலை" எனப் பாடலைத் தொடங்குகிறார். சிவப்பிரகாசர் சாதாரண மானுடக் குழந்தை போல் வாராமல், வீரசைவம் ஒளிர வந்த ஒரு தெய்வக்குழந்தை என்பதை, "மலகன்ம மாயை வாதனையற்ற பேரின்ப வீரசைவ மாண்பினை விளக்கும் ஒரு வள்ளல்" என்னும் பாடல் வரிகளால் அறியலாம். இக்குழந்தை பிறந்தவுடனேயே அவருடைய தந்தை குமாரசாமி தேசிகர் 'இலிங்கதாரணம்' செய்து வைத்தார்.

கதிரவன் உதிப்பதற்கு முன்பு, வானத்து மேகங்கள் செம்மையடைவதைப் போல சிவப்பிரகாசர் அவதரிப்பதற்கு முன்பேயே இட்டலிங்கத்தின் இன்றியமையாமையை அறி

Digitization by Hindu-Heritage-Foundation of America; HHFA(USA)

வுறுத்தி விட்டுத்தான், இந்நிலவுலகிற்கு வந்தது. காஞ்சிபுரத்திலிருந்து திருவண்ணாமலை தீபத்திற்கு வந்த குமாரசாமி தேசிகர், தம்முடைய சாளக்கிராமத்தை (பூசைப் பெட்டி)த் தவறவிட்டு வருந்தினார்; தூக்கம் இன்றித் தவித்தார். அப்பொழுது அண்ணாமலையார் அடியவர் வடிவில் தோன்றி, 'அங்கம் வேறு; இலிங்கம் வேறாக இருந்தமையால் இச்சோதனை; இலிங்கத்தை அங்கத்திலே தரிக்க' என அறிவுறுத்தினார். அவ்வாறு செய்தால், பூசைப்பேழை மட்டுமல்லாமல் மக்கட்பேற்றையும் பெறலாம் எனவும் அருள்வாக்குத் தந்தார். குமாரசாமி தேசிகரும் உடன் குருதேவரிடம் சென்று, தீட்சைபெற்று, இலிங்கதாரணமும் பெற்றார்.

திருவண்ணாமலை நினைக்க முக்தி தரும் தலம் என்பதற்குச் சாட்சியாய் நிற்பது, சிவப்பிரகாசர் அவதாரம். திருவாரூர் பிறக்க முக்தி தரும் தலம் என்றாலும், தில்லை இருக்க முக்தி தரும் தலம் என்றாலும், காசி மரிக்க முக்தி தரும் தலம் என்றாலும், இம்மூன்றும் சேர்ந்தாலும், திருவண்ணாமலைக்கு ஈடாகாது என்பதை,

துவக்கற அறிந்து பிறக்கும் ஆரூரும்,
துயர்ந்திடாது அடைந்துகாண் மன்றும்,
உவப்புடன் நிலைத்து மரிக்கும்ஓர் பதியும்
ஒக்குமோ நினைக்குநின் நகரை?
பவக்கடல் கடந்து முத்தியம் கரையில்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்து எழும்சோண
சைலனே! கைலை நாயகனே! (சோண.2)

என்னும் பாடல் மூலம் தெரிவிக்கிறார் சிவப்பிரகாசர். இட்டலிங்க வழிபாட்டிற்குத் தம்மையும் தந்தையாரையும் மாற்றியமைக்காகத் திருவண்ணாமலையார் மீது, 'சோணசைல மாலை' பாடினார், சிவப்பிரகாசர்.

சிவனடியைச் சிந்திக்காதவரை அப்பரடிகள், "பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார், நாக்கைக் கொண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அரன் நாமம் நவிற்றிலார், ஆக்கைக்கே இரைதேடி அலைந்து, காக்கைக்கே இரையாகிக் கழிவரே" எனப் பாடி எச்சரிக்கிறார். அதுபோலவே சிவம் பெருக்க வந்த சிவப்பிரகாசர் சிவனடியைப் பேணாதவரைப் **"பீடுறு மானிடப் பிறப்பு வாய்த்தும்நல், ஏடவிழ் மலரினால் இறையைப் பூசியார், பாடமை நாளெல்லாம் பாழ்க்கு இறைப்பவர், மூடரை எண்ணுங்கால் முந்தி நிற்பரே"** (பி.லீ.366) எனச் சாடுவதோடு, அவர்கள் நாயினும் கீழான பிறவிகள் (**நாய்ப்பிறப்பு, ஆற்றவும் நன்று நன்றரோ**) (பி.லீ.367) என்று இழித்தும் உரைக்கின்றார்.

திருவருளையடுத்துச் சிவப்பிரகாசர் மிகுதியாகச் சிந்தித்தது, குருவருளையே! தொடக்கத்தில் "மகேசனைப் பாடிய நாவினால், மனிதரைப் பாட மாட்டேன்!" எனப் பேரூர் சாந்தலிங்க அடிகளாரிடம் தெரிவித்த சிவப்பிரகாசர், தம் கனவில் தோன்றிய முருகன் அருளாணையின் வண்ணம் குருவின் திருமேனி கண்டவுடன் குருவருளே திருவருள் என்பதை உணர்ந்து பாடத் தொடங்கி விடுகிறார். நெஞ்சுவிடுதூது, பிள்ளைத்தமிழ், கலம்பகம், தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி என ஐந்து நூல்களைக் குருநாதர் 2ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள்மீது அருளிச் செய்தார். தம் ஞானாசிரியர் ஆற்றுப்படுத்தியவண்ணம், திருமுதுகுன்றம் சென்று இறைவன்- இறைவியை வணங்கி, பழமலையந்தாதி, பழமலைநாதர் பிட்சாடன நவமணிமாலை போன்ற ஐந்து நூல்களை அருளிச் செய்தார். பொம்மையபாளையத்தில் ஒருநாள் சடுத்தல ஆராய்ச்சியில் ஈடுபட்ட வண்ணம், வானத்தை அண்ணாந்து பார்க்கின்றார். நீலவானில் நிலாவைச் சுற்றி ஆயிரக்கணக்கான விண்மீன்கள் மின்னுகின்றன. உடனே சிவப்பிரகாசருக்கும் தம் குருநாதரின் கொடையுள்ளம் நினைவுக்கு வருகிறது.

இரண்டாம் பட்டத்தை நாடிப்பாடி பரிசில் பெற வருகின்ற பாவலர்களுக்கு, அவர்கள் கைநிறைய வாரித் தருகின்ற இரத்தினங்களைப் போல் நட்சத்திரங்கள் மின்னுகின்றன எனப் பாடுகின்றார். பாடல் வருமாறு:

Digitization by Hindu-Heritage-Foundation of America : HHFA(USA)

கடல் முரசம் ஆர்ப்பக் கதிர்க்கயிற்றால் ஏறி,
அடைமதி விண்சூழநின்று ஆடக் - கொடைமருவும்
எங்கள் சிவஞான ஏந்தல் இறைத்தமணி,
தங்கியவே தாரகைகள் தாம்.

இன்னொரு நிகழ்ச்சியும் சிவப்பிரகாசர் தம் குருநாதர் மேல் வைத்த அளப்பரிய குருபக்தியைக் காட்டுவதாய் அமைகிறது. வெங்கனூர்ப் பழமலைநாதர் மேல் கோவை பாடிக் கொடுத்தமைக்காகச் சிதம்பரபூபதி என்னும் வள்ளல், சுவாமிகள் தங்குவதற்கு ஆங்கோர் திருமடம் கட்டித் தருகின்றார். அம்மடத்தைச் சிவப்பிரகாசர் தமது குருநாத ருடைய திருவருளினால் கிடைத்ததெனப் பாடுகிறார்.

வெங்கைப் பழமலை யார்மீது கோவை வியந்துரைக்கும்
எங்கட்கு இனிய சிவஞான தேவன் இசைவுகொடு
திங்கள் பவனி யிருகால் முதுகுன்றர் சேர்மறுகில்
மங்குல் சிதம்பர பூபதி நல்கும் இடமிதுவே

என்பது அப்பாடல்.

மேலும், சிவப்பிரகாச சுவாமிகளுக்கு ஐந்திலக்கணங் களையும் கற்பித்த தருமையாதீனத்துத் தம்பிரான் வெள்ளி யம்பலவாணரின்மீதும் அவர் கொண்டிருந்த குருபக்தி வியப்பிற் குரியது. சிவப்பிரகாசர் தமக்குக் கற்பித்த குருநாதருக்கு 300 பொன்னைக் காணிக்கையாக்குகின்றார். ஆனால், அதை மறுத்த வெள்ளியம்பலவாணத் தம்பிரான், "என்னை எப்போதும் இழித்தும், பழித்தும் பேசிக் கொண்டிருக்கிற திருச்செந்தூர்ப் புலவனை என் முன் கொண்டு வந்து, வணங்கச் செய்க" என வேண்டுகிறார்.

சிவப்பிரகாசரும் குருநாதர் ஆணையைத் தலைமேல் ஏற்று, திருச்செந்தூருக்குச் சென்று, 'திருச்செந்தில் நிரோட்டக யமக் அந்தாதி'யைப் பாடி, அப்புலவனைத் தோற்கடித்துக் குருநாதர் முன் கொண்டு வந்து நிறுத்தினார்.

சிவப்பிரகாசர் குருபக்தியில், குருபக்தியும் பயபக்தியும் இருப்பதாக வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் வியந்து பாராட்டுகின்றார். தமக்கு ஐந்திலக்கணம் சொல்லிக் கொடுத்த

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

வெள்ளியம்பலவாணத் தம்பிரானால், முடியாத காரியத்தைச் சாதித்தவர் சிவப்பிரகாசர் என வியக்கும் வண்ணச்சரபம், அந்த வெற்றிக்குரிய காரணத்தைச் சரியாகக் கணிக்கின்றார். திருமுருகன் வாழும் திருச்செந்தூரிலே நின்று செந்தூரான் மேல் அந்தாதி பாடினாலும், அவருடைய நெஞ்சிலே நின்றது சிவபெருமானே என்று நவில்கின்றார், வண்ணச்சரபம். "குரவனால் வெல்லரும் கொடியற் செந்திலைப் பரவலால் வெல்லுநின் பான்மை என்சொல்வேன், அரவணிவானை நெஞ்சகத்தில் ஆக்கலால் கரவறும் சிவப்பிரகாச மூர்த்தியே" *(சிவ.மூர்.பதி.1)* என்பது, வண்ணச்சரபம் பாட்டு.

ஒரு சிவஞானியினுடைய உள்ளத்தை மற்றொரு சிவஞானியால்தான் உய்த்துணர முடியும். தாம் கேட்ட நன்றிக் கடனைச் செலுத்திய சிவப்பிரகாசரைப் பார்த்து வெள்ளியம் பலவாணத்தம்பிரான், "தாங்கள் பாடிய 'குடக்கோடுவான்' என்னும் பாடலில் சிவபெருமானுக்குரிய தலம் சிதம்பரமே என்பதைக் குறிப்பாகச் சுட்டி உணர்த்தி யமையால், அங்கு சென்று சிலகாலம் தங்கியருள்க" என உறுதிப்படுத்திச் சொல்லியிருப்பதால், சிவப்பிரகாசர் குருபக்தியைக் காட்டுகின்ற நேரத்தில், சிவனருளையும் பெருக்கியிருக்கிறார் என்பது தெரிய வருகிறது.

அருளாளர்கள் ஆண்டவனிடம் பொன்னைக் கொடு, பொருளைக் கொடு என வேண்டுவது உண்டு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொன்-பொருள் மட்டுமன்றி, பெண்ணையும் வேண்டுகின்றார். ஆனால் வீரசைவராகிய சிவப்பிரகாசர், சிவம் பெருக்க வந்த செல்வர் ஆதலால் வேறு எதையும் வேண்டாது, அடியார் சேவையும் அரன் சேவையுமே வேண்டுகின்றார். **"மெய்த்தவர் அடிக்குற்றேவலின் திறத்தும், விளங்கும் ஆகம உணர்ச்சியினும், புத்தலர் கொடுநிற் பரவு பூசனையினும், பொழுதுபோக்க எனக்கு அருள்புரிவாய்... சோணசைலனே" (சோண.29)** என்பதுவே அவருடைய வேண்டுகோள். சிவ சிந்தனையின்றி வேறு சிந்தனையே இல்லாதவர், சிவப்பிரகாச சுவாமிகள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமுதுகுன்றத்தில் சுவாமிகள் தங்கியிருந்தபோது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி, அவர்களுடைய சிவம்பெருக்கும் சிந்தையைக் காட்டுவதாகும். பழமலைநாதரை வழிபடுவதற்காகக் காலையில் மணிமுத்தாற்றுக்கு நீராடச் சென்றார் சுவாமிகள். அந்நேரத்தில் அருகிருந்த தோப்பிலிருந்து ஒரு மாங்கனி விழுந்தது. சுவாமிகள் அது நைவேத்தியத்துக்கு ஆகுமே என எண்ணி எடுத்தபோது, காவல்காரன் வந்து அவருடைய மடியைப் பற்றி இழுத்தான். குணமென்னும் குன்றேறி நின்ற சிவப்பிரகாசர், "அன்று சிவபூசையில் இருந்த மார்க்கண்டேயனை வலிந்திழுத்த எமனைக் காலால் உதைத்து, மார்க்கண்டேயனைக் காப்பாற்றியது சத்தியமென்றால், சிவபெருமானே! எடுத்ததொரு மாங்கனிக்காக மடிபிடித்திழுத்த மாபாவி, புரட்டாசி மாத முதல்நாள் கதிரவன் உதிக்கும் வேளையில் மாண்டு போகட்டும்" என்று அறம்வைத்துப் பாடிவிட்டார். சிவப்பிரகாசரின் சீற்றம் கணமேயும் காத்தலின்றி, அதே, புரட்டாசி மாதம் அவன் மாண்டு போனான்.

அடுத்துவரும் தொண்டனுக்காய் அந்தகனைத் தாளால்
அடர்த்ததுவும் சத்தியமே ஆனால் - எடுத்த ஒரு
மாங்கனிக்கா என்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கு ஆதித்தன்வரத் தான்

என்பது சிவப்பிரகாசர் பாசுரம்.

"சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும் திருப்புகழ் நெருப்பு என்று அறிவோம் யாமும்" என அருணகிரிநாதர் பாடியிருப்பதையும், இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாம்பழத்தால் மாண்டவனுடைய நிகழ்ச்சி, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளைப் பெரிதும் உருக்கியிருக்க வேண்டும் அல்லது உலுக்கியிருக்க வேண்டும். சிவபூசைக்காக அந்த மாம்பழத்தைச் சுவாமிகள் எடுத்திருந்தாலும், அவர் நெஞ்சிலே நின்று அச்செயலை நிகழ்த்தியது சிவஞான பாலய சுவாமிகளே என்கிறார், வண்ணச்சரபம். எவ்வாறு திருமுருகனுடைய நெஞ்சிலே சிவபெருமான் நின்றானோ,

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

அவ்வாறே சிவப்பிரகாசர் நெஞ்சிலே ஆதிசிவஞானபாலய சுவாமிகள் நின்றார் என்று எழுதுகிறார் உரையாசிரியர். வண்ணச்சரபம் சுவாமிகள் பாடல் வருமாறு;

அந்தநாள் மடிபிடித் தவன்தன் ஆருயிர்
சிந்தவோ தியபுகழ் சிறிதுஎன்று எண்ணிடேன்
செந்தமிழப் பாலையன் சேரச் சிந்தையுள்
கந்தன்நேர் சிவப்பிர காச மூர்த்தியே ***(சிவ.மூர்.பதி.2)***

சுத்த சிவனே குருவாய் வந்து அருள்செய்வான் என்பதைத் திருமூலரும் வெகு அழுத்தமாக எடுத்துரைக்கின்றார்.

சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்
தத்தனை நல்கருள் காணா அதிமூடர்
பொய்த்தகு கண்ணால் நமர்என்பர் புண்ணியர்
அத்தன் இவன்என் றுஅடிபணி வாரே ***(திருமந்.1578)***

எனத் திருமூலர் பாடியதை, வண்ணச்சரபம் ஒரு சித்திரமாக்கிக் காட்டுகிறார்.

சிவனே குருவாகி வருகின்றான் என்பதைச் சிவஞான சித்தியார் (சூ.8-செ.1) ஓர் ஓரங்க நாடகம் போலவே தீட்டிக் காட்டுகிறது. ஐம்புல வேடர்களிடமிருந்து தம் அடியவரைக் காக்க சிவன் சிவகுருவாகி வருவான் எனும் தத்துவத்தை,

மன்னவன்தன் மகன்வேடர் இடத்தே தங்கி
வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்அவனும் என்மகன் நீ என்றுஅவரின் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணு மாபோல்
துன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும்தொல் லுயிரை
மன்னும்அருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலம்அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்

என எடுத்தியம்புகிறது. அந்நூல் சிவன் சிவகுருவாகி வருதலும், சிவஞானி சிவனிடத்து ஐக்கியப்படுதலும் உப்பும் நீரும் போலும் என்பர், தத்துவஞானிகள். உப்பைக் காய்ச்சினால், அது நீராகும்; நீரைக் காயவைத்தால், அது உப்பாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாழையடி வாழையென வந்த சிவனருட் செல்வர்களின் கருத்தை எல்லாம் உள்வாங்கிய அருட்பிரகாசராகிய சிவப்பிரகாசர், தம் குருநாதராகிய ஆதிசிவஞானபாலய சுவாமிகள் தாம் சிவன் போல் வந்து காக்கின்றார் என்பதை,

திருவருளால் என்னைத் தெரிவிக்க இங்குத்
திருவுருவாய் வந்த சிவஞான தேசிகனோ

(சிவஞான பாலய தேசிகர் தாலாட்டு, தாழிசை-1)

என முத்தாய்ப்பாக மொழிந்தருளுகின்றார்.

கயிலைவாசனுடைய எளிவந்த தன்மையைப் (சௌலப் பியம்) பாடுவதில் சிவப்பிரகாசர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராகத் திகழ்ந்திருக்கிறார்கள். அதற்குச் சான்றாகச் சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழில், வருகைப் பருவத்தில் அருளிச் செய்திருக்கிற ஒரு பாடலைச் சொல்லலாம். "ஏ! சிவபெருமானே! நீ மகரந்தங்களைக் கொட்டும் குளிர்ச்சி மிகுந்த மலர்களைச் சூடியிருப்பவன்; குளிர்ச்சி பொருந்திய பிறைநிலாவைத் தலையிலே அணிந்திருக்கிறாய்; குளிர்ச்சி பொருந்திய கயிலையில் வீற்றிருக்கிறாய்; அணிகலனாகப் பாம்புகளை அணிந்திருக்கிறாய்! அப்படிப்பட்ட நீ ஒரு வன்தொண்டருக்காக நடுஇரவில், செந்தாமரை போன்ற திருவடிகள் நோகும்படியாகத் திருவாரூர்த் தெருக்களில் நடக்கலாமா? பரவை நாச்சியார் என்ற ஒரு மாதரசியின் வீட்டை நோக்கித் திரும்பித் திரும்பி நடந்தாயே! மேலும், ஒரு தூதனாக அல்லவா நடந்தாய்! அத்தகைய நீ என்னை நோக்கி ஏன் வரமறுக்கிறாய்? என்னை நோக்கி நடந்தால் உனக்கு ஒரு பழிகூட வராதே!" என்று கல்லும் கரையப் பாடுகிறார், அருட்பிரகாசர். பாடல் வருமாறு;

பைந்தாது உகுக்கும் நறுங்கொன்றைப்
பனிமா மலரும் குழவிஇளம்
பயில்வெண் மதியும் துளைஎயிற்றுப்
பாம்பும் சுமக்கும் அன்றுநீ
செந்தா மரைச்சே வடிநோவத்
திரும்பித் திரும்பி ஓர்இரவில்

Digitization by Hindu Heritage Foundation of America- HHFA(USA)

சேல்வென்று அகன்ற அரிமதர்க்கண்
சிலைக்கூன் புருவத் தரளநகை
நந்தா விளக்கின் திருமனைக்கு
நாவல் நகரின் வன்தொண்டன்
நடத்த ஒருதூது ஆளாகி
நடந்த உனக்குஇன்று அடியேம்பால்
வந்தால் வரும்ஓர் பழியுண்டோ?
மதுரக்கனியே வருகவே
மயிலை வரையிற் சிவஞான
மணியே வருக வருகவே! **(சிவ.பிள்.53)**

சிவப்பிரகாசர் போற்றி வளர்த்த சிவத்துவம், பின்னால் வந்த அருளாளர்களுக்கு ஊட்டச்சத்தாக அமைந்தது. சுவாமிகளுடைய தாக்கத்தாலும் செல்வாக்காலும் ஈர்க்கப் பட்ட அப்பய்ய தீட்சிதர் ஓர் உருக்கமான பாசுரத்தை ஆக்கித் தந்திருக்கிறார். "சிவபெருமானே! உன் திருமுடியில் குளிர் கங்கையை அணிந்திருக்கிறாய்! குளிர்ந்த நிலவையும் தலையில் அணிந்திருக்கிறாய்! உன்னுடைய இடப்பக்கத்தில் மலையரையன் மகள் இடம் பெற்றிருக்கிறாள். அவளோ என்றும் ஈர நெஞ்சுடையவள்; மேலும் உனக்கு அன்றாடம் சந்தன அபிடேகம் வேறு! இத்தகு அதி குளிர்ச்சியை எங்ஙனம் தாங்குவாய்? சதா துன்பக் கனலில் கனன்று கொண்டிருக்கும் என் இதயம் தவிர, உனக்குப் புகலிடம் ஏது? வந்தருள்" எனத் தீட்சிதர் சமத்காரமாகப் பாடுகிறார். இத்தகைய சாதுர்யத்தைத் தீட்சிதர், சிவப்பிரகாசரிடம்தானே பெற்றிருக்க வேண்டும்.

சிவப்பிரகாசர் வாழ்ந்த காலத்தில் மாறுபட்ட சமயங்களும் வேறுபட்ட சமயங்களும் புகுந்து தமிழ்ப் பண்பாட்டினைச் சீரழித்துக் கொண்டிருந்தன. அதனால், சங்கமர்கள் சிவநெறியில் பெருநெறி பிடித்தொழுக வேண்டும் என்று எண்ணிய சிவப்பிரகாசர், சமயவாதிகளுக்கு ஓர் கற்பு வேண்டும்; கொண்டவனை அன்றிப் பிறரறியாக் குலமகள் போலச் சைவர்கள் திகழ வேண்டும் என வற்புறுத்த வந்தவர், **"கண்ணுதல் ஒருவற் சார்ந்த கற்புடைச் சைவம் வாழ்க"** (பிரபு.1155) என்றார். ஆண்களுக்கும் பெண்களுக்கும் கற்பு

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

வேண்டும் என அருளாளர்கள் இதுவரையில் வலியுறுத்தி வந்தனர். ஆனால், சமயிகளுக்கே ஒரு கற்பு வேண்டும் என்றார், சிவப்பிரகாசர்.

பிள்ளைகள் ஒழுக்கத்தில் குறைந்தால், அது பெற்ற தாயையும் பாதிக்கும். அதுபோல் சைவர்கள் பிறதெய்வங்களைக் கும்பிட்டால், அது பெற்ற தாயாகிய பெரிய நாயகியைப் பாதிக்கும். அதனால், 'பெரிய நாயகியே! உன் பிள்ளைகள் சமயவொழுக்கத்தில் குறையாமல் பார்த்துக்கொள்' எனப் பெரிய நாயகியை வேண்டுவது போன்று, சமயவாதிகளை எச்சரிக்கின்றார், சிவப்பிரகாசர். பாடல் வருமாறு;

சோதிப் பதியன்றி வேறுஒரு தெய்வம் தொழுதற்குஇல்லை
ஓதின் பிறர்என அச்சம் உறாமல் உயிர்கள் எல்லாம்
நீதிப் புதல்வர்கள் ஆயின;ஆதலின் நீகொள் கற்புப்
பேதிப்பது அன்றுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மையே

(பெரி.கலி.9)

மேலும், இக்கருத்தை வலியுறுத்த வந்த சிவப்பிரகாசர் தமது நெஞ்சுவிடுதூது என்னும் சிற்றிலக்கியத்தில், **"நாங்கள் கரவுஇல் இவர் வடிவம் கண்டநாள் தொட்டு இங்கு இரவுபகல் இல்லை என்பார்"** *(சிவ.தூது.கண்ணி108)* என அகவாழ்க் கையில், ஒரு தலைவி பேசுவதுபோல் எடுத்துரைக்கின்றார்.

"வேதங்கள் ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனாகிய சிவபெருமானின், உயரத்தை நோக்க, தம்முடைய உயரம் தாழ்வாரத்திற்குக் கீழே என்பதை நன்குணர்ந்த சிவப்பிரகாசர், மற்றவர்களுக்கும் அந்த எண்ணம் வேண்டும் என அறிவுறுத்த எண்ணுகிறார். குறிப்பாக வீரசைவத்தார்க்கு அவ்வண்ணம் வேண்டும் என்று கருதிய சுவாமிகள், "சிவபெருமானே, உனக்கு யான் ஆட்பட்டு எல்லையில்லா ஆனந்தத்தைப் பெற்றேன்; ஆனால், என்னால் உனக்கு எந்தப் பயனும் இல்லையே" என்பதை, "நசையினால், யாம் புணர்ந்து இன்பம் இவரால் பெறுவது அல்லால், தாம் புணர்ந்து இன்புறார் தாம் என்பார்" என நெஞ்சுவிடுதூதின் *(கண்ணி-106)* மூலம் தெரிவிக்கின்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

இக்கருத்தைச் சிவப்பிரகாசருக்கு முன்னரும் பாடி-யிருக்கின்றனர்; பின்னரும் தொடர்ந்து இருக்கின்றனர். மாணிக்கவாசகர்,

தந்தது, உன் தன்னை; கொண்டது, என் தன்னை;
சங்கரா! ஆர் கொலோ, சதுரர்?
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்;
யாது நீ பெற்றது ஒன்று, என்பால்?

(கோயில்.திருப்பதிகம்10)

எனக் கோயில் திருப்பதிகத்தில் பாடிச் செல்கிறார். இதே செய்தியைப் பட்டினத்தார் ஓர் உவமையின் மூலம் எடுத்துரைக்கின்றார். தங்கத்தால், தங்கத்தை வைத்திருப்பவனுக்குப் பயனுண்டு. தங்கத்தை வைத்திருப்பவனால், தங்கத்திற்கு ஒரு பயனும் இல்லை என்பது பட்டினத்தார் கருத்தாகும். அவருடைய பாடல் வருமாறு:

பொன்னால் பிரயோசனம் பொன்படைத்
தார்க்குண்டு; பொன் படைத்தார்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்கங்குஅங்கு
ஏதுண்டு? அத்தன்மையைப் போல்
உன்னால் பிரயோசனம் வேணது எல்லாம்
உண்டு; உனைப் பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு
காளத்தி யீச்சுரனே!

சிவம் பெருக்க வந்த சிவப்பிரகாசர், கயிலைநாதனின் காட்சியையும் மாட்சியையும் நம் மனங்கொள்ளுமாறு எடுத்துரைக்கின்றார். சிவனைப் பாடும்போது சிவப்பிரகாசருடைய உருக்கமும் நெருக்கமும் நம் நெஞ்சைத் தொடுகின்றது. சிலர் தொட முடியாத உயரங்களை எல்லாம் தொட்டிருக்கிறார். சிலர் விட்டுப் போனவற்றை எல்லாம் சுட்டிக் காட்டியிருக்கின்றார். சங்கமர்கள் நடந்து போவதற்கு ஒற்றையடிப் பாதையாக இருந்த சிவானுபவங்களை, நெடுஞ் சாலையாக்கித் தந்திருக்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவப்பிரகாசரின் சமயப்பொறை

வீரசைவத்திற்கு ஒரு விளைநிலமாக இருந்த சிவப்பிரகாசர், தம்முடைய இதயத்தில் குறுக்குச்சுவர் எழுப்பிக் கொண்ட வரல்லர்; மாறாக இமயம்போல் விசாலமான இதயம் படைத்தவரே! சமணசமயம் தமிழர்களுடைய கலாச்சாரச் சீரழிவுக்குக் காரணமான ஒன்றானதால், அதனை மட்டும் அங்கீகரிக்கவில்லை, சிவப்பிரகாசர். மற்றபடி வைதிக சமயத்தின் அனைத்து அங்கங்களையும் சம கண்ணோட்டத் தோடேயே பார்த்திருக்கிறார்.

சிவப்பிரகாசர் வருணிக்கும் வனவச நகரில், வேந்தர்கள் விற்போர் புரிந்து கொண்டிருப்பராம். அப்படி விற்போர் புரிபவர்கள் யாரென்றால், வைணவத்தில் ஓர் அவதாரமாகிய, இராமபிரானைப் போன்றவர்களாம். **"சொற்போர்... விற்போர் புரிவர், நெடியசிலை இராமனை யனைய விறல் வேந்தர்"** (பிரபுலிங்கலீலை-97) எனப் பாடுகின்றார். கூர்ம புராணத்தில் **"தரித்தவரி வில்லிகளில் தாழ்தடக்கை இராமன்"** என வருணித்ததுபோல், சிவப்பிரகாசர் அடைமொழி கொடுத்து, **"நெடியசிலை இராமன்"** எனப் போற்றுவது, சிவப்பிரகாசரின் சமரச மனப்பான்மையைக் காட்டுவதாகும்.

நால்வர் பெருமக்கள் ஏகனாகிய சிவபெருமானை முதன்மைப்படுத்திப் பாடுவார்களே தவிர, அநேகரைப் பாட மாட்டார்கள். அம்பிகையைக் கூட அர்த்தநாரீசுவரரைப் பாடும்போது, சேர்த்துப் பாடுவார்களே தவிர, தனித்துப் பாடுவதில்லை. ஆனால், சிவப்பிரகாசர் அழகனாகிய முருகன்மீது அந்தாதியே பாடியிருக்கிறார். திருவெங்கைக் கோவையில், ஒரு தலைவனுக்குரிய தலைவன் எப்படி-யிருப்பான் என்றால், முருகப் பெருமானைப் போல இருப்பான் என்று மகிழ்ந்து பாடுகிறார்.

நான்ற சடிலத் திருவெங்கை நாயகர் நல்கும்ஒரு
கான்ற குருதிக் குடர்மாலை வேலுடைக் காளைஎழில்
போன்றஉருவத்துஇறைவர்மென்தோள்இடுபூந்தொடைகண்டு
ஈன்ற பொழுதின் பெரிது உவவா நிற்கும்என் அனையே

(285)

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

நாகப்பட்டினத்தில் ஜீவசமாதி அடைந்தவர் கோரக்க சித்தர். அல்லம தேவரிடத்தில் உபதேசம் பெற்று, தத்துவ மசி தத்துவத்திற்கு இலக்கணமாய் நின்றவர். அவரைச் சிவப்பிரகாசர், **"வானவரும் அறிவரிய பெரும்புகழ் கோரக்கன்"** எனப் போற்றிப் புகழுகின்றார்.

சைவ நாயன்மார்களைப் பாராட்டும்போது, அல்லமரையும் வசவரையும், சென்னவசவரையும் எப்படிப் போற்றி மகிழ்ந்தாரோ, அதைப்போலவே மதித்துப் போற்றுகிறார் சிவப்பிரகாசர். சிவபெருமான் பொருட் செல்வத்திற்காகக் குபேரனைத் தோழனாகக் கொண்டதுபோல், கல்விச் செல்வத்திற்குச் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தோழனாகக் கொண்டானாம்.

அறிந்து செல்வம் உடையானாம்
அளகைப் பதியான் தோழமைகொண்டு
உறழ்ந்த கல்வி உடையானும்
ஒருவன் வேண்டும் எனவிருந்து
துறந்த முனிவர் தொழும் பரவை
துணைவா நினைத்தோ ழமைகொண்டான் (நா.நா.7)

சுந்தரரைப் பாராட்டியதுபோன்றே, அப்பரடிகளையும் "சைவநலம் கூர்ந்து மிளிர்தரும் நாவரசே" எனப் போற்றிப் புகழுகின்றார்.

கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாசர், பௌத்தக் காப்பியமாகிய மணிமேகலையை இயற்றிய சீத்தலைச் சாத்த னாரையும், சமணக் காப்பியமாகிய சீவகசிந்தாமணியைத் தீட்டிய திருத்தக்க தேவரையும் விகற்பமின்றி நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார்.

திருவெங்கைக் கோவையில் (107) வரைவுவேண்டி தலைவன் மடலேறப் போகிறான். அப்பொழுது தலைவி ஓவியத்தைப் பனைக்கருக்கில் தீட்டவேண்டும். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சிவப்பிரகாசர் "ஏ! தலைவனே! தலைவியினுடைய மற்ற உறுப்புகளை நீ வரைந்து விடலாம். ஆனால், அவளுடைய மொழியழகை நீ எப்படித்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

தீட்டுவாய்? மணிமேகலை, சிந்தாமணி, திருக்கோவையார் போன்ற நூல்களுக்குக் கூட உரை எழுதி விடலாம்; ஆனால் தலைவியின் உரையைத் தீட்ட முடியாதே" எனப் பாடுகிறார்.

மந்தா கினியணி வேணிப்பி ரான்வெங்கை மன்னவநீ
கொந்தார் குழல்மணி மேகலை நூல்நுட்பம் கொள்வதுஎங்கள்
சிந்தா மணியும் திருக்கோவை யும்எழுதிக் கொளினும்
நந்தா உரையை எழுதல் எவ்வாறு நவின்றருளே

எனப்பாடும் சிவப்பிரகாசரின் இதயம் விசாலமானது; வேலி-யில்லாதது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவப்பிரகாசர் போற்றும் அருளாளர்கள்

நல்லாற்றூர்ச் சிவப்பிரகாசர் தோத்திர, சாத்திரங்களை அருளிச் செய்ததில் சரித்திரம் படைத்தவர் என்பதால், அவர் சமயகுரவர். அதேநேரத்தில் ஆதிசிவஞான பாலய சுவாமிகளிடம் தீட்சை பெற்று, அவருடைய அத்தியந்த சீடராகவும் திகழ்ந்து தத்துவ நூல்களை அருளியதால் சந்தான குரவரும் ஆவார். சைவம், வீரசைவம் இரண்டிற்குமே அவர் சமய குரவராகவும் விளங்குகின்றார். இவருடைய படைப்புகள் சிற்றிலக்கியம், நீதிஇலக்கியம், சமய இலக்கியம், தருக்கநூல், சைவசித்தாந்தம், வீரசைவ சித்தாந்தம், வேதாந்தம் எனும் களங்களில் அமைகின்றன.

இவருடைய படைப்புகள் அனைத்தும் இலக்கிய, சமய, தத்துவங்களின் ஞானக்கருவூலங்களாகத் திகழ்கின்றன. இவற்றுள் தலவெண்பா, கொச்சகக் கலிப்பா, திருவெங்கை அலங்காரம் என்னும் மூன்று நூல்களும் கிடைத்தில. ஏசுமத நிராகரணம் என்னும் நூல் ஓலைச்சுவடி வடிவத்தில் இலண்டன் அருங்காட்சியகத்தில் இருப்பதாகச் சொல்லுகின்றனர். இவர் தமிழ், வடமொழி, கன்னடம் ஆகிய மும்மொழிகளில் கற்றுத்துறை போகியவராகத் திகழ்ந்திருக்கிறார். சுவாமிகள் கன்னடம், வடமொழியில் வல்லுநர் என்பதற்குப் பிரபுலிங்கலீலை ஒன்றே நிதர்சனமான சான்றாகும்.

சுவாமிகளுடைய அருளிச் செயல்களில் காணப்பெறும் செறிவையும், நிறைவையும் நோக்கிக் **கவிசார்வ பௌமர்** என்றும் **கற்பனைக் களஞ்சியம்** என்றும் கற்றவர்கள், பட்டம் வழங்கிப் பாராட்டியுள்ளனர். திருவள்ளுவருடைய கருத்துகள், இவருடைய அருளிச் செயல்களில் உப்பாகக் கரைந்திருப் பதாலும், கண்டங்களாக மிதப்பதாலும், **வள்ளுவப்பிரகாசர்** என வழங்கப்படுகிறார். ஒருமுறை பொம்மபுரக் கடற்கரையில், தம்பி கருணைப்பிரகாசருடன் அமர்ந்திருந்தபோது, நன்னெறிப் பாடல்கள் நாற்பதைக் கடற்கரை மணலிலே எழுதி விடுகிறார். திருமடத்திற்கு வந்தபிறகு தம்முடைய தம்பியை அனுப்பி, அவற்றை ஓலையில் எழுதி வரச் செய்கிறார். நீதிக் கருத்துகளை நினைத்த மாத்திரத்தில் தீட்டியதால் அவர் ஆசுகவி என்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அழைக்கப் பெறுகிறார். நன்னெறிப் பாடல்கள் நாட்டுக்கே நன்மை பயப்பதால், அவர் **நன்னெறிப் பிரகாசர்** என்றும் நவிலப்படுகிறார். நல்லாற்றூரில் இட்டலிங்கப் பரசிவத்தில் கலந்தமையால், **நல்லாற்றூர்ச் சிவப்பிரகாசர்** என்றும் அழைக்கப்படுகிறார். அருட்பிரகாசராகிய சிவப்பிரகாசர் புரட்டாசித் திங்களில் - முழுமதி நாளில் இட்டலிங்க பரசிவத்தில் ஐக்கியமானார்.

சமய உலகிலும், இலக்கிய உலகிலும் சிவப்பிரகாசர் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறார். அருணகிரிநாதருக்கு முன், அருளாளர்கள் உலகத்தில் புலமைக் காய்ச்சல் இருந்தது. “ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போடு” எனக் கம்பர் அறிவுறுத்தியதாக ஒரு செவிவழிச் செய்தியுண்டு. பாரதி காலத்திலேயே “பார் அதி சின்னப்பயல்” என அழைக்கும் அளவுக்குப் போட்டி பொறாமை இருந்திருக்கின்றதே! இன்றைக்கும் ஆங்கிலத்தில் அதைப் ‘புரொபஷனல் ஜலசி’ (Professonal Jealousy) என்று அழைக்கிறார்கள்.

கரடுமுரடான அந்தப் போட்டி உலகத்தை உடைப்பதற்கு ஆதிசங்கரர் சற்று அசைத்துப் பார்க்கிறார். தமக்குச் சற்று முன்னே வாழ்ந்த திருஞான சம்பந்தரைத் ‘திராவிட சிசு’ என்று பாராட்டுகின்றார். தொடர்ந்து, ‘பார்வதியே! உமது ஸ்தனப் பாலானது இருதயத்திலிருந்து அமிர்தப் பிரவாகமாகவும், சரசுவதியின் வாக்கு ராசியின் பிரவாகமாகவும் பெருகுகின்றது என நினைக்கிறேன். ஏனெனில், தயையுள்ளவளான உன்னால் கொடுக்கப்பட்ட ஸ்தனப் பாலைக் குடித்த திராவிடப் பிள்ளை (சம்பந்தர்) சிறந்த கவிகளுக்குள் முதன்மையாகி, எல்லாக் கவிகளின் மனத்தைக் கரைக்கும்படியான கவியாகிவிட்டார்” எனச் சௌந்தர்ய லகரியில் அருளிச் செய்கிறார்.

அடுத்து வந்த அருணகிரிநாதர் அந்தக் கரட்டுப்பாதையை ஒரு கடப்பாரை கொண்டு கொத்திப் பார்க்கிறார். திருஞான சம்பந்தரைத் திருப்புகழில் ‘புவியதனில் பிரபுவான புகலியின் வித்தகர் போல் அமிர்தகவி தொடை பாட அடிமை தனக்கு அருள்வாயே’ எனத் துணிந்து பாடிவிடுகிறார். தொடர்ந்து சுந்தரரையும் மாணிக்கவாசகரையும் தம் பாடல்களில் பாராட்டிப்

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

பதிவு செய்கிறார். அப்பரடிகளைப் பற்றிய பாடல்கள் கிடைக்கவில்லையே தவிர, அவருடைய தமக்கையை, "மாது புகழ் வளர்க்கும் திருவாமூர்' எனப் புகழ்ந்து பாடுகிறார். ஆதி சங்கரராலும், அருணகிரி நாதராலும், ஒரு துரும்பளவு தான் செய்ய முடிந்ததே தவிர, சிவப்பிரகாசரைப் போல ஒரு மலையளவு செய்யமுடியவில்லை.

சிவப்பிரகாசர், ஆதிசங்கரரும் அருணகிரியாரும் தொட்டதை ஒரு சவாலாகவே ஏற்று, வாயார, மனமார அருளாளர்களைப் பாராட்டுகிறார். 'முன்னோர் மொழியும் பொன்னேபோல் போற்றுவோம்' என்பதோடு, முன்னோர்களையும் வானளவு பாராட்ட வேண்டுமென்று முயலுகிறார். பிரபுலிங்க லீலையில் நால்வர் பெருமக்களுக்கும் ஒருசேர வணக்கத்தைத் தெரிவித்து விட்டுப் பின்னர் தனித்தனியே வாழ்த்துகிறார்.

"எலும்பைப் பெண்ணாக்கிய ஞானசம்பந்தருக்கும், நீற்றறையைப் பொய்கையாக்கி மிதந்த நாவுக்கரசருக்கும், செங்கல்லைப் பொன்னாக்கிப் பெற்ற சுந்தரருக்கும், நரியைப் பரியாக்கிய மணிவாசகருக்கும் வணக்கம்" என்கிறார்.

பெண்ணிற்கு அரசு தானாக என்பு பெருநீற் றறைபிரச
வண்ணக் கமல மலர்ப் பொய்கை யாகச் செங்கல் மாழையாய்
நண்ணச் சிறிய நரிகள் முடங்கு உளைய பரியாய் நகர்புகுதப்
பண்ணற்கு உரிய அமுதுறழ்முத் தமிழ்நால் வரையும் பணிகுவாம்.

(பிரபு.லீலை.துதிகதி-9)

என்பது பாடல்.

அடுத்துக் கைலாயத்தில் உமாதேவி பெருமிதத்தோடு அமர்ந்திருக்கிறாள்; எதனால் என்றால், ஞானசம்பந்தருக்கு ஞானப்பாட்டுப் பாடத் திருவமுது தந்த பூரிப்பால்.

அரவு லாம்சடை அண்ணலைப் பிள்ளைதான்
பருவம் மூன்றினில் பாடஇன் பால்தரும்
பொருவுஇல் கொங்கைப் புகழ்எனப் பொங்குஒளி
மருவும் ஆர மணிவடம் தாழ்ந்துற.

(பிரபு.லீலை,கைலாயகதி,22)

என்பது பாடல்.

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

இன்னும் ஞானசம்பந்தராகிய குழந்தை தொடர்ந்தழுதால் சிவபெருமான் தன்னையே கொடுப்பான் என்பதையும் புனலாற்றில் இட்ட ஏட்டினை எதிர்த்து நீந்த விடுவான் என்பதையும், "கண்பிசைந் தொருசே யின்னுங் கலுழினுந் தனைக் கொடுப்பான்", "ஏட்டினைப் புது நீராற்றில் எதிர் கிழித்தேற விட்டான்" எனும் பாடலடிகளால் புலப்படுத்து கிறார் சுவாமிகள்.

ஞானசம்பந்தரை உயர்த்துவதற்காகத் தம்மைத் தாழ்த்திக் கொள்ளவும் சிவப்பிரகாசர் தயாராகிவிட்டார். சோணசைல மாலையில், "ஏ! சிவபெருமானே! ஞானசம்பந்தருக்குப் பொற்கிண்ணத்தில் பால் கொடுத்தது போல், எனக்குக் கொடுக்காவிட்டாலும், அந்தக் கிண்ணத்தைக் கழுவிய கழுநீரையாவது எனக்குத் தரக்கூடாதா? ஞானசம்பந்தருக்குத் திருவமுது கொடுத்து ஆட்கொண்டது போல் என்னை ஆட்கொள்ளா விட்டாலும், நாவுக்கரசருக்குக் கொடுத்த சூலை நோயைக் கொடுத்தாவது, என்னை ஆட்கொள்ளலாகாதா? என்று உருக்கத்தோடு இறைவனை வேண்டுகிறார்.

இழையெனத் தளர்சிற் றிடைஉணா முலையாள்
எனக்குவண் புகலிவேந்து அயின்ற
கழுமணிப் பசும்பொற் குலவுபாற் கிண்ணம்
கழுவுநீர் வார்ப்பதற்கு உரையாய் *(45)*

என்பதும்,

யாவுமாம் உமையுண் ணாமுலை முலைப்பால்
ஈந்துபா டச்செயாய் எனினும்
மேவுமா துயர்செய் சூலைநோய் எனினும்
விடுத்துநிற் பாடுமாறு அருள்வாய் *(32)*

என்பதும் சுவாமிகளுடைய அருளிச்செயல்.

ஞானசம்பந்தருடைய பெருமையை உயர்த்துவதற்காகச் சிவப்பிரகாசர் தாழ்வின், தாழ்விற்கே செல்லுகிறார். "ஏ! பெரிய நாயகி அம்மையே! என் உள்ளத்தில் படிந்திருக்கும் ஆணவமாகிய நோய்க்கு மருந்து தேடி, உன்னை வந்து பணிவோடு தொழுதேன். ஞானசம்பந்தருக்குப் பொற்கிண்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

ணத்தில் சுரந்து பாலூட்டிய நீ, எனக்கு உன்னுடைய விரல் நுனி நகத்தால் கூடத் தொட்டுத் தெறிக்கவில்லையே! உன் கையிலிருக்கும் கிள்ளையை எவ்வாறு வாடவிட்டாயோ, அதுபோல் என்னையும் வாட விட்டு விட்டாயே!" எனும் கருத்தை,

உள்ளத்து உறுபிணி யேற்கு மருந்துக்கு என்று உன்னைவந்து
மெள்ளத் தொழவும் திருமுலைப் பால்மெல் விரல்நுதியால்
தெள்ளித் துளியள வாயினும் தொட்டுத் தெறித்திலையுன்
பிள்ளைக்கும் கிள்ளைக்கும் பால்கொடுத்தால்என்பெரியம்மையே

(பெரி.கலி.15)

எனும் பாடல்வழிப் புலப்படுத்துகின்றார் சிவப்பிரகாசர்.

மற்ற நாயன்மார்களை விட இயற்பகை நாயனாரின்மீது, வாசகர்களுக்கு ஒரு பரிவு ஏற்படுவது இயற்கை. சுந்தரமூர்த்தி நாயனாரே வியந்து, 'இல்லையே என்னாத இயற்பகை என்றார்' என்றார். அவருடைய மனைவியைக் கேட்டுச் சோதிக்க வந்த இறைவனே இறுதியில் சோதனைக்கு ஆளாகி, "செயற்கரும் செய்கை செய்த தீரனே ஓலம்! அன்பனே ஓலம்! ஓலம்!" என்று ஓலமிட்டு ஓடுகின்றான். பெரியபுராணத்தை மேலோட்டமாகப் படிப்பவர்களுக்கு இதுவொரு நெருடலைத் தரும் பகுதி. ஆனால், இறைவன் அப்படிக் கேட்டதற்கு ஓர் அழுத்தமான காரணம் உண்டு. இயற்பகை நாயனார் உலக இயல்புக்கு ஒவ்வாத ஒன்றைக் குறிக்கோளாக ஏற்கிறார். "யாதொன்றும் என்பக்கம் உண்டாகில் அன்னது எம்பிரான் அடியவர் உடைமை" என்பதே அவர் எடுத்த உறுதிப்பாடு. இந்தச் சபதத்தை இறைவனைக் கேட்டு அவர் எடுக்கவில்லை. எனவே ஏதாவதொரு கள்ளத்தவ வேடர், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டால் என் செய்வது என்று, இறைவனே அந்தப் பழியை ஏற்கத் தயாராகியிருக்கலாம். எனவேதான் தெய்வச் சேக்கிழார் இயற்பகையின் பெற்றோரிட்ட பெயரைச் சொல்லாமல், தாமே ஒரு புனைபெயரைச் சூட்டுகின்றார்; மிகவும் எச்சரிக்கையாக!

என்றாலும், அருட்பிரகாசராகிய சிவப்பிரகாசருக்கு மனைவியைக் கேட்டு வந்தது ஒரு நெருடலைத் தந்திருக்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America (USA)

என்றாலும், தெய்வச் சேக்கிழாரைத் தொடுகிறபோது மிகவும் எச்சரிக்கையோடும் சர்வ ஜாக்கிரதையோடும் இருக்க வேண்டும் என்பதை நன்குணர்ந்த சிவப்பிரகாசர், சிவபெருமான் மீதோ, சேக்கிழார் மீதோ குறைகண்டு விடாமல், பெரியம்மை பக்கம் அந்த அம்புக்குறியைத் திருப்பி விடுகிறார். யாரையும் குறை சொல்லாமல், பெரிய நாயகியின் பொறையுடைமையாகவும் சகிப்புத் தன்மையாகவும் சுவாமிகள் பார்க்கிறார். மேலும், தற்கொண்டானின் தகைசான்ற சொற்களைக் காக்கும் நாயகியாகப் பெரியநாயகியைப் பார்க்கின்றார், சிவப்பிரகாசர்.

இவ்விடத்தில் சாதாரண மக்களுக்குப் புலப்படாத, ஊனக் கண்களுக்குத் தெரியாத ஞானக்கண்களுக்கு மட்டுமே மட்டுப்படக் கூடிய ஓர் உலகியலைச் சுவாமிகள் குறிப்பிட்டுக் காட்டுகிறார். நீந்தத் தெரியாத ஒருவன் குளத்துநீரில் வீழ்ந்து விட்டால், உடனே அந்தக் குளம் காவுவாங்கி விடாதாம்! மூன்று முறை அவனுக்கு வாய்ப்புக் கொடுக்குமாம். (மூழ்கியவனை மேலே மேலே கொண்டு வரும் மூன்று முறை) அதுபோல பெரிய நாயகி இறைவனுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார் போலும் என்று சமத்காரமாகப் பாடுகிறார். சிவப்பிரகாசரைத் தவிர, வேறு சராசரி மனிதர்களால் இந்த அனுபவத்தைப் பாட முடியாது.

இழைபொறுத் தாற்பொறை தானென்ப ரானல் லிசைப்புலவர்
மழைபொறுத் தார்புனன் முக்காற் பொறுக்கும் வழக்கதுண்டே
உழைபொறுத் தார்நல் லியற்பகை யார்மனைக் குற்றவொரு
பிழைபொறுத்தாய்நன்று காண்குன்றை வாழும் பெரியம்மையே.

என்பது பாடல்.

சிவப்பிரகாசருடைய கூர்மையை நியாயப்படுத்துதல் போல, திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை அமைந்திருக்கிறது. 'பிறனில் விழையாமை' எனும் அதிகாரத்தை அடுத்து ஏன் 'பொறையுடைமை' எனும் அதிகாரத்தை வைத்தார் என்று பரிமேலழகர் எழுதும் அதிகார அடைவு, அட்சரம் இலட்சம் பெறும்.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

"பொறையதாவது காரணம் பற்றியாதல், மடமையானாதல் ஒருவன் தமக்குத் தீங்குசெய்தவழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தலை யுடையதாதல், நெறியின் நீங்கிய செய்தாரையும் பொறுத்தல் வேண்டும் என்ற கருத்தால், பிறனில் விழையாமையின் பின் பொறையுடைமையை வைத்தார் என்றலும் ஒன்று" என்பது பரிமேலழகர் தரும் அதிகார அடைவு. இதன்படிப் பார்த்தால், சிவப்பிரகாசர் பெரியம்மையைப் பார்த்துக் கேட்ட நியாயம் புலப்படும்.

சிவப்பிரகாசர் தம்முடைய படைப்புகளில் கணம்புல்லர், அரிவாட்ட நாயனார், ஏயர்கோன் கலிக்காம நாயனார், திருக்குறிப்புத் தொண்டர், மானக்கஞ்சாறனார், கலிக்கம்ப நாயனார், சண்டேசுரர், கோட்புலியார், அதிபத்தர், அமர்நீதி நாயனார், கழற்சிங்கர், மங்கையர்க்கரசியார், காரைக்கால் அம்மையார் போன்ற இருபதுக்கு மேற்பட்ட நாயன்மார் களைப் பாடியிருந்தாலும், அவருக்குத் தேவார மூவர் முதன்மையாகப் படுகின்றனர். அதனை ஒரு நாடகக் காட்சி மூலம் வெளிப்படுத்துகிறார். பிரபுலிங்க லீலையில், அல்லமர் அரும்பசி கெட உண்டது ஆரோகண கதியில் 36ஆம் பாடலில் சுவையான செய்தி சொல்லப்படுகிறது. அல்லமருக்கு மூவர் தேவாரப் பாடல்களைப் போல வாழை, மா, பலா போன்ற முக்கனிகளையும் மற்றவர்களுடைய பாடல்களைப் போல, திராட்சை, மாதுளை போன்ற பழங்களையும் கொண்டுவந்து பால்குளத்தில் நிரப்பினார்கள் என்பதுவே அச்செய்தியாகும்.

உளங்கனி மூவர் செய்யுள் ஒத்தமுக் கனியும் ஏனோர்
வளங்கெழு தொடர்பு போலும் மற்றைய பழமும் தூர்த்தார்

என்று சுவாமிகள், மூவர் தேவாரத்திற்கு முதன்மை கொடுப்ப தற்காக இத்தகைய ஓர் உத்தியைக் கையாளுகிறார்.

சிவப்பிரகாசர், ஒற்றையடிப்பாதை மனம் கொண்டவரல்லர்; நாற்கரச் சாலை மனம் கொண்டவர். அதனால், தமிழ்நாட்டில் அவதரித்த நாயன்மார்களை, சிவஞானிகளைப் போற்றியதோடு மட்டுமல்லாமல், கன்னட நாட்டில் தோன்றி வீரசைவத்திற்கு வீரியம் தந்த அருளாளர்களையும் மனமார, வாயார

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆராதனை செய்கிறார். ஆன்மிகத்திற்குச் சாதி, மொழி, நாடு கிடையாதென்பதைத் தம் வாழ்க்கையின் மூலமும், அருளிச் செயல்களின் மூலமும் நிரூபித்துள்ளார் சுவாமிகள்.

வீரசைவத்தின் பிதாமகராகிய அல்லமரைப் பிரபுலிங்க லீலையின் நாயகனாக ஆக்குகின்றார். உலகப் பொருள்கள் எல்லாம் தன்னுடையதாய் விளங்கத் தான் அவற்றின் மேலாய் விளங்கும் ஆற்றலைப் "பிரபுத்துவ ஆற்றல்" என்பர். அவ்வாற்றலோடு கூடிய இறைவனைப் பிரபுலிங்கம் என்பர். அத்தகைய பிரபுலிங்கத்தின் அவதாரமாகிய அல்லமரை நினைக்கின்றார் சிவப்பிரகாசர். அவரைக் காவியத் தலைவராக வைத்து, பிரபுலிங்க லீலை என்னும் பார காவியத்தைப் (பெருங்காப்பியத்தை) பாடுகின்றார். அந்த அல்லமரை எப்படிச் சுவாமிகள் அறிமுகப்படுத்துகின்றார் தெரியுமா?

மாயையோடு வாதிட்டு, அவளைப் புறந்தள்ளிய வீரசைவ குலதிலகம், அல்லமர். முக்காலத்தையும் உணரும் ஆற்றல் வாய்ந்த முனிவர்கள் எல்லாம் கூட, அவரை மனம், மொழி, மெய்யால் வணங்கித் தவம் கிடக்கும் தலைவர் என்பதை,

மாயைதனை வாதித்துத் தள்ளுபுதன்
நிலைநின்று மாயா வாதி
ஆயினன்நல் வீரசைவ சித்தாந்த
குலதீபம் ஆயினோன் என்று
தூயமுனி வரர்எல்லாம் அல்லமனைத்
தொழுது தவந்தொடங்கி வாழ்ந்தார்

(பிரபு.லீலை. 436)

எனும் செய்யுளால் விளக்குகின்றார் சிவப்பிரகாசர். மேலும், மாயையின் தலையை மிதிக்கும் அல்லமன் என்றும் வீரகர்ஜனை செய்கின்றார் சுவாமிகள்.

அடுத்து, பசவரை அறிமுகப்படுத்தும்போது, **"கள்ள வேடம் புனைந்திருந்த கள்வரெல்லாம் களங்கமறும், உள்ளமொடு மெய்யடியாராக, உள்ளத்து உள்ளும் அருள்வள்ளல் வசவேசன்"** (பிரபு.லீலை.6) என்று போற்றிப் புகழ்வார். மற்றும் சென்ன வசவரைப் போற்றும்போது,

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

“அங்கநிலையிற்று இலிங்கநிலையிற்று என்றருளும் வீரசைவச் சிங்கம்” என்று நெஞ்சாரப் புகழுகின்றார். இன்னும் சைவத்தில் ஞானசம்பந்தரைப் ‘பரசமய கோளரி’ எனப் பிரகடனம் செய்கின்றார். நாயன்மார்களில் திருக்குறிப்புத் தொண்டரைப் போல, வீரசைவத்தில் வந்துற்றவர் மடிவால மாச்சையர். அவரைக் கருணை மடிவால மாச்சையர் எனப் புகழ்ந்துரைப்பார் நம் சுவாமிகள்.

பிற்காலத்தில் தாயுமானவர், வள்ளலார், பாரதியார் போன்றவர்கள் தம்முன்னோர்களைப் போற்றுவதற்கு மடை திறந்து விட்டவர், சிவப்பிரகாசர்! சுவாமிகளுக்கு முன்னர் அருணகிரிநாதர் மட்டுமே ஓர் ஒற்றையடிப் பாதை போட்டவர். அந்த ஒற்றையடிப் பாதையைப் பெருவழியாக்கி யவர், நல்லாற்றூர்ச் சிவப்பிரகாச சுவாமிகள்.

நாவுக்கரசர், நாயன்மார்களுள் படாதபாடுபட்டவர் என்பதால், சிவப்பிரகாசரின் பரிவு அவரிடம் சற்றுக் கூடுதலாக இருக்கிறது. சிவபெருமான் கூன்பாண்டியனுக்கும் கடுமையான நோயைக் கொடுக்கிறான். அந்நோய் மனிதர்களால் தீர்க்கக் கூடிய நோய். ஆனால், திருநாவுக்கரசருக்குக் கொடுத்த சூலைநோய், இவ்வுலகத்திலே இல்லாத நோய். குடரோடு துடக்கி முடக்கியிடச் செய்திடும் நோய்; இறைவனால் மட்டுமே தீர்க்கக் கூடிய நோய். அப்படிப்பட்ட நோயை இறைவன் தரலாமா என வினவுகின்றார். **“நாட்டிற்கு இலாத குடர்நோய் நினக்குமுன் நல்கினனும்என்”** (நா.நா.மா.2) என்பார்.

சுந்தரரைப் பாடும்போது சுவாமிகள் வியப்போடு பாடுகிறார். அருளாளர்கள் பொன்னையும் பொருளையும் தாம் ஆண்டவனிடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால், சுந்தரர் இரண்டு நாரியர்மணிகளோடு, காற்றைப்போல் ஓடும் குதிரையையும் அல்லவா பெற்றிருக்கிறார் என்பதைச் சோணசைலமாலையில் **“அருங்கலம் புனையும் மகளிர்ஓர் இருவர், அணிமணம் புணர்த்தி வாரணமும், துரங்கமும் புலவர்க்கு உதவும் நின்தனையே”** *(சோண.41)* எனப் புலப்படுத்துகின்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைவப் பெருமக்கள் நால்வரினும் சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் கூடுதலாகவே ஒரு வணக்கம் செலுத்துகிறார் சிவப்பிரகாசர். ஏனென்றால், சுந்தரர் திருத்தொண்டர் தொகை பாடியிராவிட்டால், அடியார்களுடைய வரலாறு கிட்டாமல் போயிருக்கும். சுந்தரரைப் பாடும்போதே தெலுங்கு நாட்டுப் பால்குரி சோமநாத ஆராத்தியரையும் சேர்த்து ஒப்பிட்டுப் பாடுகிறார். சுந்தரமூர்த்தி நாயனார் எவ்வாறு திருத்தொண்டத் தொகையில் அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய வரலாற்றை யும் கோடிட்டுக் காட்டினாரோ, அவ்வாறே தெலுங்கு நாட்டு வீரசைவ சரணர்களைப் பற்றிய வரலாற்றைச் சோமநாத ஆராத்தியார் தொகுத்துரைக்கின்றார். எனவே அறுபத்துமூன்று நாயன்மார்களையும், கன்னட - தெலுங்கு நாட்டுச் சரணர் களுடைய வரலாற்றையும் தாங்குகின்ற அளவுக்குத் தம்முடைய மனம் விசாலமானது என இயம்புகின்றார், சிவப்பிரகாசர்.

பரவை கேள்வன் திருத்தொண்டத் தொகையுள்அடியர் பத்தி எலாம்
உருவ மாகு நஞ்சோம நாதன் துதியுள் உறுசரணர்
அரவ அணியா அடியார்கண் மற்றை யவர்கள் அனைவரும்தாம்
விரவி நாளும் இருப்ப இடன் கொடுக்கு முள்ளம் வியந்தன்றோ

(பிரபு.லீலை.துதிகதி-10)

என்பதுவே செய்யுள் வடிவம்.

கோரக்கச் சித்தர் வரலாற்றில், திருப்பருப்பதத்தைச் (ஸ்ரீசயிலம்) சிறப்பித்துப் பாடும்போது, திருநீலகண்ட நாயனார் வரலாற்றையும் சுருக்கமாக, ஆனால் சுவையாகக் குறிப்பிட்டுச் செல்கிறார். ஸ்ரீசயிலத்தில் ஒரு சுனையில் ஒரு கிழவன் மூழ்க, அவன் எழும்போது இளைஞனாக எழுகின்றான். அதற்கு உவமையாகத் திருநீலகண்டரும் அவருடைய மனைவியாரும் தில்லைக்குளத்தில் மூழ்கி எழுந்தபோது, அப்போதைய இளமையோடு எழுந்ததைச் சொல்லுகின்றார்.

நகைமதிப் பிள்ளைபோல நரைத்த கூன்கிழவி சென்றுஓர்
முகைமலர்ச் சுனையின் மூழ்கி முருகு கொப்பளிக்கும் தோட்டுப்
பகைமலர்க் குழன் மடந்தை பகர்ந்த ஓர்ஆணை காத்து
மகிழ் மனத்துஅன்ப னேபோல் வந்துமேல் எழுவன் அன்றே

(பிரபு.லீலை.கோரக்கர் கதி-14)

என்பது, சிவப்பிரகாசர் தீட்டும் சித்திரம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சிவபெருமான் வாதவூரர்க்குக் கொடுத்த சிறப்பையும் சிவப்பிரகாசர் வியந்தே பாடுகிறார். வேதங்கள் மட்கலங்கள் என்றால், திருவாசகம் பொற்கலம் என்கிறார். மேலும் வட மொழி வேதங்களைக் கூடத் தம் கையால் எழுதிக் கொள்ளாத சிவபெருமான், திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எப்படி எழுதினான் என்பதை, சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத் தமிழில்

விரிந்தமறை யொருநான்கும் எழுதுகில மெனவோர்
வீறுடைப்பொற் கொன்றைபுனை விரிசடையோன் எழுதத்
திருந்துதமிழ்க் கோவைஒரு நானூறும் உரைத்த
திருவாத வூரனெனும் செழுமலர்க்கற் பகமே

(சிவ.பிள்.8)

என்றவாறு பாடுகிறார்.

சிவப்பிரகாசர் பெண்ணுரிமை பேணுபவராகவும் இருத்த லான், சிவபெருமான் குறிப்புக் காட்ட ஞானசம்பந்தருக்குத் திருவமுது தந்த உமாதேவியைக் காட்டிலும், ஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டு, திருமுறை பாடும் பெருநிலையைக் கேள்வியுற்ற அவ்வளவிலேயே, அனிச்சைச் செயலாகப் பால் சுரக்கப் பெற்ற மங்கையர்க்கரசியாரின் அருள், பேரருளாக இருக்கலாமோ என்று நம்மிடையே அதற்குரிய விடையை விட்டு விடுகிறார். உமாதேவிக்குப் பால்சுரப்பதற்கு முன்னரே மங்கையர்க்கரசிக்குப் பால் சுரந்ததாகவும் சிவப்பிரகாசர் பாடுகிறார்.

இலைபடர்ந்த பொய்கை இடத்து அழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்நின் - நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தஅருட் கோமகளோ, சம்பந்தா
இங்குஉயர்ந்தார் யார்சொல் எனக்கு? (நா.நா.மா.5)

இந்த வெண்பாவில் இன்னொரு நுணுக்கமும் உண்டு. உமாதேவியைச் சொல்லுகின்றபோது, "அன்னையே" என்று அடைமொழி இல்லாமல் சொல்லுகின்றார். ஆனால் மங்கையர்க்கரசியாரைச் சொல்லும்போது "அருட்கோமகளே" என 'அருள்' என்னும் அடைமொழியோடு சேர்த்துக் குறிப்பிடுகிறார்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

சிவப்பிரகாசர் சிவனடியார்களைப் பெரிய மனத்துடன் நினைத்துப் பார்ப்பது போன்று, தமக்கும் தீட்சை கொடுத்து ஆட்கொண்ட குருநாதராகிய ஆதிசிவஞான பாலய சுவாமிகளையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார். ஞானசம்பந்தருக்குக் கிடைக்காத பேறு, தம்முடைய குருநாதருக்குக் கிடைத்ததாக அதிசயித்து நிற்கிறார் சுவாமிகள். ஞானசம்பந்தருக்கு ஒரே ஒருமுறைதான் உமையம்மையின் திருவமுது கிடைத்ததாம். ஆனால், இவருடைய குருநாதருக்கு எந்நாளும் அந்தப் பாலமுது கிடைத்ததாம்! அதனை,

முன்னாளில் ஒருஞான முளைஅயின்ற ஆரமுதம்
எந்நாளும் உண்கின்றாய் யாரேநின் அளவுஅறிவார்

(சிவ.கலம்.1)

எனப் பெருமிதத்துடன் அதிசயிக்கின்றார்.

மேலும், தமக்கு நயனதீட்சை, வாசக தீட்சை, ஸ்பரிசதீட்சை ஆகியன எல்லாம் செய்து, மறுமைக்கும் ஈடேற்றம் தந்த குருநாதரை நெஞ்சுருக நினைத்துப் பார்க்கிறார் சிவப்பிரகாசர். "உலகில் பொருந்திய பொருள்களின் வடிவங்களை விழியினால் அல்லது, வேறு பொறிகளால் கண்டறிய முடியுமோ? அதுபோலப் பலப்பல தருமங்களை ஒருவன் இடையறாது செய்தாலும், உனது அழகிய உபதேச மொழிகளைக் கேட்பதல்லாமல், சிறந்த வீடடையும் பேறு உண்டாகாது" எனும் செய்தியை,

பழியிலா அறங்கள்பல பயின்றாலும், உன்திருவாய்
மொழியினால் அன்றிவான் முத்திநிலை கிடையாதே
விழியினால் அதுவுலகின் மேவும்உருப் பிறிதுபொறி
வழியினால் எதிர்காணும் மனிதர்தாம் உளர்கொலோ

எனும் தாழிசைமூலம் அருளிச் செய்கிறார்.

சிவப்பிரகாசரின் குருத்துவத்தை உறுதிப்படுத்துவது போல், "பாசவதைப் பரணியிலும் ஒரு செய்தி காணப்படுகிறது. கயிலையிலிருந்த நாதன்தான், மயிலத்தில் சிவஞானதேசிகனாக வந்து அருள்புரிகிறான் என்று பரணி பாடுகிறது.

Digitization by Hindu Heritage-Foundation of America. HHFA(USA)

கயிலைமால் வரை நீக்கிக் கனிவினால்
மயில மால்வரை வந்துதித்து ஓங்கியே
மேன்மையுள்ள சிவஞான தேசிகன் இவன்எனும்
மிக்க நாமமொடு மேதினி தழைக்கும் முறையால்
மானிடப் புதிக கஞ்சுகம் அணிந்து தமிழ்த்தேர்
மயிலை மால்வரை வளம்பெருக வந்தபரிசும்

எனும் செய்யுள், சுவாமிகளுடைய செய்தியை மேலும் உறுதிப் படுத்துகின்றது.

நாயன்மார்களில், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு மட்டும் கேட்டவற்றை எல்லாம் சிவபெருமான் கொடுப்பதற்குக் காரணம், **"படியிலா நின்பாட்டில் ஆரூர, நனிவிருப்பன் பரமன் என்பது அடியனேன் அறிந்தனன்"** எனப்பாடுகின்றார் சுவாமிகள். சிவனுக்கு மட்டும் சுந்தரர் பாட்டில் நனி விருப்பம் இல்லை; சிவப்பிரகாசருக்கும் நனிவிருப்பம் இருந்திருக்கின்றது. எனவேதான், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு விரும்பினவற்றையெல்லாம் ஈயும் இறைவன், தம்முடைய அங்கைத் தலத்திலும் இட்டலிங்கமாய் வீற்றிருப்பதற்கு என்ன தவம் செய்ததோ, தம் கைத்தலம் எனப் பாடுகின்றார்.

பன்னு மாமறை தமிழினால் பாடும் நம்பிக்குப்
பொன்னும் ஆடையும் அணிகளும் ஊர்தியும் பொருளும்
இன்னும் ஈபவன் அருளினால் மேவிவீற்றிருப்ப
என்ன மாதவம் செய்ததோ எனது கைத்தலமே

(கைத்தலம், 8)

என்பது கைத்தல மாலையில் காணப்படும் செய்யுள். இப் பாடலில் இன்னொரு குறிப்பும் காணப்படுகிறது. சுந்தரர் பாடுவது, பாடல் மட்டுமன்று! அனைத்தும் தமிழ்வேதம் என்பதை, **"பன்னுமறை தமிழினால்பாடும் நம்பி"** எனும் அடிகளால் வெளிப்படுத்துகின்றார்.

வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் மங்கையரின் மாண்பைப் பசவரைப் போல் தவறாமல் எடுத்துரைப்பவர், சிவப்பிரகாசர். சீகாளத்திப் புராணத்தில், நக்கீரர் கயிலை மலை ஏறுவதை எண்ணியபொழுது, காரைக்கால் அம்மையாரைப்

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHF(USA)

பாடிவிட வேண்டும் எனத் தீர்மானித்த சுவாமிகள், "தன்தலை யால்நடந்த தாய்க்குஅலால் கயிலைக் குன்றம், இன்றிரு தாளால் எய்தல் தனக்கு எளிதோ?" எனப் பாடிவிடுகின்றார்.

நக்கீரர், திருமுருகன் சொல்லி விட்டான் என்பதற்காகக் காரைக்கால் அம்மையார் தலையால் நடந்த புண்ணிய பூமியைத் தாம் எப்படிக் காலால் நடந்தேறுவதென்று தவிக்கின்றார். இத்தகவல் திருமுருகாற்றுப்படையில் இடம் பெறாதது. ஓர் அடியாரைக் கொண்டே இன்னொரு அடியாரின் பெருமை பேசப்படவேண்டும் எனச் சிந்தித்த சிவப்பிரகாசர், நக்கீரரைக் கொண்டே தம் எண்ணத்தை நிறைவேற்றுகிறார். திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டின் எல்லையைத் தொடுவதற்கு, முன்பேயே, "இது அம்மையார் தலையாலே நடந்த பூமியென்று, திருவாலங்காட்டில் நுழையாமலே இறைவனைப் பாடிச் செல்கிறார்.

ஆசாரியன் வழியாகத்தான் ஆண்டவனை அடைய முடியும் எனத் திடமாக நம்புவது, வைணவம். ஆனால், சைவத்திற்கும் வீரசைவத்திற்கும் அக்கோட்பாடு உகந்ததே என்பதைச் சிவப்பிரகாசர் வெகு அற்புதமாக அப்பூதியடிகள் வழியாக எடுத்துரைக்கின்றார். ஆண்டவனைப் பற்றிச் சிந்திக்காமலே, அப்பரடிகள் எனும் ஒரு பெயரை இயம்பியும் எழுதியுமே அப்பூதியடிகள் துன்பில் பதம் பெற்றார் என்பதைச் சுவாமிகள்,

உற்றான் அலன்தவம் தீயில்நின் றான்அலன் ஊண்புனலா
அற்றான் அலன்நுகர் வும்திரு நாவுக் கரசுஎனும்ஓர்
சொல்தான் எழுதியும் கூறியுமே என்றும் துன்பில்பதம்
பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே

எனும் நால்வர் நான்மணி மாலைச் செய்யுள் (38) வழி எடுத்தியம்புகிறார். தெய்வச் சேக்கிழார் வெளிப்படையாகச் சொல்லாமல், தொனிப் பொருளாக உணர்த்திக் காட்டுவதை வரைபடம்போல் வரைந்து காட்டி விடுகிறார் சிவப்பிரகாசர்.

நாயன்மார்கள் அறுபத்துமூவருள் கண்ணப்ப நாயனார் மேல் அருளாளர்கள் அனைவருக்கும் அலாதியான பற்றும் பாசமும் உண்டு. குற்றமே குணமாகக் கொண்ட திண்ணப்பனைச் சுந்தரர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"தலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்" என்பார், திருத்தொண்டத் தொகையில். தெய்வச் சேக்கிழார் திண்ணப்பர் வில்வித்தைகள் அனைத்தையும் கற்றார் எனச் சொல்ல வந்தவர், "அற்றை நாள் தொடங்கி, நாளும் அடல்சிலை ஆண்மை முற்றக் கற்றனர் - **"என்னை ஆளும் கானவர்க்கு அரிய சிங்கம்"** என்று கண்ணப்பர் மேல் தனக்குள்ள தனிப்பற்றை வெளிப்படுத்துகின்றார். திருக்காளத்தி மலைக்கு வருகை தந்த ஞானசம்பந்தர் அங்கு குடுமித்தேவர் கண்ணப்பருக்கும் அருள்பாலிப்பதைப் பார்த்துவிட்டு, **"கும்பிட்ட பயன்காண்பார் போல"** என்கிறார். அதுபோலவே மணிவாசகரும் **"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்"** என்பார்.

ஆதிசங்கரர், "பக்தி எதைத்தான் செய்யாது; வேடனாகிய கண்ணப்பனைப் பெரும்பக்தன் ஆக்கியது, பக்தி" என்பார்.

அருட்பிரகாசராகிய சிவப்பிரகாசரும் சிவகோசாரியாருக்கும் கண்ணப்பருக்கும் நன்மருந்து - மலைமருந்து, குடுமித்தேவர் ஆவார். ஆனால், தனக்கு நன்மருந்து - பவமருந்து கண்ணப்ப நாயனாரே என்பார். மேலும், கண்ணப்ப நாயனார் முற்பிறவியில் இதிகாசக் குகப்பெருமாளாக இருந்தவர் என்று, ஏட்டிலே வராத, நாட்டிலே மட்டும் நடமாடும் செவிவழிச் செய்தி ஒன்று உண்டு. பெரிய புராணத்திலே இதுபற்றிச் சிறியதோர் குறிப்புண்டு. "முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பம் ஆன அன்பினை எடுத்துக் காட்ட" என்பதே அக்குறிப்பு. அச்சிறிய குறிப்பைப் பெரியதோர் குறிப்பாக்கியிருக்கின்றார், சிவப்பிரகாசர்.

> **முற்பிறப்பில் பலபெரும்போர் முடித்தசிலை விஞ்சையெல்லாம்**
> **மல்பழுத்த குவவுத்தோள் வனசரர்தம் பெருமாற்கு**
> **வில்பிடித்த காலத்தே விளங்கியது** **(கண்.33)**

எனும் பாடல் சீகாளத்திப் புராணத்தில் இடம்பெற்றுள்ளது. இராமாயணம், குகனைப் பெருமாள் என்றது போலச் சிவப்பிரகாசரும், கண்ணப்பரைப் பெருமாள் என்கிறார்.

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி என்பது போல், இறைக்கின்ற ஊற்றே சுரக்கும் என்பது போல், மற்றவர்களை

Digitization by Hindu-Heritage-Foundation of America. Hindu (USA)

மதிப்பவர்கள் மதிக்கப்படுவார்கள். மற்றவர்களைத் துதிக்கின்றவர்கள், துதிக்கப்படுவார்கள். சிவப்பிரகாசர் தமக்கு முன்னாலேயே வாழ்ந்த அனைவரையும் மதித்தார்; துதித்தார். அதனால் அவருக்குப் பின்னர் வந்தவர்கள் சிவப்பிரகாசரை மதித்தார்கள்; துதித்தார்கள். சந்தனத்தை மற்றவர்கள்மீது பூசுகின்றபோது, பூசுகின்ற கையும் மணக்குமல்லவா? பலரையும் போற்றிப் பாராட்டிய சிவப்பிரகாசரை அருளாளர் ஒருவர், **'எவர்க்கும் மெய்ஞ்ஞான ஜோதி ஈயும் மாணிக்கம்'** எனப் போற்றியது எவ்வளவு பொருத்தம்?

சிவப்பிரகாசருக்கு இளையவராகவும், கருணைப் பிரகாசருக்கு மூத்தவராகவும் தோன்றியவர், வேலையர். பூமேல் அயனும் ஆராய்ந்து அறியும் வகையில் திட்பமும் நுட்பமும் பொருந்துமாறு பாடும் வல்லமை பெற்றவர்கள் மூவரும். ஆயினும் வேலையப்பிரகாசர் உடன்பிறந்தவர்களின் புலமையைப் போற்றும் வகையில், 'நானோ கரும்புக்கு இடையிலே இருக்கும் கணு போன்றவன்' எனப் பாடுகின்றார். பாடல் வருமாறு:

அல்லிமலர்ப் பண்ணவனும் ஆராய்ந்து அறிகவிதை
சொல்லும் இருவரிடைத் தோன்றியயான் - முல்லை
அரும்பிற் பொலியும் அணிமுறுவல் நல்லாய்!
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்

முதல் தம்பியார் இவ்வாறு பாடியிருக்கக் கடைசித் தம்பி கருணைப்பிரகாசர், "பல்வகையானும் தன்னை அலங்கரித்து நிற்கும் ஒரு பொதுமகளைக் கண்ட மைந்தன் பருகுவன் போல் உள்ளத்தனாகி நிற்பன். அதுபோல சிவப்பிரகாசருடைய படைப்புகளைப் படிக்கின்ற வாசகனுடைய நெஞ்சம் மருண்டு நிற்கும். ஏனென்றால், அவருடைய பாடல்கள் சிவபெருமானுக்கே சூட்டிய பாடல்கள்" என்று தமது தமையனார் சிவப்பிரகாசருடைய பாடல்களை விதந்து ஓதுகின்றார்: பாடல் வருமாறு:

புனையெழில் வடிவி னாள்ஓர்
பொதுமகட் கண்ட மைந்தர்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

மனம்எனப் புலவர் நெஞ்சம்
மருளும்இன் தமிழ்ப்பா மாலை
சினவிடை யவற்கே சாத்தும்
சிவப்பிரகாச தேவன்

(சீகா.பாயி.17)

மேலும், சிவப்பிரகாசரின் பாட்டுத்திறத்தைக் கருணைப் பிரகாசர் விளக்கும் திறம், அதிஅற்புதமானது. கவிஞர்கள் பலநாள்கள் சிந்தித்துச் சிந்தித்து எழுதிய காப்பியத்தை, சிவப்பிரகாசர் பாடிய ஓர் ஆசுகவிச் செய்யுள் வென்று விடுமாம்! சிவபெருமானுடைய நாமத்தோடு ஒட்டிப் பிறந்த சிவப்பிரகாசருடன் தாம் பிறப்பதற்கு என்ன தவம் செய்தேனோ என்று, தம் நல்லூழினை வாழ்த்தி மகிழ்கின்றார் கருணைப் பிரகாசர். செய்யுள்:

'எவன் ஒரு நொடியில் எண்ணாது
இசைத்ததோர் செய்யுள் மற்றைக்
கவிஞர்பன் னாள்நினை னத்த
காப்பியங் கட்கு மேலாம்
எவன்இறை முதல்நா மத்தோடு
இயைதரும் விளக்கப் பேரோன்
அவனொடு பிறப்பெ மக்கீண்டு
அளித்தபால் வாழ்க மன்னோ

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் நம் சிவப்பிரகாசரின் சிவஞானத்திற்கும் அருள்ஞானத்திற்கும் இடையில் மயங்கிக் கிடக்கின்றார். "அல்லமப் பிரபுவின் சரிதத்தைத் தீட்டி, வீரசைவத்தின் பெருமையை உலகம் முழுவதும் பரப்பிய சிவப்பிரகாச மூர்த்தியே! பல்வகையான கேடுகளுக்கு ஆளாகிக் கிடக்கும் நான் உன்புகழை எவ்வாறு எடுத்தோதுவேன்" என விதந்தோதும் செய்யுள் வருமாறு;

கேட்டியல் எனக்குஅருள் கிளர்ச்சி தோயஇந்
நாட்டியல் உமதுஇசை நவிலற் பாலதோ?
ஏட்டில்அல் லமன்புகழ் எழுதி மெய்ந்நிலை
காட்டிய சிவப்பிர காச மூர்த்தியே

(சிவ.பதி.7)

மேலும், சிவப்பிரகாசர் நால்வர் பெருமக்களுக்கும் மற்றைய

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அருளாளர்களுக்கும் ஆற்றிய தொண்டிற்கு அங்கீகாரம் அளிப்பதுபோல் வண்ணச்சரபம் சுவாமிகள், ஒரு சாற்றுக்கவி பாடியிருக்கிறார். "சிவப்பிரகாசரே! உமக்குப் பெண், பொன், மண் ஆகியவற்றின்மேல் எள்ளளவும் ஆசை கிடையாது. அதனால்தான் நால்வர் பெருமக்கள்மீது நான் மெய்ஞ்ஞானம் பெற உன்னால் உதவ முடிந்தது" என்றார்.

வாதவூர் முனிமுதல் வகுக்கும் நால்வர்மெய்ப்
போதம்வேட் டுறஎனைப் புரிந்த தார்கொலோ
மாதர்நல் லார்புவி மாடை நாடுமுக்
காதல்இல் சிவப்பிர காச மூர்த்தியே ***(சிவ.பதி.100)***

எனும் பாடல் மூலம் எடுத்தியம்புகிறார்.

இன்னும், சிவப்பிரகாசரைத் தாம் போற்றிப் பாடியிருக்கும் பாடல்களை யார் மனனம் செய்கிறார்களோ, அவர்கள் துன்பங்கள் - துயரங்களை அடைய மாட்டார்கள் எனும் கருத்தை,

உலப்பில்சீர் திகழ்நல்லாற் றூரில் ஒன்றிடை
கலப்புறும் சிவப்பிர காச மூர்த்தியைப்
புலப்பகைத் திருப்புகழ்ப் புலவன் போற்றும்இவை
சொலப்பெறும் அவரெலாம் துயர்எய் தார்களே
(சிவ.பதி.11)

எனும் பாடல் மூலம் புலப்படுத்துகிறார்.

சிவப்பிரகாசர் சமய மார்க்கத்திலும், சமுதாய மார்க்கத்திலும் உருவாக்கியிருக்கும் புதிய அத்தியாயம், எக்காலத்திலும் போற்றப்பட வேண்டிய ஒன்று; பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.

இப்படித் தமிழ்மரபில் புதியதோர் அத்தியாயத்தைத் தொடங்கிய சிவப்பிரகாசரைத் தெய்வப்புலவர் என்றும், சைவத் தலைமைக்கடல் என்றும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் போற்றியமை, சாலச் சிறந்த சரியான செய்கையேயாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவப்பிரகாசர் போற்றும் வீரசைவம்

அருட்பிரகாசராகிய சிவப்பிரகாசர் சமயத்திற்கு மட்டுமன்றி, தமிழுக்கும் புதுப்பொலிவும் புதுவரவும் செய்தவர் ஆவார். அவரால் பேரிலக்கியத் துறையும் பயன்பெற்றது; சிற்றிலக்கியத் துறையும் பெரும் சிறப்புகளைப் பெற்றது. சிவப்பிரகாசருக்கு முன்பு ஆற்றொழுக்காகப் பாய்ந்து வந்த வீரசைவம், சிவப்பிரகாசருக்குப் பின்னர், ஆற்றின் மேலொரு மேடுகட்டி, அதிலிருந்து அருவியாகவும் தொடர்ந்து பேராறாகவும் பாய்ந்து வருகிறது. அதனால் அருவி ஆடுகின்ற இன்பத்தையும் ஆற்றில் நீராடுகின்ற இன்பத்தையும் ஒருசேர அன்பர்களால் பெற முடிகின்றது. (ஒகேனக்கல் அருவி போன்று) வலிமை பொருந்திய ஆற்றல் ஒன்று, மேலும் வலிவும் பொலிவும் பெற வேண்டுமென்றால், அஃதொரு புதிய ஊடகத்தின் வழியாக வரவேண்டும். திரைப்படம் எடுக்கப்பயன்படும் படச்சுருள் (நெகட்டிவ்) சில சமயங்களில் மண்தரையில் கிடக்கும். அதன்மீது 100 டிகிரியில் வெயிலடித்தாலும், அச்சுருள் தீப்பற்றி எரியாது. ஆனால் அதன்மீது ஒரு குவியாடியின் மூலம் சூரியக் கதிர்களை வாங்கி விட்டால், படச்சுருள் எரிந்து விடும். அதுபோல வீரியம் மிக்க வீரசைவம், சிவப்பிரகாசர் மூலம் வெளிப்படும்போது, மேலும் தோற்றமும் ஏற்றமும் பெறுகிறது.

வீரசைவத்திற்கு மட்டுமல்லாமல், சைவத்திற்கும் இவ்வுவமை பொருந்தும். ஒரே நேர்க்கோட்டில் ஓடிவந்த சைவப்பேராற்றுக்கு, புது எழுச்சியைத் தந்தவர் தெய்வச் சேக்கிழார். சேக்கிழாருக்கு முன்னர், சைவம் ஆண்டவன் பெருமையே பேசி வந்தது. சேக்கிழார், அடியார் பெருமையை எடுத்துச் சொன்னால்தான், ஆண்டவன் பெருமை வெளிப் படும் என்றார். பசுங்கன்றை ஓட்டிப் போனால்தான், தாய்ப்பசுவிடமிருந்து பாலைக் கறக்க முடியும். எனவே, 'திருத்தொண்டர் புராணம்' பாடினார். அப்படிச் செய்ததால், கன்னட நாட்டிலிருந்த வீரசைவர்களும் பெரியபுராணம் படிக்கத் தொடங்கினராம். "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்தைக் கன்னட மொழியில்

Digitization by Hindu Heritage-Foundation of America. HHFA(USA)

எழுதிக்கொண்டு (டிரான்ஸ்லிட்ரேஷன்) பாராயணம் செய்யத் தொடங்கினார்களாம். இவ்வாறு சேக்கிழார் சைவத்திற்குப் புதிய தரிசனம் தந்தார்.

அடியார் பெருமையைப் பாடியதால், **“பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ”** எனப் பாராட்டப் பெற்றார் சேக்கிழார்.

சைவத்தைப் போலவே வைணவத்திற்குப் புதிய தோற்றத்தைத் தந்தவர், எம்பெருமானார் இராமானுசர். சைவம், சேக்கிழார் தந்த மனமாற்றத்தை ஒரு கொள்கையளவிலே ஏற்றதே தவிர, ஒரு கோட்பாடாக ஏற்கவில்லை. ஆனால், வைணவம் இராமானுசர் தந்த புதுத் தோற்றத்தை ஒரு கோட்பாடாகவே ஏற்றது. வைணவத்தை ‘இராமானுச தரிசனம்‘ என்றே அழைக்க வேண்டும் என்கிறார், மணவாள மாமுனிகள், தம் உபதேச ரத்தின மாலையில். பாடல்.

எம்பெருமான் தரிசனமென்றே இதற்குப் பெயரிட்டு
நம்பெருமான் நாட்டி வைத்தார் - அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை எம்பெருமான் வளர்த்த
அந்தச் செயல்அறிக்கைக் கா

என மணவாள மாமுனிகள் அருளிச் செய்ததோடு, அதனைத் திருவரங்கத்திலே வீற்றிருக்கின்ற அரங்கமூர்த்தியே திருவாய் மொழிந்ததாகவும் சொல்லுகிறார்.

வீரசைவத்தின் தோற்றத்தைப் பற்றி கன்னட நாட்டினர் சொல்லி வருவதென்ன? சிவபெருமானுடைய ஐந்து முகங்களில் இருந்து தோன்றிய இரேவண ஆராத்யர் போன்ற ஐந்து ஆச்சாரியர்களே வீரசைவத்தைத் தோற்றுவித்தவர்கள் ஆவர். கி.பி.12ஆம் நூற்றாண்டில், பீஜப்பூர் பகுதியை ஜைன மதத்தைச் சார்ந்த **விச்சலன்** என்ற மன்னன் அரசாண்டான். அவன் சமயவெறி மிக்கவனாக இருந்ததால், ஜைனமும் வைதிக நெறியும் ஓங்கி நின்று, வருணாசிரமத்தை வளர்த்தன. சாதி ஏற்றத்தாழ்வுகள் மலிந்தன; பெண்ணடிமைத்தனம் போற்றி வளர்க்கப்பட்டது. அதனை எதிர்க்க சைவம் வலிவற்று இருந்தது. அப்போது உதித்த பசவர், வருணாசிரமத்தையும்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சாதியிழிவினையும் ஒழித்துச் சைவத்திற்குப் புத்துயிர் கொடுத்ததால், அது வீரசைவம் ஆயிற்று என்று எழுதியும் பேசியும் வருகின்றனர். அதற்கு Sakti or Divine power என்ற நூலை எழுதிய டாக்டர் எஸ்.கே.தாஸுூம் சான்று தருகிறார்.

வீரசைவம் என்பதற்கு ஒரு புதுவிளக்கமும் தருகின்றனர். வீ என்றால், சிவனுக்கும் ஜீவனுக்கும் தொடர்பு உண்டு என்ற ஞானத்தை விளைவிக்கும் வித்தை. 'ர' என்றால் ரமிக்கின்றவர்கள் அல்லது திளைக்கின்றவர்கள்; வீர என்ற சொல், உறுதியாகப் பரமார்த்தத்தில் ஊன்றிய கடவுள் பக்தர் என்று ஒட்டுமொத்தமாக விளக்கம் தருகின்றனர். இவர்கள் விளக்கங்களை எல்லாம் ஏற்றுக் கொண்டால், வீரசைவத்தின் தோற்றம் 12ஆம் நூற்றாண்டு என்றாகி விடும்.

சிவப்பிரகாசர், டாக்டர் ஜான் மார்சல், ஹீராஸ் பாதிரியார் போன்ற வரலாற்று ஆசிரியர்களைச் சார்ந்து, வீரசைவம் சிந்துவெளி நாகரிகத்துக்கு முற்பட்டதெனச் சான்று காட்டி விளக்குகின்றார். சித்தாந்த சிகாமணியில் (பாடல்73) வீரசைவத்தின் காலம் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட 'தொல்பழங்காலம்' என்றருளிச் செய்கிறார்.

ஏகன் உற்று அருள் காமிகமே முதல்
ஆக மத்தில் நிறைந்திடும் உத்தர
பாகம் முற்றும் பகர்வீர சைவமாம்
சோகம் அற்றுயர் தொல்மதம் தோன்றுமால்

என்பது பாடல்.

மேலும், சிவபெருமான் திரிபுரத்தை எரித்து முடித்ததற்குப் பிறகு, திருக்கூவநகரிலேதான் இலிங்க வடிவில் வந்து வீற்றிருக்கிறார். முனிவர், தேவர்களைக் கூவநகரிலே இலிங்க வடிவிலே எழுந்தருளியிருக்கும் சிவனைச் சென்று தரிசிக்கும்படியாக அறிவுறுத்துகிறார். பாடல்

இந்நகர் அதனிடை இறைவ நின்மலர்ப்
பொன்அடி அருச்சனை புரிந்து வாழ்வுற
நின்அருள் புரிகென நிகழ்த்த ஆயிடை

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

மன்னிய இலிங்கநல் படிவம் ஆயினான்

(திருக்கூவ.294)

மற்றும் வீரசைவனுக்குரிய இலக்கணத்தையும் சித்தாந்த சிகாமணியில் சிறப்புறப் பகருகின்றார்.

தீது அகன்ற சிவசீவ ஐக்கியமாம்
வீதரும் பெரு வித்தையில் நன்குறச்
சாதம் இன்றி ரமிக்கும் அச்சைவம் மற்று
ஓதில் அன்னோன் உயர்வீர சைவனே *(சித்.சிகா.3468)*

மற்றும் சைனர்களுடைய மெய்ஞ்ஞான வேள்வியை, மாகேசுவரருடைய கரும வேள்வியை அரவணைத்துக் கொண்டு, பலநெறி வீரசைவம் எனப் போற்றுகின்றார், சுவாமிகள். முத்தாய்ப்பு வைத்தது போல், வீரசைவத்தின் தொன்மையையும் மேன்மையையும் பிரபுலிங்க லீலையில் *(1144)* விதந்துரைக்கின்றார்.

அருமறை முடியும் சீர்சால் ஆகம முடியும் ஒத்துப்
பொரும்மறம் இலாமல் முற்றும் பொருளினை விளங்கக் காட்டித்
தரும்முறை அதனால் வீரசைவமே தலைமைத்து ஆம்இல்
இருமறு அறுநன் னூலும், இதில்பிர மாண மாகும்

என இந்தியச் சமயங்களிலேயே வீரசைவம்தான் தலைமை யானது என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறார். சிவப்பிரகாசரைத் தவிர வேறு யார் இந்தப் போற்றுதலைத் தர முடியும்?

சிவப்பிரகாசர் வீரசைவத்திற்குத் தந்த தகுதியுரையைப் பார்த்து வியந்து நிற்கிறார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்! "சிவப்பிரகாச மூர்த்தியே! தவம் செய்தோரில் நான் நெருப்புப் போன்றவன்! உலகுக்காக நீவிர் எடுத்துரைத்த பழைய வேதம், ஆகமம் ஆகியவை எனக்கும் பலவற்றை உணர்த்தின. நான் அன்பு செய்வதற்கு இந்தவுலகத்தில் உன்னையல்லால் வேறு யாருளர்?" என வண்ணச்சரபமே வியப்புற்று, வீரசைவத்தின் பெருமையைப் போற்றுகிறார். பாடல் வருமாறு,

Digitization by Hindu Heritage-Foundation of America. HHFA(USA)

தழல்நிகர் தவத்தரில் தமியன் அன்பினுக்கு
அழகியர் நீரலாது ஆர்உள் ளார்கொலொ
பழமறை ஆகமப் பயன்ள லாம்மிகக்
கழறிய சிவப்பிர காசமூர்த்தியே

(சிவ.பதி.6)

பசவர் வாழ்ந்த 12ஆம் நூற்றாண்டில், இட்டலிங்கதாரணம் மேற்கொண்டு, பஞ்ச ஆசாரத்தில் காலூன்றி, சடுத்தலத்தில் நடந்து, அஷ்டாவரணத்தில் வேரூன்றி நிற்பானே ஆனால், அவன் வீரசைவன்தான்! பசவர்கூட, பிறந்து வளர்ந்ததற்குப் பிறகுதான் வீரசைவர் ஆகிறார். ஆனால், சிவப்பிரகாசர் குழந்தை கருவாகின்றபோதே இட்டலிங்கத்தை ஏந்தியிருத்தல் நலம் என்கிறார். ஒரு குழந்தை கருவாதற்குரிய அணுக்கள் தாயிடம் பத்துமாதம் வருவதற்கு முன்னரே, தந்தையிடம் இரண்டு மாதங்கள் இருப்பதாக அருணகிரிநாத சுவாமிகள் அறைகின்றார். அதன் சாத்தியப்பாட்டை மணிவாசகர்,

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்து என்உளம் மன்னி,
கருத்திருத்தி, ஊன்புக்கு, கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானை, தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லை கண்ணே

(திருவா.கண்டப்பத்து-3)

என்றவாறு இயம்புகிறார்.

சிவப்பிரகாசரின் தந்தையாகிய குமாரசாமி தேசிகர், மக்கள் பேற்றிற்காக அண்ணாமலையானை வேண்டிக் கொண்ட காலத்தில், இட்டலிங்கம் கழுத்தில் சூடவிரும்பும் எண்ணத்தைத் தாங்கிய குழந்தையே வேண்டினார். சிவப்பிரகாசர் பிறந்தவுடனேயே இட்டலிங்கத்தையும் அணிவித்தார். அதனால், தாயின் வயிற்றில் கருவாகும்போது இட்டலிங்கம் எண்ணம் கொண்டனவாக இருக்க வேண்டும் என்பதை, மலைவளம் வரும்போது பாடிய இப்பாடலில் நுட்பமாகப் புலப்படுத்துகிறார் எனக் கருதலாம்.

கருத்திடை நினது கருணைமா மேனி
கண்டு எழுத்து ஐந்தும்நா வியம்ப
சிரத்தினில் அமைந்த கரத்தொடு நினையான்
தினம்வலம் புரியுமாறு அருள்வாய் (சோண.15)

Digitization by Hindu Heritage Foundation of America: HHFA(USA)

கருவாயிருக்கும்போதே வீரசைவராக உருவாகிய சிவப்பிரகாசர், இனிவரும் குழந்தைகளும் அப்படி ஆகவேண்டும் என்று ஆசைப்படுவது, வீரசைவத்திற்கேற்றிய மெருகு அல்லவா?

நல்லாற்றூர்ச் சிவப்பிரகாச சுவாமிகள் வீரசைவத்தைப் பாமர மக்களுக்கும் விளங்க வைக்க அவதாரம் எடுத்த, அவதார புருடராகப் பண்ணுருட்டி, மணி சுப்பிரமணிய அய்யரால் பார்க்கப்படுகின்றார். "மலகன்ம மாயைவா தனையற்ற, பேரின்ப மருவவுயர் வீரசைவ மாண்பினை விளக்கும் வள்ளல்" என அய்யரால் போற்றப்படுகின்றார், சிவப்பிரகாசர். வீரசைவத்திருமடத்தின் முதற்புலவர், சிவப்பிரகாசரே! தம் ஞானாசிரியரால், வீரசாமானியம், வீரவிசேடம் என்னும் தீட்சைகள் செய்யப் பெற்றவர். சுவாமிகளும் வீரநிராபர தீட்சைக்கேற்பக், காவியுடையுடன் பல இடங்களிலும் சென்று உலவும் **சரம்** எனும் நிலையுடன், பல தலங்களுக்கும் சென்று தம்சீடர்க்கு அருளனுபவங்களை ஊட்டி வந்தார்.

சைவ சமயத்தின் வளர்ச்சியே - முதிர்ச்சியே வீரசைவம்தான். சைவ சமயம் எனும் கோட்டினைக் குறைக்காமலேயே வீரசைவம் எனும் நெடுங்கோட்டினை நீட்டியவர். சைவம் எனும் கோபுரத்தின் மேல் வீரசைவமாகிய கலசத்தை நாட்டியவர்.

திருமுறையே சைவநெறிக் கருவூலம்;
தென்தமிழின் தேன்பா காகும்;
திருமுறையே கயிலையின்கண் சிவபெருமான்
செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம்வருந்த
எழுதியருள் தெய்வ நூலாம்;
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்
மலர்ந்தருளும் சிறப்பிற் றாமால்!

எனப்பாடி, நன்குணர்ந்து அதன் ஊற்றத்தையும் பெற்றவர் சிவப்பிரகாசர். சைவ நாயன்மார்களுக்குச் சைவர்கள் கூட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சூட்டாத 'நால்வர் நான்மணிமாலை'யைப் பாடிப் பெருமை சேர்த்தவர். சிவப்பிரகாசரைப் பார்த்துத்தான், வடலூர் வள்ளலார் நால்வர்க்கும் துதி பாடினார்.

வீரசைவத்தின் உயிர்மூச்சு, கொல்லாமை, அந்தக் கொல்லாமையைச் சைவம் ஓரிடத்தில் தவறவிட்டு விட்டது. சித்தாந்த சிகாமணியில், கொல்லாமையைக் காட்டிலும் வேறொரு தானமோ தவமோ கிடையாது என்பதனை, **"அன்னதோ யத்தின் மேலான தானமும், மன்னுகொல் லாமைமேல் தவமும் மற்றிலை"** எனும் பாசுரத்தின் மூலம் செப்பியிருக்கிறார், சுவாமிகள். மேலும், சீகாளத்திப் புராணத்தில் குடுமித்தேவருக்கு முன்னர் ஊன் உணவு படைக்கப்பட்டதைப் பார்த்துச் சிவகோசாரியார் ஊன் கிடத்தல் கண்டு உள்ளம் நடுங்கியே தான் குதித்து அயல் ஓடினன் தாழ்விலான் என, தான் பட்ட பாட்டினை, புரோகிதர் பட்டதாகச் சுவாமிகள் அருளிச் செல்கிறார்கள்.

தேன்கு லத்தொடு செவ்வழி வண்டுஉணர்
கான்க டுக்கையம் கண்ணியன் முன்புஎலாம்
ஊன்கி டத்தல்கண்டு உள்ளம் நடுங்கியே
தான்கு தித்துஅயல் ஓடினன் தாழ்வுஇலான்

(சீகா.புரா.134)

சேக்கிழார் கூட அர்ச்சகரை அவ்வளவு துடிக்க வைக்க வில்லை; சிவப்பிரகாசர் அவ்வளவு துடிக்க வைக்கின்றார், கொல்லாமை எனும் கோட்பாட்டின் மேல் வைத்திருக்கின்ற விரதத்தால்! பசவரும் உயிர்க்கொலையைக் கண்டித்து,

வாருங்கள் அக்காள் தங்கை மாரே
சேருங்கள் ஆலமரத்தடிப் பக்கம்!
ஆடு கோழிஅத் தேவதை கட்கே
கூடிப் பலியாய் கொடுத்திடின் அவர்தாம்
வேண்டிடும் மகப்பேறு ஈந்திடு வாரோ?
அன்றி வேறு துண்டாம் தெய்வங்கள்
வேண்டுவ தளித்திடும் கூடல சங்கமன்
நின்றிடு மோநம் நெஞ்சகம் தன்னிலே

எனப் பாடுகின்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெரியபுராணத்திலே சிறுத்தொண்ட நாயனார் புராணத்தைப் படிக்கின்ற சிவப்பிரகாசருக்கு - வீரசைவராக இருப்பதால், ஒரு நெருடல் ஏற்படுகின்றது. என்னதான் இருந்தாலும், ஒரு கொலைக்குச் சிவனே காரணமாக இருந்திருக்க வேண்டாம் என அவர் நெஞ்சம் எண்ணுகின்றது. சைவம் கொல்லாமையை ஒரு கோட்பாடாகக் கொண்டிருந்தாலும், கொல்லும் தொழில் ஒருவருக்குக் கர்மயோகமாக இருக்குமானால், அதைத் தடுப்பதில்லை. அங்கமெலாம் குறைந்து அழும் தொழுநோயராக- ஆவுரித்துத் தின்றுழலும் புலையராய் இருந்தாலும், கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் சைவம் அவரை ஏற்றுக் கொள்கிறது. நந்தனார் மாடு உரிப்பவராக இருந்தாலும், அவர் தில்லை நடராசருக்கு அன்பராகில், அவர் ஆதனூர் ஐயர் ஆகிவிடுகிறார்.

இப்பிரச்சனை இரண்டு பக்கமும் கூர்மையுள்ள கத்தி என்பதால், சிவப்பிரகாசர் சர்வ ஜாக்கிரதையாக இதனை அணுகுகின்றார். கொல்லுதலை அவரால் ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை; அருளாளர்களின் அருளிச் செயலைக் கண்டிக்கவும் முடியவில்லை. எனவே, "பெரியநாயகி அம்மையே! திருச்செங்காட்டங்குடியில் நிகழ்ந்த ஒரு கொலைக்கு நீ துணை போகாமல் இருந்தது உன் அருள் உள்ளத்தைக் காட்டுகிறது" எனச் சமத்காரமாகப் பாடுகின்றார். பாடல் வருமாறு

நின்போல் இலர்அரு ளாளர்என் றேசொல்ல நின்கொழுநன்
என்போல் ஒருவன் மகன்பூங் கழுத்தினை ஈர்வல் என்றே
அன்புஓர் சிறிதும் இலனாகப் போகஅதற்கு இசைந்து
பின்போய் விடாதுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மையே

(பெரியநாயகியம்மை கலித்துறை: பாடல் 7)

இச்செய்தியில் ஒரு வழுவமைதி இருக்கின்றது. சிறுத் தொண்டரைச் சோதனை செய்த பிறகே சிவபெருமான் உமாதேவியோடும், பாலமுருகனோடும் சேர்ந்து சோமாஸ் கந்தமூர்த்தியாகக் காட்சி தருகின்றார். ஆனால், காபாலிகனாகச் செல்லுகின்றபோது, பெரியநாயகி உடன்போகவில்லை என்று சுவாமிகள் சொல்லுவது, அவர்களுடைய நுண்மாண் நுழை

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

புலத்தைக் காட்டுவதாகும். சீராளனைக் கொலை செய்ததையும் குறிப்பிட்டுக் காட்டிவிட்டு, அதற்கொரு சமாதானமும் சொல்லி, வீரசைவத்தின் கோட்பாட்டை நிறுவிச் சென்ற சுவாமிகளின் சாதுர்யம் வியந்து பாராட்டுதற்குரியது. பஞ் சாசாரம் எனும் ஐந்துவகைக் கொள்கைகளில், பிருத்யாசாரம் எனும் தாழ்வெனும் தகவும் ஒன்றாகும்.

பிருத்யாசாரம் என்றால் என்ன? எல்லா உயிர்களிடத்தும் பணிந்து பழகுதல் வேண்டும். பறவை, மரம், செடி, கொடிக ளாயினும் அவைகளும் உயிர்உள்ளவை. அவைகளையும் சிவனுடைய ஆலயங்கள் எனக்கொண்டு, அவைகளிடமும் கருணையுள்ளத்தோடு பழகவேண்டும்! உலக ஒருமைப்பாட்டு நேயம் வேண்டும். தாழ்வு எனும் தன்மையை, உலக உயிர்களின் பணியாளன் என்ற எண்ணத்தில்தான் பெறமுடியும். இதை வலியுறுத்துவது தான் **தாழ்வெனும் தகவு அல்லது பிருத்யாசாரம்** ஆகும். இதற்குப் பொருத்தமான உதாரணம் பெரியபுராணத்தில் இடம்பெறும் சேரமான் பெருமாள் நாயனார் புராணம் ஆகும்.

சேரமான் யானைமேல் பவனி வரும்போது, சலவைத் துணி சுமந்து வரும் வண்ணான்மேல் வெள்ளாவி நீர் வழிந்து, வெண்ணீறு போல் காட்சியளித்தது. உடன் மன்னர் யானை மேலிருந்து இறங்கி, வண்ணாரின் காலில் விழுந்தார். அவர் பதைத்து, ‘மன்னரே! நான் அடிவண்ணான்’ என்றார். உடன் அரசர், ‘நான் அடிச் சேரன்!’ என்றார்.

புலால் உண்ணுதலையும் கொலைத் தொழிலையும் சிவப்பிரகாசர் வன்மையாகக் கண்டிப்பவர் என்பதை நன்கறிந்தவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். எனவே புலால் உண்பவர்கள் பக்தியில்லாதவர்கள்; பெருமையில்லா தவர்கள், இரக்கம் இல்லாதவர்கள்; அக்குணத்தவர்கள் எங்கிருந் தாலும் அவர்களைக் கண்டிக்கக் கூடியவர் சிவப்பிரகாச சுவாமிகள் என்பதை வண்ணச்சரபம் **“பெருமைசால் பத்தியில் பிசிதர் பேணிடும், கருமமில் சிவப்பிரகாசர்”** (சிவ.பதி.9) என்பதன் மூலம் உலகுக்கு உணர்த்துகின்றார். பிசிதர் என்றால் ஊன் உண்ணும் இரக்கமில்லாத அரக்கர் எனப் பொருள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பஞ்சாசாரம் என்பது வீரசைவத்தின் அடித்தளம் ஆகும். அதனுடைய அம்சம் **கணாசாரம் அல்லது கூட்டமைப்பு ஒழுக்கம்** ஆகும். வீரசைவத்துறையில் ஈடுபடுபவர்கள், அத்துறையில் ஈடுபடுபவர்களின் கூட்டத்தில் எப்பொழுதும் பழகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சேக்கிழார் இதனைப் 'புனிதர் பேரவை' என்பார். 'அன்பரொடு மருவுக' என்பார் சிவஞானபோதம் தந்த மெய்கண்டார் சுவாமிகள். நன்மைகளை ஏற்பதும் தீமைகளை விலக்குவதும் வீரசைவரின் கடமையாகும். வீரசைவருக்குத் தனியறமும் உண்டு; பொது அறமும் உண்டு. பொது அறத்தைக் காப்பாற்றுவதற்காகத் தனியறத்தைக் கைவிடலாம்.

பொதுநன்மைக்கு ஊறுவிளைவித்தவன் தன் தந்தை என்றாலும், தந்தையைத் தண்டிப்பது பாவம் என்னாது, பொது அறத்தைக் காப்பது வீரசைவனின் கடமையாகும். இவ்வகை ஒழுக்கத்தில் வெற்றி பெறாதவன், இலிங்கதாரியாக இருந்தாலும், வீரசைவனாகான். இவ்வொழுக்கத்தில் வெற்றி பெற்ற ஜீவன், ஆத்மநிலைக்கு உயர்த்தப் பெறும். பஞ் சாசாரத்துக்கு புதிய உயிர்ப்பாற்றலைக் கொடுத்து, அதைப் போற்றிய பெருமை பசவருக்கு உண்டு. அதனாலேயே அவருக்குப் 'பஞ்சாசார மூர்த்தி பிரமம்' எனும் சிறப்புப் பெயரும் உண்டு.

சிவப்பிரகாசருடைய வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி, வீரசைவத்தை அவர் வியந்து போற்றியமைக்குச் சரியான சான்றாகும். சுவாமிகள் திருவெங்கை மடத்தில் இருந்து வீரசைவத்தை உபதேசத்தாலும், உலா, கலம்பகம், அலங்காரம், கோவை போன்ற நூல்களின் படைப்பாற்றலாலும், வளர்த்துக் கொண்டிருந்த நேரம் அது. அந்தத் திருமடத்தின் வாசலில் ஒரு முருங்கை மரம் இருந்தது. அந்த முருங்கை மரம் தன் இலைகளாலும், காய்களாலும் மடத்திலிருந்த சங்கமர்களையும் சரணர்களையும் வாழ்வித்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது, அவ்வூர்ச் சிறுதெய்வமாகிய பிடாரிக்குத் தேர்த்திருவிழா வந்தது. தேரை இழுப்பவர்கள் தாங்கள் உணவை உண்டதோடு, பிடாரிக்கும் ஊன் உணவைப்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

படைத்தவர்கள். சிற்றின்பக் கேளிக்கைகளில் ஊறியவர்கள், திருமடத்தின் முருங்கை மரத்தின் அருமை உணராதவர்களாகி, அம்மரம் வேரொடு விழுமாறு தேரை இழுத்துச் சென்றனர். அதனை வெளியில் வந்து கண்ட சிவப்பிரகாசர், அறம் வைத்து ஓர் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் பாடுகிறார்.

தேர் அந்த இடத்திலே கருகிச் சாம்பல் ஆகின்றது. பாடல் வருமாறு;

திருந்துதமிழ் இலக்கணஐந் திணைக்கோவை
விருத்தகிரிச் செல்வற்கு ஓதும்
பெருந்தகைமை உடையம்யாம் விடும்ஓலை
வெங்கைநகர்ப் பிடாரி காண்க
இரும்புவியில் ஒருமுருங்கைக் கொம்பொடியா
மற்காத்திங்கு இருக்கும் நீநம்
முருங்கைதனை வேரோடுங் களைந்தனையென்
றால்உனக்கு முறைய தாமோ?

சிவப்பிரகாசர் வெளிப்படையாகப் பாடாத ஒன்றை, வண்ணச்சரபம் வெட்ட வெளிச்சமாக்குகின்றார். தேரை இழுத்தவர்கள் புலால் உண்பவர்கள் என்பதைத் தண்டபாணி சுவாமிகள், "புலைமலி மாரித்தேர்" என்றார். அப்பிடாரியும் சிறுதெய்வம் என்பதாலும், அத்தெய்வம் ஊன் உணவை ஏற்றுக் கொண்டமையாலும், அத்தெய்வத்திற்குக் காக்கும் திறன் இல்லாது போயிற்று. காக்கும் திறன் இருந்திருந்தால், முருங்கை மரமும் வீழ்ந்திருக்காது; புலால் உணவையும் ஏற்றிருக்காது. எனவே வண்ணச்சரபம், தேரை இழுத்த மனிதர்களும் ஊன் உணவை உண்டவர்கள்! அத்தேரும் அதனை ஏற்றுக் கொண்டது என்பதால், "புலைமலி மாரித்தேர்" என்று மனிதர்களையும் தேரையும் சேர்த்துக் குறிப்பிட்டார் போலும் சுவாமிகள்.

"பிடாரியே! இது நியாயமா?" எனத்தான் சிவப்பிரகாசர் கேட்டார். அதன் பின்விளைவை அவர் பாடவில்லை; ஆனால், வண்ணச்சரபம் பாடிவிட்டார். தேரும் தேரைச் சேர்ந்தவர்களும் எரிந்து பட்டார்கள். பாடல் வருமாறு;

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

புலைமலி மாரித்தேர் பொடித்த வண்ணம்அந்
நிலையினர் பலரையும் நீற்ற நண்ணுவீர்
அலைநுகர் மலைமுனி அளித்த முத்தமிழ்க்
கலையுணர் சிவப்பிரகாச மூர்த்தியே (சிவ.பதி.3)

இப்படிச் சிவப்பிரகாசருடைய பேராற்றலைக் கண்ட வண்ணச்சரபம், அகத்தியனுடைய முத்தமிழ், இப்பொழுது சிவப்பிரகாசரிடம்தான் இருக்கிறது எனப் பாடினார்.

இவ்விதம் சிறுதெய்வங்களுக்கு ஆடு வெட்டுபவர்களைப் பசவர், “ஹோமத்தின் பெயரால் ஆடு தின்பவன், பிறர் கழுத்தை அறுத்துவிட்டு, மந்திரம் ஓதும் கொலைகாரன் இவன் செயல் ஒருவிதம்; சொல் ஒருவிதம்” என்றவாறு சாடுகின்றார். பசவர் காலத்தில் மடிவாள மாச்சய்யன் என்ற சங்கமர் கன்னட நாட்டில் இருந்தார். அவர் சிவஞானிகளுக்கும் சிவசரணர்களுக்கும் துணிவெளுத்துக் கொடுக்கும் தொண்டினை ஆற்றி வந்தவர்.

ஆற்றங்கரைக்குத் துணிகளை எடுத்துப்போய் துவைத்து எடுத்துக் கொண்டு வரும்போது, அவரை யாரும் தொட்டுவிடக் கூடாது. சிவஞானியர்களுடைய பவித்திரத்தைக் காக்க வேண்டும் என்றொரு விரதத்தை வைத்திருந்தார். அவரைச் சீண்டிப் பார்க்க நினைத்த ஒரு மூடன் வேண்டுமென்றே, அவரைத் தொட்டு விட்டான். சிவனடியார்கள் மட்டுமே அவரைத் தீண்டலாம். மூடனின் செயல்கண்டு, கைவாளை எடுத்துத் தொட்டவனின் கரத்தைத் துண்டித்து விட்டார். **விச்சலன்** என்ற மன்னனின் எச்சரிக்கையைக் கேட்டும் அஞ்சாதவர். உலகில் பொய், அநியாயம் ஆகியவற்றைக் கண்டால், நேரடியாகவே அவற்றை எதிர்த்து நின்று போராடி வெற்றி பெறுவார். சமூகநீதி எனும் சமத்துவத்தை மாச்சய்யனைப் பார்த்துத்தான், பசவர் கற்றுக் கொண்டார்.

சிறுதெய்வ வழிபாட்டைச் சிவப்பிரகாசர் கண்டித்ததைப் போன்று, அவருக்கு முன்பேயே கன்னட தேசத்தில் பசவர்,

“கல்தெய்வம் மண்தெய்வம் மரத்தெய்வம் வீதியிலே
கால்வைக்க இடமில்லா கணக்கற்ற தெய்வங்கள்
கல்சீப்பு குடம்முறம் தலைவெட்டும் தெய்வங்கள்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பெண்தெய்வம் ஆண்தெய்வம் பிணம்தின்னும் தெய்வங்கள்
காலங்கள் போய்ச்சேரும் கணக்கெதற்கும் வாராது
கொடுப்பவனும் காப்பவனும் கூடலத்துத் தேவதேவன்
மூலமவன் முழுமுதலே நம்மிறையை அன்புடனே
இலைவைத்துப் பூசைசெய் இன்பமவன் அருள்வானே!

எனப் பாடியிருக்கின்றார்.

வள்ளுவப் பிரகாசராகிய சிவப்பிரகாசர் இட்டலிங்கத்தை வழிபடுவதை விட்டுவிட்டு இதர தெய்வங்களை வணங்குதல், கங்கையை விட்டுவிட்டு உப்பங்கழியில் சென்று நீராடுவது போன்றது என்பதை,

அங்கையின் அமர்தரும் அரனை விட்டொரு
வெங்கட வுளர்தமை விழைந்து போற்றுவார்
கங்கையை அகன்றுவர்க் கழியின் மூழ்குநர்
தங்களின் வேறலர் தரும மூர்த்தியே

எனும் பிரபுலிங்கலீலை(825) செய்யுள் மூலம் அறிவுறுத்துகிறார்.

இன்னும், சாதனங்களில் திருநீறும், தவங்களில் கொல்லாமையும் சிறந்தது எனும் உண்மையை,

சாதனங்களுள் நீறு முந்திய தென்பர் சாற்றும்
மாதவங்களுள் உயிர்செகாமையும் அற்று (பிர.லீலை.690)

என்று சிவப்பிரகாசர் வெளிப்படுத்துகிறார்.

பஞ்சாசாரம் ஐந்தனுள் ஓரங்கமாகிய கணாசாரத்தை ஓவியப் பாங்கினும் சித்திரப் பாங்கினும் சுவாமிகள் தீட்டிக் காட்டுவதால், வீரசைவம் மேலும் வலிவும் பொலிவும் பெறுகின்றது.

வீரசைவம் சிவப்பிரகாசரால் மிகவும் ஓங்கி உலகளந்து நிற்பது, அவர் பேணிய பெண்ணுரிமையால்தான்! பல யுகங்களாகப் பாதிக்கப்பட்ட பெண்கள், தங்கள் ஆதங்கத்தையும் சினத்தையும் சிவப்பிரகாசர் மூலமே வெளிப்படுத்த முடிந்தது. அரிச்சந்திரன் சந்திரமதியை விற்றபோது, கேட்பதற்கு ஆளில்லை. நளன் தமயந்தியைக் காரிருளில் கானகத்தே

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

கைவிட்டுப் போனபோது, தட்டிக் கேட்பதற்கு நாதியில்லை. சீதாபிராட்டியை இராவணன் அசோகவனத்தில் சிறை வைத்ததைக் கண்டுபிடிப்பதற்கே பத்துமாதங்கள் ஆகின. கட்டிய கணவர்கள் ஐந்துபேர் சிலைபோல் நின்றிருக்க, பாஞ்சாலி அரசவையில் துகிலுரியப்பட்டபோது, கடவுளைத் தவிர காப்பதற்கு யாரும் வரவில்லை.

இப்படிப் பல பெண்கள் விட்ட கண்ணீர், சிவப்பிரகாசரின் எழுத்தாணி வழியேதான் வெளிப்பட்டது.

வேடுவக்குலப் பெண்ணின் அழகில் மயங்கிய மன்னன், தூதரை அனுப்பிப் பெண் கேட்கச் சொல்லுகின்றான். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட சிவப்பிரகாசர்,

விற்ற தார்கலை பாதி யோடுவ
னத்திலேஅழ விட்டதார்?
வெஞ்சி றைப்புக விட்ட தார்துகில்
உரிய விட்டுவி ழித்ததார்?
உற்றதாரமும் வேண்டும் என்றினி
மன்னர் பெண்கொளல் ஒண்ணுமோ?
உமிய டாமணம் என்ற வாய்கிழித்து,
ஓலை காற்றில் உருட்டடா

எனத் திருவெங்கைக் கலம்பகப் பாடல் (15) வழி, தலைமுறைக் கோபங்களைக் கொட்டித் தீர்க்கின்றார்.

தம்முடைய முப்பத்து நான்கு நூல்களில் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம், திருக்குறளை எடுத்தாண்டவர் நம் சுவாமிகள். சிவப்பிரகாசரை வள்ளுவப் பிரகாசர் என்று கூறுமளவிற்கு உரையாசிரியர், திருக்குறளோடு ஒன்றியவர், சுவாமிகள். அத்திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகரால், பெண்ணினத்திற்கு ஓர் அவமானம் இழைக்கப்பட்டிருந்தது. அந்த அவமானத்தை சிவப்பிரகாசரைத் தவிர, வேறு யாரும் துடைப்பதற்கு முன்வரவில்லை. **“பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்லபிற”** எனும் குறளுக்கு உரையெழுத வந்த பரிமேலழகர் **“அறிவறிந்த என்றதால், மக்கள் என்னும் பெயர் பெண் ஒழிந்து நின்றது”**

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

என்றெழுதிப் போனார். இன்னும் ஈன்றபொழுதின் எனும் குறளுக்கு உரையெழுதும்போது, "**பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்டதாய்**" என்று மறுபடியும் ஒரு நச்சு விதையை ஊன்றிப் போனார்.

பெண்ணினத்திற்கேற்பட்ட அவமானத்தைத் துடைக்கத் துணிந்த சிவப்பிரகாசர் - வீரசைவத்தின் விடிவெள்ளி "திருமணத்தின்போது மணமக்களை வாழ்த்துபவர்கள் எல்லாம் ஆண்குழந்தை பெறுக" என வாழ்த்துகிறார்கள். அவர்கள் எல்லாம் வெட்கப்படும்படியாகப் பர்வதராசன் ஒருமகளாக திருமகளாக, ஒரு பெண்குழந்தையைப் பெற்றிருக்கிறார் பார் எனக் கேட்கும் முகத்தான், பரிமேலழகருக்குப் பதில் சொல்லியிருக்கிறார். பாடல் வருமாறு:

கற்றார் அறிகுவர் மக்கள்தம் பேறுஎனக் கட்டுரைத்த
சொல்தான் ஒருபெண் ஒழித்ததென் பாரொடு தொல்லுலகில்
நற்றாண் மகன்பெறுக என்றாசி சொல்பவர் நாணஉனைப்
பெற்றான் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே
(பெரி.கலி.12)

பெண்ணுரிமைக்குப் போராடுவதில் சிவப்பிரகாசர் ஒரு போராளியாகவே ஆகிவிடுகிறார். வரதட்சணைக்கொடுமையை எதிர்த்து முதல் குரல் கொடுக்கும் சமயவாதி சிவப்பிரகாசர் மட்டுமே! உண்மையில் பெண்ணுக்கு மணமகன்தான் பரிசப்பொருள் தரவேண்டும் என்று சுவாமிகள் விழைகிறார். ஆனால், மறுமுனையில் (பிரம்மச்சாரியத்தில்) இருப்பதால், "பெரியம்மையே! உன்னை மனைவியாக ஏற்பதற்குப் பழமலைநாதர் பர்வதராசனுக்கு என்ன வரதட்சணை கொடுத்தார்" எனக் கேட்கின்றார். பாடல் வருமாறு

நற்றவத்து உன்னைப் பெறுமலைக்கு என்னமுன் நல்கிஉனைப்
பற்றுறக் கொண்டது எலும்பே யணியும் பழமலைதான்
சற்றுஎனக்கு ஐயம் தராதுசொல் நும்மலைச் சாதியுள்ளே
பெற்றவர்க்கு என்ன முலைவிலை குன்றைப் பெரியம்மையே
(பெரி.கலி.11)

சைவத்தில் கூடக் கிடைக்காத பெண்ணின் பெருமை வீர சைவத்தில் கிடைக்கிறது என்றால், அதற்கு முதற்காரணமும், முழுக்காரணமும் சிவப்பிரகாசர் தாம். தடுத்தாட்கொண்ட

Digitization by Hindu Heritage-Foundation of America. HHFA(USA)

புராணத்தில், சுந்தரர்க்கு மணம் பேசப்பட்ட பெண், புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியாரின் பெண் என்று வாசகர்களுக்குத் தெரியுமே தவிர, அவள் பெயர் கூடத் தெரியாது. மண மேடையில் இருந்த சுந்தரரை வயோதிகராக வந்த சிவன் வாதிட்டு, வெண்ணெய் நல்லூருக்கு அழைத்துப் போம் வரையில், அந்தப் பெண் எதிர்த்து ஏன் என்று கேட்டதில்லை.

மானக்கஞ்சாற நாயனார் புராணத்தில், மானக்கஞ்சாற நாயனார் தவமிருந்து ஒரு பெண்பிள்ளையைப் பெறுகிறார். அவருக்கு மணமாலை கழுத்தில் விழும் நேரத்தில் மாமனிதராக வந்த சிவபெருமான் அவள் கூந்தலைக் கத்தரித்து வாங்குகின்றான்.

அப்பெண் வெட்டப்படப் போகின்ற ஆடுபோல் நிற்கின்றாளே தவிர, எதிர்த்து ஏன் எதற்கு என்று கேட்ட தில்லை. ஆனால், பிரபுலிங்கலீலையில், நிருமலன் மகளை, ஒரு வீராங்கனையாக நிறுத்துகிறார் சிவப்பிரகாசர். கௌசிகன் என்ற மாமன்னன் பெண்கேட்டுத் தூதுவரை அனுப்புகின்றான். நிருமலன், "என்மகள் ஞானத்தில் வல்லவள்; அவளிடத்துச் சென்று உங்கள் விருப்பத்தைக் கூறுங்கள்; அவள் விருப்பப்பட்டு இசைந்தால் நன்று என்று செல்லுமின்கள்" என நெற்றியடியாகப் பதில் சொல்லுகின்றான், பெண்ணைப் பெற்ற தகப்பன். பிற்காலத்தில் பாரதியும் பாரதிதாசனும் தந்த உரிமையை 17ஆம் நூற்றாண்டிலேயே சிவப்பிரகாசர் வழங்கி விடுகிறார்.

என்று மாதரார் கூறும் நிருமலன் எங்கள்
மன்றல் வார்குழல் பேதையோ வல்லள்நும் மனத்தைச்
சென்று கூறுமின், அவள்மனம் இசைந்துரை செய்யின்
நன்று போமின் என்று இயம்பினள் அவர்மனம் நயந்து

(பிரபு.லீலை.555)

இன்னொரு இடத்தில் சிவப்பிரகாசர் பெண்ணின் பெருமையை, வீரசைவத்தின் பெருமை ஆக்குகின்றார். மணப்பெண்ணாகிய மாதேவியைத் தேடி, மாமன்னராகிய கௌசிகனே வந்து, "நான் என்ன செய்யவேண்டும் என்று சொல்! உன் விருப்பத்தை நிறைவேற்றக் காத்திருக்கிறேன்.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

எனக்கு நீ மனைவியாக வேண்டும்” எனக் கெஞ்சிய நேரத்தில், மாதேவி, “நான்முகனும் திருமாலும் தேடிக் கொண்டிருக்கிற சிவனை, அங்கைத் தலத்தில் இட்டலிங்கமாக ஏந்தி, அருச்சிக்கத் தயாராக இருந்தால், உன்னை மணப்பேன்” என்று வீரசைவத்தின் வீராங்கனை போல முழங்குகின்றாள் மாதேவி. அவளை அப்படிப் பேச வைப்பவர் சிவப்பிரகாசர். பசவரும் பெண்ணுடைய ஒப்புதலைக் கேட்டறிந்த பின்னரே திருமணத்தை உறுதி செய்ய வேண்டும் என்றார்.

சமயவாதிகளும், ஏனைச் சமுதாயவாதிகளும் காக்கத் தவறிய பெண்ணின் உரிமையைச் சிவப்பிரகாசராகிய வீரசைவ சிவஞானி தருகின்றார். ஒரே நேரத்தில் வீரசைவத்தின் பெருமையையும் பெண்ணின் பெருமையையும் ஏந்திப் பிடிக்கின்றார் நம்சுவாமிகள்.

ஏதுநான் செய்வது அன்ன இயற்றுவன் அறைதி என்ன
ஓதினான் அரசன் ஓத ஒண்டொடி அயன்மால் தேடும்
சோதிமா சிவலிங் கத்தைத் தூயையாய்க் கரபீடத்தில்
போதினால் அருச்சித் துஎன்னைப் பொருந்துதி பின்னை என்றாள்
(பிரபு.லீலை.578)

என்பது பாடல்.

கைலாயத்தில் அல்லமர் சபை கூடுகிறது. அப்பொழுது வீரமா காளியும் அவ்வவைக்கு எழுந்தருளுகின்றார்கள். சாதாரணமாக எழுந்தருளினாள் எனச் சிவப்பிரகாசர் சொல்லியிருக்கலாம். ஆனால், பெண்ணின் பெருமையைப் பேசவேண்டும் என்பதற்காக ‘அவள் பெண்ணிற்கு வீரம் இல்லையென்று யார் சொன்னது?’ எனக் கம்பீரமாகவே கேட்டுக் கொண்டு எழுந்தாள் எனச் சிவப்பிரகாசர் சித்திரிக்கின்றார்.

வீரம் மாதருக்கு இல்லை என்று உரைப்பது என்விளங்க
வீரமாதுஎன அறிகிலிரோஎன விளம்பி
வீரயோகினி வெள்ளமோடு அமர்பொர விரும்பும்
வீர காளியும் புகுந்தனள் அவையிடை விரைந்து (பி.லீ.63)

என்பது பாடல்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவப்பிரகாசரைப் போலவே பசவரின் சிந்தனையும் கன்னடத்து வீரசைவமும் பெண்மைக்கு முதன்மையும் சமத்துவமும் தந்தன. பாரதத்தில் தலைசிறந்த பக்தியும் மெய்ஞ் ஞானமும் பெற்ற பெண்கவிஞர்களுள் மகாதேவியக்காவும் ஒருவர். மகாதேவியக்காவீரசைவத்தின்ஐந்துதூண்களில்ஒருவர். வீரசைவ சமய பீடாதிபதியாக விளங்கும் முதல் பெண்மணி இவர்; 'மாதாஜி' என அனைவராலும் போற்றப்படுபவர். இவர் துறவி நிலையிலிருந்து 'ஜகத்குரு'வாக உயர்ந்திருப்பது, பெண் இனத்திற்குப் பெருமை தருவதாகும்.

பசவரின் சிவானுப மண்டபத்தில் ஜங்கமராயிருந்த தாசினமயா எனும் கவிஞர் "மேலே முடிவளர்ந்தால் பெண்ணென்பர். தாடி, மீசை வந்தால் ஆண் என்பார். நடுவில் சுற்றும் ஆன்மா, ஆணுமல்ல- பெண்ணுமல்ல நான் ஆன்மநாதர்" என வீராவேசத்தோடு பாடியிருக்கிறார்.

வீரசைவம் ஆகமத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆகமங்கள் சிவபெருமானின் ஐந்து முகங்களிலிருந்தும் தோன்றியவை; வேதம் சிவபெருமானின் மூச்சுக்காற்றில் வெளிப்பட்டது. ஆகமங்கள் இருபத்தெட்டு ஆகும். வேதங்கள் உயிர்களைக் கொன்று நிகழ்த்தப்படும் யாகங்களையும் வேள்விகளையும் ஏற்கின்றன. தக்கன் வேதத்தின்படி வேள்வி செய்ததால்தான் சிவபெருமான் அதனை அழித்தான். ஆனால், திருமாகாளத்திலே சோமாசிமாறனார், ஆகம வழி-யிலே வேள்வியை நிகழ்த்தினார். சோமாசிமாறநாயனார் நீசர் கோலத்தில் வந்த சிவனுக்கே அவிர்பாகம் தந்ததால், அவரைச் சிவப்பிரகாசர் 965ஆம் பாடலில் வியந்து பாராட்டுகிறார்.

வீரசைவம், உயிர்க்கொலைக்கு எதிரி என்பதால், பிராண லிங்கத்தை உள்ளே நிறுத்திச் செய்யும் ஆகமவேள்வியையே ஏற்றுக் கொள்ளும். அகத்தில் வளர்க்கும் அகத்தீயை வீரசைவம் ஏற்குமே தவிர, புறத்தில் வளர்க்கும் புறத்தீயை ஏற்காது. பூசலார் நாயனார் அகத்தில் தீயை வளர்த்தார். அதனால்தான், சிவபெருமானைக் காடவர்கோன், தான் புறத்தில் கட்டிய திருக்குடமுழுக்கு விழாவிற்கு அழைத்தபொழுது, பெருமான், "நின்றவூர்ப் பூசலன்பன் நெடிது நாள் நினைத்து செய்த நன்று

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

நிடாலயத்து நாளை நாம் புகுவோம்" எனக்கூறி, காடவர்கோன் அழைப்பினை ஒத்தி வைப்பான்.

பொதியமலையில் வாழ்ந்த அகத்தியன், அகத்தில் தீ வளர்த்ததால், அகத்தீயன் என அழைக்கப்பட்டு, அது அகத்தியன் ஆயிற்று. அகத்தியன் கொல்லாமையைக் கடைப்பிடித்தவன் என்பதால், சிவப்பிரகாசர். கொல்லா நோன்பு முனிமலையில் தோன்றி (பி.லீ.277) என்று அகத்தியனுடைய சிறப்பை, மலைக்கு ஏற்றிப் பாடுகின்றார். வேதநெறி பசவருக்கும் உடன்பாடாயிற்று. அதனால்,

வேதங்கள் சாத்திரங்கள் கற்றவர்கள் பெரியோரோ?
மாயையெனும் மயக்கத்தில் மனங்குழம்பித் தடுமாறும்
கீதைதனை அறிந்தவர்கள் நீதியுடைப் பெரியோரோ?
வேள்வியினைச் செய்திடுவோர் நாடகத்துப் பாணரெலாம்
சாதிக்கும் சாதனைகள் சாற்றிடினே கீழாமோ?
தளராத அறிவுகுணம் நல்லொழுக்கம் உயரங்கள்
ஓதுகின்ற மெய்யறிவு இவற்றையெல்லாம் சங்கமனின்
ஒளிச்சரணர் வினைப்பயனே சாதிக்கும் சாதனையே

என்று மறுத்துப் பாடுகிறார். மேலும் புறத்தீயில் நீங்கள் நிகழ்த்தும் சாதனைகளை எல்லாம், நல்லொழுக்கம் - மெய்ஞ் ஞானம் மேற்கொண்டொழுகும் சரணரே சாதித்து விடுவர் என்று பாடுகின்றார்.

பசவரைத் தொடர்ந்து சென்னபசவண்ணர் வேதத்தை வெறுத்து, "வேதம் என்பது வெறும் படிப்பு, சாத்திரம் என்பது சந்தைச் செய்தி, புராணம் என்பது போக்கிரிக் கும்பல், சாத்திரம் பெரிதென்னில் உயிர்வதையைச் செய்கிறது" என வசனகவிதை எழுதியிருக்கிறார். சிவப்பிரகாசரும் கன்னடநாட்டுக் கவிஞர்களைப் போலவே,

வேதம் ஆகமம் வெறும் பற்பல
ஓதி நாளும் உளம்தடு மாறன்மின்;
சோதி காண்இருள் போலத் தொலைந்திடும்
தீதுள லாமும் சிவசிவ என்மினே

என்று சிவநாம மகிமையில் (1) பாடுகின்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

வேதம் வேண்டாம் என்பதை மேலும் வற்புறுத்த வந்த சிவப்பிரகாசர் அதனை, பிரபுலிங்கலீலையில் (964)

குடுமி அம்கிரி ஒப்பக் குவிந்தபுல்
சுடுதல் கொண்டு, பிறவி சுடப்படாது
அடுபு லன்கள் அறிவெனும் அங்கியில்
சுடுதல் கொண்டு பிறவி சுடப்படும்

எனப் பாடுகின்றார்.

"வேதங்கள் ஐயாவென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்" என மணிவாசகர் பாடியிருப்பதாலும், "வேதங்களால் எடுக்க இயலாத எந்தாய்" என நம்மாழ்வார் அருளிச் செய்திருப்பதாலும், "வேதம் ஓதிற் விழிநீர் பெருக்கி நெஞ் சுருகி நிற்பவர் காண்கிலோம்" எனச் சிவப்பிரகாசரே நால்வர் நான்மணிமாலையில் பாடியிருப்பதாலும், ஆகமநெறியே வீரசைவத்திற்கு உகப்பானது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி உண்மையாயிற்று.

பின்னரும் திருவெங்கையுலாவில், சிவபெருமான் வேத உணவை வெறுத்து, தேவார மூவர்களுடைய உணவையே உண்ண விரும்புவதாகப் பாடுகிறார், சிவப்பிரகாசர். பாடல் வருமாறு:

வேதஉணவு வெறுத்துப் புகழ்மூவர்
ஓதுதமிழ் ஊணுக்கு உழல் செவியன் (கண்ணி-27)

ஆகமநெறிகள் சிவபெருமானுடைய திருமுகத்தில் தோன்றியவை என்பதாலும், அந்த ஆகமத்தை அறுபத்து அறுவரும் விஞ்ஞகர்களும் கேட்டறிந்தனர் என்பதாலும், ஆகமநெறியே சிறந்தது என்பதை,

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்;
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சுஆம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே

எனும் பாடல்வழி வெளிப்படுத்துகின்றார் திருமூலர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

மற்றும் சிவபெருமானே ஆகம நூலாக நின்று வாழ்ந்து காட்டியிருக்கின்றான் என்பதாலும், **“ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!”** என்று மணிவாசகர் பாடியிருப்பதாலும், ஆகமநெறியே வீரசைவத்தின் கவசமாகும். ஆகம நெறியிலே பூசைகளை நிகழ்த்துபவனே நல்லருள் பெறுவான் என்பதனை, **“பொருவில் ஆகமம் புகன்ற மந்திரக் கிரியைகள் வழுவறக் கிளக்கும் நல்லருள்”** *(பிர.லீலை.369)* என்றவாறு அருளுவார்.

வேதத்தைச் சைவசமயம் போல் முற்றாக ஏற்கவும் இல்லை, வீரசைவம்; வேதத்தைக் கன்னடநாட்டவர்களைப் போல முற்றாக வெறுக்கவும் இல்லை வீரசைவம்; வேதத்தில் ஏற்க வேண்டியதை ஏற்றுத் தள்ள வேண்டியதைத் தள்ளியது, வீரசைவம் என்பது சிவப்பிரகாசத்தின் உட்கருத்தாகும்.

பஞ்சாசாரம் என்பது வீரசைவத்தின் அடித்தளம். அந்தப் பஞ்சாசாரத்தில் முதலாவதாக இடம்பெறுவது, இலிங்க **ஒழுக்கம் என்னும் இலிங்காசாரம்.** இலிங்க ஒழுக்கம் என்பது ஒளியுடன் ஒழுகும் ஒழுக்கமாகும். ஒளிவாழ்க்கையில் அனைத்துப் பொருளோடும் இணைந்து வாழவேண்டும். வீரசைவன் பிண்ட லிங்கி! பிண்டலிங்கியாகிய வீரசைவன் அண்டலிங்கத்துடன் இணைந்து செயல்படவேண்டும். அனைத்து உயிர்களையும் இலிங்கியாக ஆக்கும் பயிற்சியில் சாதி, குலம், கோத்திரம், சமயம், சடங்கு ஆகிய தடைகளை அகற்றி, இலிங்க ஒழுக்கம் மேற்கொண்டொழுகும், சமூக வாழ்க்கை இலிங்க ஒழுக்கம் ஆகும்.

பசவர் அல்லமருடைய தலைமையில், சிவானுபவ மண்டபத்தில் அனைத்து அடியார்களையும் (பெண்கள் உள்பட) சங்கமிக்க வைத்தவர். அதுபோலவே சிவப்பிரகாசர் ஆதி சிவஞானபாலயராகிய தம் குருநாதர் சந்நிதியில் அனைத்து அடியார்களையும் கூட்டியவர். இதையே சண்முக சுவாமிகள், “இலிங்க நட்பில் மனம் அடங்கியிருக்க வேண்டும்; ஜங்கம நட்பில் உடல் புறத்தே, அடங்கி இருக்க வேண்டும்” என்பர்.

சைவத்திலும்- வைணவத்திலும் சாதி ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள் இல்லையே தவிர, சாதி அமைப்புகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருந்தன. நந்தனார், தில்லை நடராசனை நேரடியாகச் சென்று தரிசிக்க முடியவில்லை. தீயில் குளித்தே காண முடிந்தது. திருஞானசம்பந்தருக்கு திருஆலவாயில் ஆசனம் போட்டு அமரச் செய்தவர்கள்; அவருடன் சென்ற திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு ஆசனம் தரவில்லை. ஞானசம்பந்தர் அந்த யாழைத் தரையில் வைத்தால் சீதளம் பிடித்து விடும் என்று சமத்காரமாகப் பேசி, பின்னரே அவருக்கும் ஆசனம் தரச் சொல்கிறார். திருப்பாணாழ்வார் காவிரிக்கரையில் நின்று அரங்கநாதனைச் சேவிக்க முடிந்ததே தவிர, திருவரங்கம் கோ-யிலுக்குள் நுழைய முடியவில்லை. அரங்கநாதன் அறிவுறுத்தி, உலோகசாரங்கர் தோள்களில் அமர்ந்தே நுழைய முடிந்தது.

ஆனால், வீரசைவத்திற்குச் சாதியே கிடையாது; குலம் கோத்திரமே கிடையாது. வீரசைவத்தில் சாதியமைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தவர், பசவர். மாதர சென்னையன், டோகர கக்கையன், தாழ்த்தப்பட்ட குடியில் பிறந்தவர்கள். மடிவாள மாச்சையன் துணிவெளுப்பவன்; மாரய்யன் விறகு வெட்டி; அரளய்யன் செருப்புத் தைப்பவன் ஆகிய அனைவரின் சாதியையும் ஒழித்துத் தம்முடைய தியான மண்டபத்தில் சரிசமமாக அமர வைத்தவர். "நான் டோகர கக்கையன் மகன்; சென்னய்யன் என் முப்பாட்டன்; பக்தி, நற்குணம் ஆகியவற்றைக் கீழ்க்குலத்தவரிடமே அறிந்து கொள்வேன். உயர்குலத்தில் பிறந்தது என் தலைவிதி" எனப் பசவர் தரும் வாக்குமூலம் நம்மையெல்லாம் சிலிர்க்கச் செய்கிறது.

சிவப்பிரகாசர் சாதிப்பாகுபாட்டைத் தீவிரமாகக் கண்டிக்கிறார். அடியார்களுடைய சங்கமத்தில் சாதி பார்ப்பவன், மனிதருக்கு மட்டுமன்று; அவன் அங்கையில் ஏந்தியிருக்கும் இட்டலிங்கத்திற்கே சாதி பார்ப்பவன் ஆவான் எனும் கருத்தை,

சங்கமம் தனக்குஒரு சாதி உன்னினான்
அங்கையில் அமர்தரும் அரற்கும் உன்னினான்
சங்கர னொடுசரம் தம்மில் வேறுஎனும்
அங்குஅவன் அறிவரும் அளற்று அழுந்துவான் *(பி.லீ.828)*

எனும் பாடலின் மூலம் விளம்பியதோடு,

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

அத்தகையோன் நரகத்திற்கும் போவான் என எச்சரிக்கின்றார்:

பின்னும் ஒருமைப்பாட்டை வலியுறுத்த வந்த சிவப்பிரகாசர், சித்தாந்த சிகாமணியில் (5ஆவது பாடல்)

வேதியன் - புலையன், கீழோன்-மேலோன் எனும் வேறு பாடு வீரசைவத்திற்கு இல்லை.

சமத்துவம் உடையவனே ஈசனுக்கும் அன்பினன் ஆவான்; அப்படியின்றி வேற்றுமை பார்ப்பவன் அந்தணனாயினும் ஈசற்கு இனியவன் ஆகமாட்டான் எனும் செய்தியினை,

வேதி யன்புலைக் கீழ்என வேறிலை
ஓத ரும்சிவ பத்தி உடையனே
ஏதும் ஈசற்கு இனியவன் இன்மையோன்
ஆதி வன்னத்தன் ஆயினும் அல்லனே. (சித்சிகா - 237)

எனும் பாடல் மூலம் இயம்புகின்றார்.

சிவப்பிரகாசர் போற்றும் வீரசைவம், பஞ்சாசாரத்தின் அம்சமாகிய இலிங்காசாரத்திற்கும் பெருமை சேர்க்கும் ஒன்றாக அமைகிறது.

பஞ்சாசாரத்தில், இரண்டாவதாக இடம்பெறுவது, **'சதாசாரம்'** எனும் **தன்னிறுத்தல் ஒழுக்கம்** ஆகும். வீர சைவத்தில் ஞானம், செயல், பக்தி, பாவனை ஆகிய நான்கும் இணைந்து செயல்பட வேண்டும். பிறப்பினாலே ஒருவன் பெருஞ்செல்வனாக இருந்தாலும், வீரசைவன் தனக்கு இயன்ற வேலை செய்து, அதனால் வரும் வருவாயைக் கொண்டு வாழவேண்டும். தன் உழைப்பில் வரும் பொருளில், ஒரு பகுதியைத் தகுதியுள்ளவர்களுக்கு வழங்க வேண்டும்.

பசவரும் அவருடைய ஜங்கமர்களும் உழைப்பை வீரசைவத்தின் உயிர்நாடியாகவே வற்புறுத்தினர். உடலிருக்கும் வரை எத்தகைய சிவயோகிகளாக இருந்தாலும், முடிந்த அளவு உழைக்க வேண்டும். உழைப்பே கயிலாயம். அதில் இழிவு ஏற்றத்தாழ்வு இல்லை. உழைப்புப் பக்தி ஞானத்துடன் கூடிய செயல். **எல்லாத் தொழிலும் "பரமனுடைய ஆராதனை"** என்பது அல்லமரின் தியான மண்டபத்தில் அன்றாடக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கருத்துரையாக இருந்தது.

தொழிலின் முதன்மையை உணர்த்துவதற்காகக் கட்டாயக் காயகம் எனும் சித்தாந்தம் சிவஞானியர்களால் வகுக்கப்பட்டது. "உணவே தேவன்; இது தேவனாக வேண்டுமென்றால், உணவைத் தேடித் தரும் தொழில் தேவனாக வேண்டியுள்ளது. தேவனாகிய உழைப்பு இல்லாதவர்கள், பக்தரல்லர்" என்றெல்லாம் பறைசாற்றப்பட்டது.

சென்ன பசவண்ணர் உழைப்பின் முக்கியத்துவத்தை வற்புறுத்துவதற்காக,

"உழைப்பில்லாத பக்தன், மனிதன்; உழைப்பில்லாத மகேசன், அரக்கன்; உழைப்பில்லாத பூசாரி, பரதேசி; உழைப்பில்லாமல் இலிங்கத்தை அணிபவன் பாவி; உழைப்பில்லாத சரணன், முட்டாள்; உழைப்பில்லாத இலிங்க ஐக்கியம் சிரிப்புக்கு ஆளாகும் கூடல சென்ன சங்கம தேவா" என வசனகவிதையே பாடினார்.

இன்னும் சித்தராமன் என்பார், "சிவயோகியின் உடல் வெறுமனே அழியக்கூடாது; முடிந்தவரையில் உடல் உழைப்பு நடந்து கொண்டேயிருக்க வேண்டும்" என்றார். மேலும், சரணர்களுக்குத் தீட்சை வழங்கும்போது, இலிங்கத்துக்கு ஒரு பெயரையும் (முத்திரை) பக்தனுக்கொரு தொழிலையும் கட்டாயப்படுத்தியுள்ளார்.

மற்றும் மாதார தூளய்யா எனும் செருப்புத் தைக்கும் தொழிலாளி; இட்டலிங்கத்தை அங்கத்தில் பொருத்திய வீரசைவர். அவர் 102 வசன கவிதைகள் எழுதியுள்ளார். அவர் உழைப்பின் மகத்துவத்தைப் பற்றிப் பேசும்போது, "சிவனே நேரில் வந்தாலும், எனது வேலை மீதிருந்த சிரத்தையை விட மாட்டேன்" என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறார்.

சிவப்பிரகாசர் உழைப்பின் முதன்மையை எடுத்துச் சொல்வதற்கு ஓர் அருமையான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறார். மனிதர்கள்மேல் உழைப்பை வைத்துச்சொன்னால் அவ்வளவு ஆழமாகப் பதியாது என்று, சிவபெருமான் குடும்பத்தை வைத்தே எடுத்தியம்புகின்றார். தம் தம்பியர்க்குத்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

திருமண வாழ்த்துப் பாடுகின்றபோது, சிவபெருமான் உழைப் பதாக வருணித்துரைக்கின்றார். பிச்சாண்டியாக நாளும் பிச்சையேற்று வாழ்கிற தம் கணவனைப் பார்த்து உமாதேவி கூறுவதாகப் பாடியருளுகின்றார், சிவப்பிரகாசர்.

"பிச்சாண்டியாகிய கணவரே! நீர் ஏன் ஊர்ஊராகப் பிச்சை எடுக்கின்றீர்; உழைத்து வாழக் கூடாதா? நீ உழுது உழைப்ப தாக இருந்தால், திருமால் நிலம் தருவான்; குபேரன் விதை நெல் தருவான்; பலராமன் கலப்பை தருவான்; எமன் எருமை தருவான்; நம்மிடமும் ஓர் எருது உளது; சூலத்தைக் கொழுவாக மாற்றலாம்; நம் அன்பர்களிடம் அன்பு என்னும் கயிறும் பிறவும் வாங்கலாம்; நம் இளையவன் முருகன் மாடுகளை மேய்ப்பான். எனவே இனி உழுது பயிரிடுவதே நல்லது; பிச்சை எடுத்து உண்ணுதல் இழிவு" என்று உமாதேவி கூறியதைக் கேட்டு, நற்செயல் என்று மகிழ்ந்தானாம் சிவபெருமான். அத்தகைய சிவபெருமான் தம்முயிராகிய நம்மைக் காப்பாற்ற மாட்டானா என்று வாழ்த்துப்பா பாடுகிறார் சிவப்பிரகாசர். பாடல் வருமாறு

அச்சுதன் அளிப்பன் நிலம்உமது நேயன்வித்தை
அருளுவன் பலபத் திரன்
அலமுதவு வன்சமன் பகடுஈவன் நம்தமக்கு
ஆனதோர் எருதும் உண்டே
முச்சிரம் அயிற்படையினைக் கொழுவ தாக்குவோம்
மொய்ம்புடன் இழுத் திருக்க
முந்திய வடக்கயிற் றுடன்மற்றும் நமதுஅன்பர்
முன்போய் இரந்து கொள்வோம்
இச்சையுடை நமதுஇளைய தனயன்ஆ கியகந்தன்
இனிமை யொடுமாடு மேய்ப்பன்
இனிஉழுது பயிரிடுதல் நன்றுநன்று இதைவிட்டு
இரந்துண்பது ஈனம் எனவே
கச்சுமுலை மாதுமை யுரைத்திடும் புத்தியைக்
கைக்கொண் டுள்ளத்தில் இதுநற்
காரியமெனக் கருதி மெத்தக் களித்திடும்
கண்ணுதல் உமைக் காக்கவே (து.பா.8)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பஞ்சாசாரத்தில் ஒன்றாகிய சதாசாரத்தை எடுத்துச் சொல்வதற்காகச் சிவப்பிரகாசர் கையாண்ட உத்தியைப் பார்க்கும்போது, இன்னொரு முறை அவரைக் கற்பனைக் களஞ்சியம் என்று உரக்கச் சொல்ல வேண்டும்போல் தோன்றுகிறது.

கொள்கையளவில் மட்டுமல்லாமல், நடைமுறையில் உழைப்பின் உயர்வை எடுத்துக் காட்டியவர் சிவப்பிரகாசர். திருக்காட்டுப்பள்ளியில் சுவாமிகள் தம் அடியார் கூட்டத்தோடு சென்று கொண்டிருக்கும்போது, உப்பு விற்றுக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணைக் காணுகிறார். உழைத்து உண்ணும் அப்பெண்ணைப் பாராட்டும் முகத்தான், "ஏ! பெண்ணே உன்னிடம் உப்பு நிறைய இருக்கின்றதா அதுவும் வெள்ளை உப்பா!" எனக் கேட்கின்றார். அவள் கவித்திறம் மிக்கவள் என்பதைக் கேள்விப்பட்டு, அவளுடைய புலமைத்திறத்தையும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக ஒரு வெண்பாவைப் பாடுகிறார்.

நிறைய உளதோ வெளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மான் - உறையும்
திருக்காட்டுப் பள்ளித் திரிபாவாய்; நீயிங்கு
இரு;காட்டு உப்புஅள்ளி எமக்கு

எனும் வெண்பாவைக் கேட்டு, அப்பெண்ணும் எதிர்ப்பாட்டுப் பாடுகிறாள்.

தென்னோங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெம்மான்
பொன்னோங்கு சேவடியைப் போற்றினோம் - அன்னோன்
திருக்கூட்டம் அத்தனைக்கும் தெண்டனிட்டோம் தீராக்
கருக்கூட்டம் போக்கினோம் காண்

என்று.

இலிங்கா ரெட்டியார் போன்ற பெருநிலக்கிழார்களோடு பழகுகின்ற சுவாமிகள், உப்பு விற்கும் பெண்களோடும் உரையாடியது, சமத்துவம் அல்லவா? **"வையகம் காப்பவரேனும் சிறு வாழைப்பழக்கடை வைத்திருப்பவரேனும், பொய்யகலத் தொழில் செய்வர் மேலோர்"** என்று பிற்காலத்தில் பாரதி

Digitization by Hindu Heritage-Foundation of America. HHFA(USA)

பாடியதற்கு முன்னோடி, சிவப்பிரகாசர் அல்லவா?

பஞ்சாசாரத்தில், சிவாசாரம், பிருத்யாசாரம், கணாசாரம் என்பன முன்னரே விளக்கப்பட்டுவிட்டன.

வீரசைவர்களுக்கு மிகவும் வேண்டிய குணம், வேண்டாமை; "எனக்கு அது வேண்டும், இதுவேண்டும் என்று வேண்டினால், இறைவன் தூரப்போய்விடுவான்" என்று எண்ணுவது வீரசைவம். வீரசைவத்தில் அகமார்க்கத்தாரும் உண்டு. சகமார்க்கத்தாரும் உண்டு. **"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார் கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"** எனச் சேக்கிழார் பாடியதற்கேற்பவே விளங்குவர், அகமார்க்கத்தார்! சகமார்க்கத்தார் பேரின்பங் களைப் பெற்று வாழ்பவர்கள் ஆவர்.

வீரசைவர்களுக்கு வேண்டாமை அன்ன விழுச்செல்வம் வேண்டும் என்பதைச் சிவப்பிரகாசர் தம் ஞானாசிரியர் - குருநாதர், சாற்றியதாகக் கலம்பகம் என்னும் நூலில்,

வலம்திரி கதிர்காண் உலகினர் எல்லாம்
வந்துகேட் பனஇலை எனாத
நலம்தரும் ஒருநீ தமியனேன் கேட்ப
நான்அலது இலையெனத் திருவாய்
மலர்ந்துஉரை செய்தது என்கொலோ அறியேன்

(சிவ.கலம்.5)

எனும் பாடல்வழி, தாம் எதையும் பெற்றதில்லை என்பதைத் தெரிவிப்பார். அதைத் தொடர்ந்து நெஞ்சுவிடுதூது எனும் நூலில்,

பொன்னை நரர்க்குக் கொடுத்து நீர்போம் என்று
தன்னை எனக்கருளும் தம்பிரான் (கண்ணி-8)

என மேலும் வற்புறுத்தி வேண்டாமையை விளம்புவார்.

மேலும் மண்ணை ஆளும் மன்னர்களிடம் போய்த் தனக்குப் பொன் வேண்டும் பொருள் வேண்டும் என வேண்டுபவர்கள் திருடர்கள் என ஏசுகின்றார் சிவப்பிரகாசர்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

படிக்குப் பெருஞ்செல்வ மாம்சிவஞானி மெய்ப்பத்தர் மணி
முடிக்குப் பெருஞ்செல்வ மாம்பதத் தானொடு முன்னிளங்கள்
மிடிக்குப் பெருஞ்செல்வ மென்றிலரே தரைவேந்தரொடுளங்
குடிக்குப் பெருஞ்செல்வ மென்று சென்றோதுறுங் கோளர்களே

எனக் கலம்பகத்தில் *(21)* மற்றவர்களைப் பார்த்தும் தாம் பொருள்மீது இச்சை கொண்டதில்லை என்பதைச் சுந்தரரோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார் சுவாமிகள். தாம் அங்கையில் ஏந்தியிருக்கும் இட்டலிங்கத்தைக் காட்டிலும், சுந்தரர் பெற்ற பொன்னும் பொருளும் பெரிதில்லை என்பதைப்,

பன்னு மாமறை தமிழினால் பாடுந ம்பிக்குப்
பொன்னும் ஆடையும் அணிகளும் ஊர்தியும் பொருளும்
இன்னும் ஈபவன் அருளினால் மேவி வீற்றிருப்ப
என்ன மாதவம் செய்ததோ! எனதுகைத் தலமே

எனும் பாடலின்வழி மொழிந்துள்ளார்.

வேண்டாமையின் வலிமையைச் சிவப்பிரகாசர் பிரபுலிங்கலீலையில், வெகுநேர்த்தியாக எடுத்துரைக்கின்றார். பசவருடைய தேசத்தில் மிக உயர்ந்த ஆடைகளைப் பெற்ற சங்கமர்கள் அவற்றைக் கிழித்து, கீழாடைக்குப் போக, மற்றவற்றை மற்றவர்களுக்கு ஈந்து செல்வார்களாம்.

செஞ்சரண் இறைஞ்சி நல்கும்
செழுந்துகில் கிழித்துக் கீழ்கொண்டு
எஞ்சிய மிகையென் றெண்ணி
யிட்டவண் அகன்று போவார் *(747)*

தாம் மட்டும் அன்றித் தாம் ஏற்றுக் கொண்ட ஆன்ம நாயகனாகிய அல்லமரும், "பொன்னும் பொருளும் வேண்டாம்; தாம் ஐக்கியப்பட்டு இருப்பதே போதும்" என்பதாகப் பிரபு லிங்க லீலை *(353)*

பொன்றும்இவ் வுடல்முத ல்யாவும் வேறுஎன நீக்குபு
நின்ற தம்மில்வே றலனெனு நிலையைநின்று தாதான்மியம்
ஒன்று றும்பரி சுஉரைசெயூ உணரும் வண்ணம் உணர்த்தினான்
பின்றல் இன்றிய வல்லமாப் பிரபுஎனும்குரு ராயனே!

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

எனும் பாடல் மூலம் வெளிப்படுத்துகிறார்.

பஞ்சாசாரத்தில், தாழ்வெனும் தன்மை வீரசைவனுக்குரிய ஓர் இலக்கணம். அந்தத் தாழ்வெனும் தன்மை நினைந்து ஆட்படுவது அன்று; அவர்கள் தம்மையறியாமலேயே ஆட்பட்டு விடுவர். சிவப்பிரகாசர் பசவரிடம் தம்மை இழந்தமையை "என்னை யாளுடைய நந்தி வானவர் தாள் எய்தி வந்து உதித்தனன்" என்பார். கம்பரும் இராமபிரானிடம் தாம் ஆட்பட்டதை, "பரதனும் இளவலும், எனையாள் வரதனும் இளவலும்" என்றவாறு விளம்புகிறார். அதைப்போலவே தெய்வச் சேக்கிழாரும், கண்ணப்பநாயனாரிடம் தாம் ஆட்பட்ட விதத்தை, **"வெண்தட வரையின் அற்றைநாள் தொடங்கி அடல்சிலை ஆண்மை முற்றக் கற்றனர் என்னை ஆளுடை கானவர்க்கரிய சிங்கம்"** என்றோதுவார். வீரசைவர்களுக்கு மட்டுமன்றி, சைவர்களுக்கும் இது பொதுக்குணம் போல் தெரிகிறது.

வீரசைவத்தில் இல்லறமும் துறவறமும் சரியாகவே கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் அழகூட்டுகிற வகையில் சிவப்பிரகாசர் வைரவெட்டு வெட்டியிருக்கிறார். சிவப்பிரகாசர் பலவற்றில் அல்லமர், பசவர் வழி-யிலேயே செல்லுகின்றார். அவர்கள் வழியிலேயே சென்று சிவப்பிரகாசரும் இல்லறம் - துறவறம் இரண்டினுடைய முழுமையையும் பெருமையையும் கண்டறிந்திருக்கின்றார். அவர் துறவியாக இருந்து கொண்டே சமன் செய்து சீர்தூக்கியிருக்கின்றார்.

பசவர் காலத்தில் வீரசைவத்தின் தூதுவர்களாக வந்தவர்கள் - துறவுநிலையில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு, புதல் மறைந்து புள் வேட்டையாடினார்கள். அதனால், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் "இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவியும் அல்லேன்; நல்லறத்தானும் அல்லேன்" எனப் பாடியது போன்ற நிலைமை, கன்னட நாட்டில் உருவானது. உடல் இச்சையைக் கட்டுப்படுத்தத் தெரியாத துறவிகள் இன்பத்துறையில் எளியர் ஆனார்கள்.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

அதேநேரத்தில், கணவன் மனைவியரான தேவர தாசியமய்யன் சிரியர்ள்ன் ஆகியோர் இல்லற வாழ்க்கையில் இருந்துகொண்டே இட்டலிங்க ஆராதனைகளையும் செய்து கொண்டே சிறப்புற வாழ்வதைப் பசவர் பார்க்கின்றார். உடல் இச்சைகளை அடக்குவதால் குற்றங்கள் வந்து சேருகின்றன என்றும், கணவன் - மனைவி இருவரும் சேர்ந்து சிவன்மீது கொள்ளும் பக்தி அவனுக்கு உகப்பாயிருக்கிறதையும் உற்றறிகிறார் பசவர். எனவே தாமும் கங்காதேவி, நீலலோசனி என்னும் மனைவியரை மணந்து, வீரசைவத்திற்கு அருந்தொண்டாற்றுவதென்று துணிந்தார்.

சிவப்பிரகாசர், இலிங்கரெட்டியார் - அண்ணாமலை ரெட்டியார் போன்ற பெருமக்கள் வற்புறுத்தியபோதும் பரசிவத்துள் ஐக்கியமாகின்ற வரையில் துறவியாகவே இருந்து விடுவதாக முடிவு செய்தார். என்றாலும், துவராடையில் இருந்து கொண்டு தூய்மை கெடுப்பவர்களைப் பல இடங்களிலும் கண்டிக்கிறார். குறிப்பாகப் பிரபுலிங்கலீலையில் இடம் பெற்ற செய்தியைச் சொல்லலாம். புறாக்களைப் போன்ற தலை-யினையுடைய மார்பகங்கள் விம்மிவிம்மி எழுவது எப்படி-யிருக்கின்றதென்றால், துறவுக்கூடத்தில் போலி வேடர்கள் நுழைந்து விடுவார்களோ என எட்டிப் பார்ப்பது போல் இருந்தன என்று தற்குறிப்பேற்றமாகப் பாடிச் செல்கிறார். மேலும், துறவும் முனைமுறியாமல் இருக்க வேண்டும்; இல்லறமும் பழுதிலாது இருக்க வேண்டும் என்பதை, பிரபுலிங்கலீலை விமலை கதியில் அற்புதமாக எடுத்துச் சொல்கிறார். தவம் செய்வதற்குத் தனக்கு வேறாகிய ஒருவன் தன்னிடம் இருந்து வேண்டாம். மனைவியும் கணவனும் பத்மாசனத்தில் இருந்து இட்டலிங்க வழிபாட்டிற்குக் குறைவு வராமல் விழிப்போடு வாழலாம்" எனும் கருத்தை,

வேறாம் ஒருவன் உடனிருப்பும்
வேண்டா தவத்திற் கென்பதோடு
மாறாய் மனையும் கொழுநனும்போய்
வனத்தில் கமலா சனத்திருந்து
தேறார் புனல்போல் தெளிந்த மனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திறந்துந் திறவா விழியொடுதம்
பேறாம் இட்ட லிங்கத்தில்
பிறழாது அமையும்படி வைத்து
(330)

எனும் பாடல்வழி எடுத்தியம்புகிறார்.

இதனால் இல்லறமும் துறவறமும் அதனதன் நிலையில் சரியாக இருக்க வேண்டும் என்று சிவப்பிரகாசர் விரும்புகின்றார். மேலும், தம் இருதம்பியரின் திருமணத்திற்கும் வாழ்த்துப்பா பாடியிருக்கிறார்.

சிவப்பிரகாசர் தாம் அப்பழுக்கற்ற - முற்றும் துறந்த துறவியாக இருந்தபோதும், அகவாழ்க்கையைப் பாடுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையில் சிற்றிலக்கியங்களைப் படைத்துத் தந்திருக்கிறார். திருவெங்கைக் கோவையில், தலைவனும் தலைவியும் உடன்போக்குச் செல்லும் துறையைப் பாடுகிறார், சுவாமிகள். அந்நேரத்தில் முன்னர் செல்லும் தலைவனின் கால்சுவடு, திருக்குறளில் நான்குசீர்கள் உள்ள முதல் அடியைப் போன்று நின்றிருக்கின்றன. அடுத்துவரும் மூன்று சீர்கள் உள்ள இரண்டாம் அடி, தலைவியினுடைய பாதச்சுவடு போன்று தோற்றமளிக்கின்றனவாம். அதேநேரத்தில் அச்சுவடுகளை, மானிட ஆண் பெண்ணினுடைய சுவடுகளாகப் பார்க்கவில்லை, சுவாமிகள். தம்முடைய தலைமீது வீற்றிருக்கின்ற மாதிருக்கும் பாதியானுடைய திருவடிச் சுவடுகளாகப் பார்க்கின்றார்.

அருட்பிரகாசராகிய சிவப்பிரகாசர், இக்கற்பனையில், நீண்டிருக்கும் ஆணடியிலும், குறுகி நிற்கும் பெண்ணடியிலும் தமிழ்ப் பண்பாட்டையே படம்பிடித்துக் காட்டுகிறார், அருட்கவிஞர். மேலும், அவ்வடிகளை உமாதேவி-சிவபெருமானுடைய பாதங்களாகப் பார்ப்பதால், சிவப்பிரகாசருடைய தூய துறவு வாழ்வும் தெரிய வருகின்றது. இன்னும் திருக்குறள்மீது நம் சுவாமிகள் வைத்திருக்கும் பற்றும் பாசமும் கூடத் தெரிய வருகின்றன. பாடல் வருமாறு;

என்னடிகள் வெண்குறள் நேரடி யிரண்டும்
என்தலையில் இருத்தும்இறை வெங்கை நாட்டில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னடிகள் இரண்டும் நெடிலடிகள், பின்னர்
முயங்கடிகள் இரண்டும் நேரடிகள் (திருவெ.கோ.42)

சிவப்பிரகாசர் கோவை இலக்கியத்தை - அகப்பொருள் இலக்கியத்தை, அனுமானத்தால் பாடுவதற்கும் திருவருள் துணைநின்றிருக்கிறது; துறவறத்தைப் பாடுவதற்கும் குருவருள் துணைநின்றிருக்கிறது. இரண்டாலும் வீரசைவம் பெருமை பெறுகின்றது.

அட்டாவரணம் - எண்வகைக் காப்பு

வீரசைவத் துறையில் அட்டாவரணத்தை அதன் ஆணிவேர் எனச் சொல்லலாம். வீரசைவர்களுக்கு ஐவகை ஒழுக்கம் முதற்படி. பஞ்சாசாரத்துக்குப் புதிய உயிர்ப்பாற்றலைக் கொடுத்து, அதைப் பல்லாற்றாலும் வளர்த்த பெருமை பசவருக்கு உண்டு. அதனாலேயே அவருக்குப் பஞ்சாசார மூர்த்தி - பிரம்மம் என்ற சிறப்புப் பெயருண்டு. அட்டாவரணம் இரண்டாம் படி. ஐவகையொழுக்கம் என்னும் முதற்படியில் நின்று வெற்றி எய்தியமையால், ஜீவன், ஆத்மன் ஆனான். அட்டாவரணத்தால் ஆத்மன் அங்கன் ஆனான்.

அஷ்டம் : ஆவரணம் எட்டுக் கோட்டைகள் என்று பொருள். கோட்டை என்பது தற்காப்புக்காக அமைக்கப் பெறுவது. வீரசைவருக்கு இந்த எட்டுக் கோட்டைகளும் தற்காப்புக்காக அமைக்கப்பட்டனவாகும். இந்த எட்டுக் கோட்டைகளும் கவசங்களாக இருந்து ஒருவருக்குத் தெரியாமல் வரும் தீமைகளைக் கூட அகற்றவல்லன ஆகும்.

ஐவகை ஒழுக்கத்தில் கிரியை மட்டும் மூலமாக நின்றது. இங்கே கிரியையும் ஞானமும் இணைகின்றன. ஐவகை ஒழுக்கம் அனைவருக்கும் பொதுவாகலாம். அட்டாவரணம் தான், வீரசைவர்கள் எனும் தனித்தன்மையை நல்கக் கூடிய சிறப்பு ஒழுக்கமாகும். ஐவகை ஒழுக்கத்தில் தொண்டு பேணிய வீரசைவன், தொண்டுக்காகத் தன்னையே தியாகம் செய்யவும் தயாராகும் நிலை, அட்டாவரணத்தால் உருவாகும். ஐவகை ஒழுக்கத்தையும், அட்டாவரணத்தையும் ஓம்புவதற்கு ஒருவருடைய உடல்தான் முதன்மையாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்த உடம்பில்தான் உயிரும் இறைவனும் குடியிருந்தாக வேண்டும்.

அதனைத் திருமூலர்,

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே. *(தி.மந்.724)*

என அதிஅற்புதமாக விளக்குகிறார். உடம்பினை வளர்த்தல் இருவகையாகும். உடம்பினுள் உள்ள தீமையை அழிக்க வேண்டும். உடம்பினுள் உள்ள நன்மையை மிகுவிக்க வேண்டும். இந்த இரண்டையும் ஒருங்கே செய்வதுதான், அட்டாவரணம் ஆகும். எண்வகைக் காப்பு என்பன; திருநீறு இலிங்கம், அக்கமணி, திருமந்திரம், குரு, இலிங்கம், சங்கமம், பாதோதகம், பிரசாதம் என்பன ஆகும்.

உடம்பை வளர்த்து, அதில் உயிரை வளர்த்து, அதில் இறைவனையும் எழுந்தருள்வித்த சிவானுபவத்தை மணி வாசகப் பெருமான் நைந்துருகப் பாடுகின்றார்.

தாம் ஐக்கியப்பட்டு நின்ற நிலையை,

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்நெடும் கோயிலாய்ப் புகுந்துஎன்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே! மாசிலா மணியே!
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்த நற்சோதீ!

எனத் திருவாசகம் 543ஆவது பாடலில் இயம்புகின்றார்.

1. திருநீறு

சிவசாதனங்களுள் திருநீறு தலையாயது. அதற்கு ஏன் முதலிடத்தைக் கொடுத்தார்கள் என்பதற்குச் சிவப்பிரகாசர் தரும் விளக்கம், அபூர்வமானது. தம்முடைய குருவானவர் தமக்குத் திருநீறே முதன்மையானது என அறிவுறுத்தியதாக,

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

"எந்தைசிவ சாதனங்கட் கெல்லாம் திருநீறு, முந்தியதென் றுண்மை மொழியும் பெருமானோ" எனத் தாலாட்டுப் பாடல் மூலம் மொழிகின்றார். மீண்டும் நெஞ்சுவிடு தூதில், சிவசாதனங்களுக்கும் திருநீறே முந்தியது என்பதை, **"முன்னொருநாள் சாதனத்துள் முந்து திருவெண்ணீறு, மன்னும் உயிரின்உறும் மாசு ஒழிக்கும்"** என்றவாறு எடுத்து மொழிகின்றார்.

சேக்கிழார், திருஞான சம்பந்தரின் அவதார நோக்கமே திருநீற்றின் பெருமையை இவ்வுலக உயிர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக என்பதனை, "தூய திருநீற்று நெறி எண்டி சையும் தனிநடப்ப, தாவில் சராசரங்கள் எல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரம் செய்தார்" எனும் பாடல் மூலம் இயம்புகின்றார். மேலும், திருநீற்றுப் பெருமையைத் திருக்கூட்ட மரபினரிடம் கேட்டுப் பெறாமல் போனமைக்காகச் சம்பந்தரின் தந்தையார், சிவபாதஇருதயர் கழிவிரக்கப்படுகிறார். "அரன் அடியார்பால் பூதி சாதன விளக்கம் போற்றல் பெறாது ஒழியக் கண்டு, ஏதமில் சிவபாதஇருதயர் தாம் இடருற்றார்" என்பது சேக்கிழாரின் வாக்குமூலம் ஆகும்.

அல்லமர் மேனி அழகுபெற்றது, திருநீற்றுப் பொலிவால் என்பதைச் சிவப்பிரகாசர், "பொடியணிந்து எழில் பொங்குறும் அல்லமர்" (பி.லீ.622) எனும் பாடல்வழி உணர்த்துகிறார்.

ஞானசம்பந்தர் திருநீற்றின் பெருமையைப் போற்றுவதற் காக ஒரு பதிகமே, திருஆலவாயில் நின்று பாடுகின்றார். கூன் பாண்டியனுக்குண்டான நோயை அஞ்செழுத்தை ஓதியும் திருநீற்றைப் பூசியுமே தீர்த்து வைப்பதால், நடைமுறையிலும் திருநீற்றுக்குரிய ஆற்றலைப் புலப்படுத்துகிறார் சம்பந்தர்.

திருநீறு முத்தி தருவதையும் பத்தி தருவதையும் சித்தி தருவதையும்,

முத்தி தருவது நீறு; முனிவர் மேலது நீறு
சத்திய மாவது நீறு; தக்கோர் புனைவது நீறு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பத்தி தருவது நீறு; பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு; திருவால வாயான் திருநீறே!

என்றவாறு அருளிச் செய்கிறார் திருஞானசம்பந்தர்.

நெற்றியில் திருவெண்ணீறு தரித்திருக்கும் சீலர்களைக் கண்டதும் உகந்து, அவர்கட்கு அடிமை பூண்டு, ஈசனின் அருள்திறத்தைப் போற்றி, அவ்வடியார்களுக்குத் தொண்டு செய்யும் அன்பர்களின் நெஞ்சினுள் கன்றாப்பூரில் மேவும் நடுதறி நாதரைக் காணலாம் என்பார் திருநாவுக்கரசர்.

எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே யவரவரைக் கண்டபோதே
உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமேபேணிக்
கவராதே தொழும்அடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே

என்பது அப்பரடிகளுடைய அருளிச்செயல்.

திருநீறு இம்மைப் பேற்றையும் மறுமைப் பேற்றையும் தருமாற்றைத் திருமூலர்,

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழுவாரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே

எனும் பாடலின் மூலம் விளம்புகிறார்.

மணிவாசகர் தாம் நோய்ப்பிணி, பிறப்பிறப்பு போன்றவற்றிற்கெல்லாம் பயப்படுவதில்லை என்றும், உலகில் திருநீறு அணிகில்லாதவரைக் கண்டால் மட்டுமே அஞ்சுவதாகவும் அச்சப்பத்தில்,

பிணியெலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துணிநிலா அணியி னான்றன்
தொழும்பரோ டழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்தும் காணா
சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே

என்று பாடிச் செல்கிறார்.

உடல்முழுவதும் திருநீறு பூசிக்கொண்டு, அஞ்செழுத்து மந்திரத்தை ஓதாதவர்களைக் கூற்றுவன் அச்சுறுத்துவான். இதனைச் சிவப்பிரகாசர்,

நிந்தியாது உடலம் முழுவதும் நீறுஅணிய
நேசியாது அமலஐந்து எழுத்தும்
சிந்தியாது உழலும் எனைக்கொடுங் கூற்றுஎன் செய்யுமோ

எனச் சோணசைல மாலையில் (83) பாடுகின்றார்.

பல பெருமைகளையுடைய விபூதி, ஐந்து வகைப்படும்.

விபூதி	:	**கருதிய பெருஞ்செல்வத்தைத் தரும்.**
பசிதம்	:	**பரசிவப் பொருளை விளக்கும்.**
பசுமம்	:	**பாவங்களைச் சுட்டெரிக்கும்**
சாரம்	:	**துன்பங்களை நீக்கும்.**
இரட்சை	:	**தீமைகளை அணுகாமல் காக்கும்.**

தமிழில் திருநீறு, காப்பு, மருந்து என்ற திருப்பெயர்கள் வழங்கப் பெறுகின்றன. விபூதியைத் தரிக்கும் முறையில் வீரசைவர்களுக்குத் தனிமரபு உண்டு. நெற்றியில் மட்டுமே இவ்வேறுபாடு கொள்ளப் பெறுகிறது. திருநீற்றைத் தண்ணீரில் குழைத்துத் திரிபுண்டரமாகவும் (மூன்று கோடுகள்) தண்ணீரில்லாமலும் (தூளாகப் பூசுதல்) தரிக்கலாம்.

திரிபுண்டமாகத் தரிக்கும்போது வலக்கையில் சுண்டுவிரல் கட்டைவிரல் நீங்கலாக உள்ள நடுவிரல்கள் மூன்றையும் ஒரேயளவில் வைத்து நெற்றியின் இடப்பக்கப் புருவ எல்லை தொடங்கி, வலப்பக்கப் புருவ எல்லைவரை இழுத்தல் வேண்டும். இரண்டு கடைப்புருவ எல்லையைக் கடக்கவும் கூடாது; குறைக்கவும் கூடாது; இது பொது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீரசைவர்கள் நடுவிரல் அதற்குப் பக்கத்தில் உள்ள மோதிர விரல் என்ற இரண்டாலும், இடப்பக்கப் புருவஎல்லை தொடங்கி வலப்பக்கப் புருவஎல்லைவரை இரண்டு கோடுகள் இழுத்தல் வேண்டும். வலப்பக்கப் புருவ எல்லை தொடங்கி இடப்பக்கப் புருவ எல்லைவரையில் கட்டை விரலை இழுத்து, தொடங்கிய இடத்திலேயே கொண்டு போய் நிறுத்தி விட வேண்டும். இது வீரசைவ முறை.

2. உருத்திராக்கம்

இது அடியார்க்கு இரண்டாவது கோட்டை அல்லது கவசம் எனலாம். இதனை அக்கமணி என்றும் கண்டிகை என்றும் கூறுவார்கள். சேக்கிழார், சிவஞானியர்க்குரிய முதல் இலக்கணமே ஆரம் கண்டிகை என்பார். ஒரு கற்புடைய மங்கைக்கு மங்கலநாண் எவ்வளவு இன்றியமையாததோ, அதுபோன்று சிவஞானியர்க்கு உருத்திராக்கம். சிவபெருமான் திரிபுரங்களைஎரித்தபோது திரிபுராதிகள்எரிந்து அழியும்போது, இறைவனது திருக்கண்களில் இருந்து இரக்கம் காரணமாகக் கண்ணீர் சிந்தியது; அக்கண்ணீரின் வடிவமே உருத்திராக்கம் என்பர். உருத்திரனுடைய அக்கம் கண் இதனால் அக்கமணி ஆயிற்று.

சிவப்பிரகாசர், சித்தாந்த சிகாமணி என்னும் நூலில் (183)

புரங்கள் மூன்றும் பொடித்து றுங்கால் அரண்
திரங்கொள் நாட்டம் திறப்பப் பல்துளி
பரந்த அன்னவற் றிற்படு பன்மணி
வரங்கொள் அக்க மணிஎன ஓதுவார்

என்றவாறு புகலுவார்.

மற்றும் சிவப்பிரகாசர், எந்தக் குலத்தவரும் உருத்திராக்கம் அணியப் பெற்றால், அவர்கள் பழவினைகளை எல்லாம் பாறுவர் என்பதை,

அந்தணக்குலத்து உதித்தவன் ஆயினும் அன்றி
நிந்தனைப்புலைப் பிறப்பினன் ஆயினும் புலமை
சிந்தும் முற்பவம் அனைத்தையும் சிவன்மணி தரிப்போன்

Digitization by Hindu-Heritage-Foundation of America; HHFA(USA)

எனும் சித்தாந்த சிகாமணி (பாடல்194) மூலம் விளக்குகின்றார். மேலும் சிவப்பிரகாசர் "உருத்திராக்க தாரணம்" எனும் அதிகாரத்தில், எப்படி எப்படி எல்லாம் உருத்திராக்கத்தை அணிய வேண்டும், என்பதைப் படிப்படியாய் எடுத்து விளக்குகிறார்.

அக்கமணியில் மின்சார ஆற்றல் இருப்பதால், மருந்துடன் சேர்த்து உண்டால், அதிதாகம், திரிதோஷம், விக்கல், பித்தரோகம், சிலேத்துமம் முதலிய நோய்கள் நீங்கும் என்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன. நீராடும்போது அக்கமணியில் பட்டு, படும் நீர் கங்கை எனக் கருதப்படுகிறது. உருத்திராக்கத்தை இரவு முழுதும் தண்ணீரில் போட்டிருந்து, காலையில் அத்தண்ணீரைக் குடித்தால், இரத்தஅழுத்த நோய் குறைகிறது என்பார் மருத்துவநூல் ஆய்வாளர். உருத்திராக்கம் ஒன்று முதல் 14 வரையில் முகங்கள் உள்ளதாக இருக்கிறது. ஆறுமுக உருத்திராக்கமே, சிறந்து பொன்மயமாக இருப்பது நல்லது. பூத அணுக்களால் அமைந்த இவ்வுடல் அருளுடலாக மாறுவதற்கு அக்கமணி துணை செய்கிறது. அதனால் சிவப்பிரகாசர், "திருவளர் கண்டி வாழ்க" என்றார்.

வீரசைவருக்கு அக்கமணி அவசியம் என்று ஆகம நூல்கள் வற்புறுத்துகின்றன. இதனைச் சிவப்பிரகாசர்,

நீற்றின் மூழ்க நல்நெற்றியில் புண்டரத்
தோற்ற ஈசனைத் தொண்டில் அர்ச்சிப்பவன்
போற்றி அக்கமணியும் புனைக என்று
ஆற்றல் மிக்கு உயர்ஆகமம் ஓதுமால். *(சி.சி.183)*

3. மந்திரம்

அட்டாவரணத்தில், அடுத்து இடம் பெறுவது மந்திரம்.

மந்திரம் என்ற சொல்லிற்கு, நினைப்பவரைக் காப்பது, என்பது பொருளாகும். தொல்காப்பியர், "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" என்று, தமக்கு மேலுள்ளவர்களால் மொழியப்பட்டது என்னும் பொருளில் நவின்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

திருவள்ளுவர் **"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்"** எனும் குறள்வழி இசைக்கின்றார்.

வேதங்களைக் காட்டிலும் உயர்ந்தது சிவாயநம அல்லது நமசிவாய எனும் மந்திரம் என்பதனை,

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

எனும் பாடல்வழி அருளிச் செய்திருக்கின்றார் திருஞான சம்பந்தர். கையில் அக்கமணி மாலையை எண்ணிக் கொண்டு, நமசிவாய மந்திரத்தை உச்சரிப்பவர், வானவராகும் தகுதி யுடையவராவர் என்பதனை,

நெக்குள் ஆர்வம் மிகப்பெருகிந் நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவர்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே

என்றவாறு அருளிப் போந்தார் சம்பந்தப் பெருமான்.

திருநாவுக்கரசர், வெந்தழலில் போட்டாலும் நமச்சிவாயவே எனும் மந்திரம் காக்கும் என்பதை,

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்றுஅறுப்பது நமச்சிவாயவே

என்றவாறு அருளினார். இன்னும், சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

விரும்பி நின்மலர்ப் பாதமே நினைந்தேன்
விரும்பனே! உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே

என நமச்சிவாய மந்திரத்தின் அருமை பெருமைகளை எடுத்தியம்புகின்றார்.

மணிவாசகர் சிவாயநம மந்திரத்தை ஓதியே தாம் பெறற்கரிய பேறு பெற்றமையை,

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை ஒறுத்துஅன்றே வெறுத்திடவே

என்று திருவாசகத்தின்வழி எடுத்துரைக்கின்றார்.

இருக்கின்ற மந்திரங்கள் அனைத்தும் சிவன் திருமேனியைக் குறிப்பனவாகும் என்பதைத் திருமூலர்,

இருக்கின்ற மந்திர மேழா யிரமாம்
இருக்கின்ற மந்திர மெத்திறம் இல்லை
இருக்கின்ற மந்திரம் சிவன்திரு மேனி
இருக்கின்ற மந்திரம் இவ்வண்ணந் தானே (திரு.4-17)

எனக் கூறிப் போந்தார்.

நமசிவாய என்னும் திருவைந்தெழுத்து, தூலபஞ்சாட்சரம் என்பதாகும். பிரணவ எழுத்தை முன்சேர்த்துத் தூல பஞ் சாட்சரத்தை ஓதுவது முறை என்று சாத்திரங்கள் சாற்றுகின்றன.

நமசிவாய மந்திரத்தை நாளும் ஓதினால், சிவபெருமானைப் பாதாதிகேசம் வழிபட்டதாகப் பொருள் என்பதைக் கீழ்வரும் பாடல் உணர்த்தும்.

ஆடும் படிகேள் நல்அம் பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம் - கூடு
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வா முடியப் பார்

ந- திருவடி
ம- உதரம்
சி- தோள்
வா- முகம்
ய- முடி

இது, பிரணவ சொரூபியாகிய அம்பலக்கூத்தனைத் திருவைந்தெழுத்தின் வாயிலாகப் பாதாதி கேசமாக ஏத்திய தாகப் பொருள் ஆயிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் நமசிவாய என்னும் மந்திரத்திற்கு முன் வேத வேதாந்தங்கள் அனைத்தும் திகைத்து நிற்கின்றன என்பதைப் பசவர்,

ஓம்நமச் சிவாய எனும்மந் திரத்தால்
வேதம் தர்க்கம் பிரமைகொண் டிருந்தது
ஓம்எனும் பொருளை உணரமுடி யாமல்
உயர்ந்த மந்திர தந்திரம் திகைத்தன;
சிவபதம் கிடைக்கும் வழியறி யாமல்
சிந்தை கவன்றது உலகம் அனைத்தும்
தவவலி சங்கமன் கீழ்குலத் தோனை
விரும்பிடின் சாதி பேதமும் இல்லையே

எனப் பாடிச் சென்றார்.

மேலும் நமசிவாய மந்திரம் எந்தக் காலத்திலும் மாறாதது; கயிலையில் வரையப் பெற்றது. இன்னும் அது, தன் நெற்றியிலும் தலையிலும் எழுதப்பட்ட எழுத்தென்பதைப் பசவர்,

நமச்சி வாய நமச்சி வாய
நமச்சி வாய சரணமென் றிருந்தது
சிமைய நெற்றியில் வரைந்த எழுத்து
சிறிதும் மாற்றி எழுதமுடி யாது
அமைந்தஎன் மார்பில் பொறித்தமுத் திரையில்
அரிய தலையில் எழுதிய எழுத்தில்
நமையாள் கூடல சங்கமத் தேவென
நன்றே இருந்தது; காண்பாய் அய்யா

எனும் பாடல் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

சிவப்பிரகாசர் ஏழுகோடி மந்திரங்களிலும் நமச்சிவாய மந்திரம் சிறந்து என்பதை,

வேதன் ஆதியாம் விண்ணவர் குழாத்தினுள் விளங்கும்
பாதி வான்மதி முடியுடைப் பரமனே போலப்
பேதமாம் எழுகோடி மந்திரங்களில் பெரிதாம்
போத ஐந்தெழுத்து ஆகிய புனிதமந்திரமே ***(சித்.சிகா.203)***

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

என்றருளிப் போந்தார். அடுத்து, நமசிவாய மந்திரத்தை முன்னர் ஓதிப் பின்னர் சிவாயநம மந்திரத்தை ஓதவேண்டும் என்பதை,

முன்னர் ஓதுக நமவென விளம்புறும் மொழியைப்
பின்னர் ஓதுக சிவாயஎன்று இங்ஙனம் பிறங்கும்
அன்ன அஞ்செழுத்து ஆகிய மந்திர அரசைப்
மன்ன ரும்செழு மறைகளின் முடியெலாம் பரிக்கும்

(சித்.சிகா.206)

எனும் பாடல்வழி இயம்பியுள்ளார்.

நமச்சிவாயப் பதிகம் பாடிய அப்பரடிகள் கல்லைத் தெப்பமாகக் கொண்டு கரையேறினார். பிறவி என்னும் கடலில் ஆணவம், கன்மம், மாயை, என்னும் முக்கற்களை நல்வினை, தீவினை என்னும் இரண்டு கயிற்றால் உயிர்களைக் கட்டிப் போட்டபோது, திருவைந்தெழுத்தை ஓதி உய்தி பெற்றார்.

எந்தச் சூழ்நிலையிலும் நமச்சிவாய மந்திரத்தை மறந்து விடக் கூடாது என்பதை வள்ளற் பெருமான்,

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே

என உள்ளம் உருகிப் பாடுகின்றார்.

சிவப்பிரகாசர், சிவஞானிகளுக்கு மந்திரங்கள் அருமருந்தாய் இருப்பதை,

வேதம் ஆகமம் வேறும் பலப்பல
ஓதி நாளும் உளந்தடு மாறன்மின்
சோதி காணிருள் போலத் தொலைந்திடும்

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

தீதே வாழுஞ் சிவசிவ என்மினே **(சிவ.மகி.1)**

என்பதன் மூலம் இயம்புகின்றார்.

சிவப்பிரகாசர், சிவஞானபாலய சுவாமிகள் பிள்ளைத் தமிழ் நூலில், "அருந்தும் அமுதின் இனியதாய்" எனத் தொடங்கும் முத்தப் பருவப் பாடலில், ஐந்தெழுத்தின் பண்பு, செய்யும் நலன்கள், ஆற்றல் முதலியவற்றைப் போற்றிப் புகழ்ந்து பாடி, "பரந்த புகழ் மந்திர வேந்து" என்று வழுத்தியிருப்பது அழுத்தமாக எண்ணத்தக்கதாகும்.

நமசிவாய மந்திரத்தை ஒலிக்க ஒலிக்கப் பாவங்கள் நீங்கும். பிறப்பு அறும் என்பதைத் திருமூலர்,

நமஎன்னும் நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவஎன்னும் நாமத்தைச் சிந்தையுள் ஏற்றப்
பவமது தீரும் பரிசுமது அற்றால்
அவமதி தீரும் அறும்பிறப் பன்றோ **(திருமந்.2717)**

என்பதாக அருளிச் செய்துள்ளார்.

அட்டாவரணத்துள் ஒன்றாகிய மந்திரம் இவ்வாறாகப் பல ஞானியர்களால் பரக்கப் பேசப்பட்டிருக்கிறது.

4. குரு

எண்வகைக் காப்பினுக்கும், குருவுக்கே முதலிடம் தருவது, அனைத்துச் சைவ நெறியினர்க்கும் உடன்பாடான ஒன்றாகும். அடியார்களுக்குச் செம்பொருட்காட்சியை வழங்கும் தந்தையே குரு! அகக்கண்ணைத் திறக்கும் அருள்தந்தை குரு. உலகத்தை உய்விப்பதற்காகவே இறைவன் கொள்ளும் உருவம் அனைத்துமே குரு இலிங்க சங்கமத்துள் அடங்கும். அஞ்ஞான இழிவைத் தம் சிவஞானத்தால் ஒழிப்பவர் குரு. குணம்- குறி உண்டாக்கிக் கொண்டு தோன்றிக், குணங்குறி கடந்த பரம்பொருளை உணர்த்துபவர் குரு.

இரேணுசித்தர் இதனை,

நூல்பலவும் உணர்ந்திடினும் சமய வாதம்
நுவன்றுநிரா கரித்திடினும் தவம்செய் தாலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. (HHFA USA)

மால்அகலா மலமூன்றும் அகலாதா ராயின்
மருவுவார்கள் பரகதிமும் மலம்போ மாறும்
சீலமும் குருவருளால் மாயை நீங்கும்
சிவார்ச்சனையால் மூலமலம் சிதைந்து நீங்கும்
கோலமிரு வினைத்துயரம் சங்கமத்தால் நீங்கும்
கூறுமுதல் மூன்றையும் மெய்யன்பாற் கொள்ளே

என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்.

குருவருளால் திருவருளை எளிதாகப் பெறமுடியும் என்பதைச் சிவப்பிரகாசர், "அருவாய் உருவமும் ஆம்வெங்கை வாணர் அரும்பதத்தைக் குருவால் அடைபவர்" எனும் திருவெங்கைக் கோவை (72) வழி உணர்த்துகின்றார்.

குருவானவர் மூன்றுவகையான தீட்சைகளைச் செய்வார். அவை முறையே வேதாதீட்சை, மந்திர தீட்சை, கிரியா தீட்சை எனப்படும். வேதாதீட்சை என்பது குருவானவர் தம் சீடர்களைத் தம் அருட்பார்வையால், அவர்களிடம் பொதிந்து கிடக்கும் சிவம் விளங்கச் செய்ய வேண்டும். அடுத்துத் தம்முடைய திருக்கரங்களைச் சீடர்கள் சிரத்தின் மேல் (ஞானதீட்சை) வைத்து அவர்களுடைய உடம்பிலுள்ள பௌதிக அணுத்தன்மையை மாற்ற வேண்டும். வேதா என்றால் வேதித்தல், மாற்றுதல் என்று பொருள். பால் வைப்பதற்கு முன்னால், பால் பாத்திரத்தைக் கழுவி, சூரிய ஒளியால் தூய்மைப்படுத்தல் போன்றதொரு நெறி இதுவாகும்.

கதிரவன் ஒளியால் பொருட்களைப் புலப்படுத்துதல் போல, குருநாதரின் கடைக்கண் பார்வையால் சீடரின் ஆன்மாவில் சிவம் விளங்கச் செய்தல் வேண்டும். உடலில் அதற்கேற்ற மாற்றம் நிகழ்வதற்காகத் தொட்டுச் செய்யும் (ஸ்பரிசதீட்சை) தீட்சையும் தேவை.

மந்திர தீட்சை

சீடர்களின் செவிகளில் மந்திர மொழிகளைக் கூறி, ஓர் இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தல். கிரியாதீட்சை என்பது, வேதா தீட்சைக்கும் மந்திர தீட்சைக்கும் முன்னும் பின்னுமாகச் சில கிரியைகளோடு நடத்தி வைப்பதாகும். சீடர்களுக்கு

Digitized by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

முன்னால் ஐந்து கலசங்கள் வைத்து அதில் உள்ள நறுநீரால் - மந்திரத்தால் பஞ்சாசாரியார்களை ஆவாகனம் செய்து, அக்கலசநீரைச் சீடனுக்கு அபிடேகம் செய்தல் ஆகும்.

மாணிக்கவாசகரைச் சிவபெருமான் குருவாக வந்துதான், திருப்பெருந்துறையில் ஆட்கொண்டார். அருணகிரிநாதரையும் முருகப்பெருமான் குருவாக வந்துதான் ஆட்கொண்டார். **(அமுதமொழி கொடு தவநிலை அருளிய பெரிய குணதரர் உரை செய்த மொழிவகை அடைவு நடைபடி பயிலவும் முயலவும்**- திருப்புகழ்)

சிவனே குருவாய் வந்து அருள்செய்ததால், குருவே சிவன் என்பதைத் திருமூலர்,

குருவே சிவம்எனக் கூறினன் நந்தி
குருவே சிவம்என் பதுகுறித் துஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரைஉணர்வு அற்றதோர் கோவே. ***(தி.மந்.1581)***

என்றவாறு உணர்த்துகின்றார்.

ஓர் ஆலமரத்தினுடைய இலை, கிளை, பூ, பழம் எல்லாம் மண்ணில் ஊன்றப்படுகின்ற ஓர் ஆலம் விதைக்குள் இருப்பதுபோல், இவ்வுலகம் அனைத்தும் குருவின் இதயத்திற் குள் இருக்கும்.

மரம டுத்துள்ள பாசிலை மலர்முத லனவோர்
தரைய டுத்துள வித்தினிய அடங்குறுந் தகைபோற்
பரவு மிச்சக மியாவுமோர் பரமநல் யோகி
யிருத யத்தனி வித்தினி லடங்குமென் றிசைப்போர்
(சி.சி.7)

கன்னடத்தில் பசவர் பிறந்தவுடனேயே சிவன், ஜாதவேத முனிவர் வடிவில் வந்து, குழந்தை அருள்மிகு நந்திதேவரின் அவதாரம் என்றும், அக்குழந்தைக்குப் பசவன் என்ற பெயரிட்டுக் குழந்தையின் காதில் ஓம் நமச்சிவாய மந்திரத்தை ஓதினாராம். அப்பொழுது பசவண்ணரின் ஞானமே அவர் திருவாயில் லிங்கமாக வந்து, இட்டலிங்க தீட்சையைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தனக்குத்தானே அக்குழந்தை பெற்றுக் கொண்டதாம்.

பானை வனைவதற்கு எவ்வாறு மண் தேவையோ, அணிகலன்கள் செய்வதற்கு எவ்வாறு பொன் தேவையோ, அதுபோலவே சிவனைக் காண்பதற்குக் குருதேவை என்பதைப் பசவர்,

பானை வனைய மண்ணே முதலாம்
பகரும் அணிசெயப் பொன்னே முதலாம்
வானுறு சிவபதம் தன்னை அறிய
வள்ளல் குருவடி தானே முதலாம்
தேனினும் இனியநல் கூடல சங்கனைத்
தெரிந்திட சரணரின் சங்கமே முதலாம்
ஊனின் உள்ளொளி தந்தவா
உண்மையே கூடல சங்கமத் தேவா!

எனப் பகன்றார்.

சிவப்பிரகாசர் தமக்கும் ஆதி சிவஞானபாலய சுவாமிகளுக் கும் உள்ள உறவைக் கொண்டு

அருவாகி நின்றசச்சி தானந்த ஈசன்
குருவாகித் தன்னைக் கொடுக்குமெனச் சொன்னானோ

(சிவ.தா.76)

என மொழிகின்றார். மேலும் தம்மை வணங்கி நிற்கும் மாணாக்கனைக் குருவானவர் தீட்சை கொடுத்து, அவனுடைய பிறவிப் பிணியை அறுப்பார் என்பதைச் சிவப்பிரகாசர்,

புனித மாணாக்கன் இன்ன புகன்று அருள் இரந்து நிற்ப
அனையவன் தனது சத்தி பாதம்உற்று அறிந்து பின்னர்
வினைதபு தீக்கை யோடு மேவுவித்து அருள்வன் என்ப
தனிவரு பரமா நந்த தத்துவக் குருவன் அன்றே

(சித்.சிகா.123)

என விளக்குகின்றார்.

குருவருளை வெகுசிறப்பாகப் பாடியவர், சிவப்பிரகாசர். அல்லம தேவர் குருவருளைப் பெற்ற திறத்தை ஓர் அருமையான உவமை மூலம் விளக்குகின்றார். கண்ணாடி

Digitization by Hindu Heritage Foundation of America (HHFA)(USA)

முன் நின்று ஒருவர் தன் முகத்தினைக் காணுமாறு போல, அல்லமர் குருவருளை முற்றாகப் பெற்றார் என்பதை,

ஆடியொன்றெதிர் கொண்டுதம்ஆன னம்தெரிவார்கள்போல்
கூடியொண்குரு வெதிர்கொடு கொண்டு தன்பெரு விஞ்சைகள்
நாடியொண்கலை கற்றல்போ னாடகம்பல செய்தனன்
பீடுறும்பழ மறைகளும் பேசரும்புகழா ளனே ***(பி.லீ.348)***

எனுமாறு பகர்வர்.

இவ்வாறாகக் குரு அட்டாவரணத்துள் முதன்மை இடம் பெறுகிறார்.

5. இலிங்கம்

எண்வகைக் காப்பினுள் குறிக்கப் பெறும் இலிங்கம், இஷ்டலிங்கம் ஆகும். ஒரு குழந்தை தாய்வயிற்றில் இருக்கும்போதே, அந்தக் குழந்தைக்கான ஓர் இலிங்கத்தைத் தாய் தரித்துக் கொள்ளவேண்டும். இதற்குக்கர்ப்பலிங்கதாரணம் என்பது பெயர்.

குழந்தை பிறந்ததும் தாயணிந்திருக்கும் இலிங்கத்தைக் கழற்றிக் குழந்தைக்கு அணிவிக்க வேண்டும். பின்னர் ஏழாம் ஆண்டிலோ, ஒன்பதாம் ஆண்டிலோ ஒரு குருவை அழைத்து, முறைப்படி இஷ்டலிங்கதாரணம் நிகழ்த்துதல் வேண்டும். 'இஷ்டி என்றால் பார்த்தல்' என்று பொருள். இஷ்டலிங்கம் உள்ளே ஆறு ஆதாரங்களிலும் அமைந்திருக்கும் இலிங்கக் கலைகளையும் இணைத்துச் சீடர்கள் நேராகப் பார்த்துக் கொள்ளவும், பின்னர் பூசித்துப் பாவனை செய்யவும் குருவானவர், கருணைகொண்டு ஆக்கிக்கொடுத்த இலிங்கம், இஷ்டலிங்கம் ஆகும்.

இட்டலிங்கத்துக்குள்ளிருக்கும் சிவ கலையானது ஐந்து பகுதிகளைக் கொண்டதாக இருக்கும். ஒருவர் பிராண பாவலிங்கங்களை அறியும் பக்குவம் உடையவர்களாக இருப்பினும், அவைகளுக்கு ஆதாரமான இஷ்டலிங்க தாரணம் செய்யாமல் இருக்கக் கூடாது. திருமணக் காலத்தில் மணமகன் கையில் மணமகளின் கையை வைத்து,

Digitization by Hindu Heritage Foundation of America (HHFA)(USA)

"உன்கையில் பெண் உனக்கே அடைக்கலம்" என்போம். அடைக்கலமாகக் கொடுத்துவிட்டபடியால், யாருக்கு அடைக்கலமாகக் கொடுத்தார்களோ, அவனே கணவன். அவனே கையில் எழுந்தருளியிருக்கும் இஷ்டலிங்கம். எனவே, இஷ்டலிங்கத்தைப் பதியாகவும், தன்னைச் சதியாகவும் எண்ணிக் கொள்ள வேண்டும்.

பதியானவன் சதியை ஒரு பொருளாகவேனும் மதிக்க வேண்டிய அவசியமில்லை. தான் ஒரு பொருள். ஒரு பொருளை எப்படியாயினும் மாற்ற, அழிக்க, பொருளை உடையானுக்கு உரிமை உண்டு. அதுவே சதிபதி நிலைமை.

கற்புத்தன்மை சதிக்குத்தானே ஒழிய பதிக்கு இல்லை. எனவே, இஷ்டலிங்கம் பதி,சீடன்,சத் எனத் தன்னை நினைத்துப் பணிவிடை செய்தல் வேண்டும். இஷ்டலிங்கம் எந்த வகையில் செய்யப்பட்டிருந்தாலும், தீட்சை தருபவர் முதலில் தம்முடைய தவவலிமையாலும் மந்திரத்தாலும் அதனை அபிடேக ஆராதனைகளால் சுத்திகரிக்க வேண்டும். பின்னர் தம்முடைய தவவலிமையாலும் இஷ்டலிங்க பூசைத் திறத்தாலும், கலையை முதலில் அதில் நிறுவுதல் வேண்டும்.

பின்னர் சீடனுடைய பிராணனைக் கொண்டு வந்து அச்சிவலிங்கத்தில் மீளவும் இணைத்தல் வேண்டும். சிவகலையை அவன் பிராணனில் முதலில் நிறுவவேண்டும். பின்னர் இட்டலிங்கத்தைச் சீடர் உடலில் தரிப்பார். இட்டலிங்கம் என்பதைத் தனது உயிரும் சிவனும் கூடியிருக்கும் இணைப்பு என நினைத்தல் வேண்டும். அதனை உடம்பிலிருந்து பிரிக்கக் கூடாது. காரணம், சீடனுடைய உயிரே அங்குதான் இருக்கின்றது.

குரு சீடனுடலில் இட்டலிங்கத்தைத் தரிக்கும்போது, அது அவனுடைய தூலதேகத்தில், பருவுடலில் கன்மமல நீக்கத்திற்காகத் தரிக்கப் பெறுகிறது. அதேசமயத்தில் சூக்கும தேகத்தில் நுண்ணுடலில் மாயா மல நீக்கத்துக்காகப் பிராணலிங்கம் தரிக்கப் பெறுகின்றது. நுண்ணுடம்புக்கு அடிப்படையாக அமைந்துள்ள காரண உடம்பில், ஆணவ

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

மல நீக்கத்துக்காக, பாவலிங்கம் தாபிக்கப்படுகிறது. சீடன் இட்டலிங்கத்தைப் பார்க்கும்போதே, அதன்மூலம் பிராணலிங்கத்தையும், அதன்மூலம் பாவனையில் அமைக்கப் பெறும் பாவலிங்கத்தையும் பார்த்தல் வேண்டும்.

காக்கையின் இருகண்களிலும் ஒருமணியே திரிந்து அனைத்தையும் தெரிந்து கொள்ளுதல் போல, இட்டலிங்கமே அகமும் புறமும் திரிந்து அனைத்தையும் தெரிவிக்கும். சீடன் உடலிலுள்ள இட்டலிங்கம், அவனுடைய ஆறு ஆதாரங் களிலும் அமைந்துள்ள ஆறு இலிங்கங்களையும் சென்று பொருந்தும். ஐம்புலன்களையும் அடைந்து அங்குள்ள நுகர்ச்சிகளை அறியும். எனவே, இட்டலிங்கமே அனைத்தும். சீடன் இட்ட லிங்கத்தின் மூலமாகத்தான், எல்லாத் தொடர்புகளையும் பெற முடியும்.

இட்டலிங்கத்தைப் பூசை செய்யும்போது, சில விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். பஞ்சப்பிரமமாக சொல்லப்பட்ட அமைப்பில், சிவகலையுடன் சீவனாகிய உயிரையும் இணைத்து அதன்மீது அட்டபந்தனம் செய்து கொடுக்கப்பட்டது என்பதை நினைவில் இருத்தல் வேண்டும். குருவானவர் இன்று இட்டலிங்கமாக அமைத்து, அகக்கண்ணையும் திறந்துள்ளார் என்பதை இணைத்துக் காண வேண்டும்.

இட்டலிங்கம் ஒரு பெரும் ஒளிக்கற்றை. அத்துடன் மாசு தீர்க்கும் திருநீறு, உருத்திராக்கம் ஆகியவற்றை அணிந்திருக்கும் வீரசைவன், இயல்பிலேயே தூய்மையுடையவன் ஆகிறான். ஒளிக்கற்றை விளங்கும் இட்டலிங்கம், அவனுடைய தீமைகளையும் அழுக்குகளையும் நீக்கும் ஆற்றல் வாய்ந்தது. அவனுக்கு ஐவகைத் தீட்டு இல்லை. வீரசைவனுக்குச் சாதிப் பாகுபாடும் கிடையாது.

இட்டலிங்கத்தின் உயர்வைத் தமக்குத் தம்குருநாதர் உரைத்த திறத்தைச் சிவப்பிரகாசர்,

நண்பாகும் இட்டலிங்கம் நன்றாம் பிராணலிங்கம்
ஒண்பாவ லிங்கமாம் ஓர்பொருள் இங்கு என்றானோ

(சிவ.தா.4)

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA)(USA)

எனவும்,

> அநிட்ட நன்றகற்றி இட்ட நன்குதவி என்கரத்திருக்கும்
> ஈசனே மாசிலா மணியே (இட்.நெடு.நெ.4)

எனவும் பாடுவார்.

பிறிதோர் இடத்தில், இட்டலிங்கத்தின் எளிமையையும் பெருமையையும் கண்டு வியந்து நிற்கிறார் சிவப்பிரகாசர். எங்கும் நிறைந்து, எல்லாம் ஆகிநிற்கும் இறைவன் குடிபுகுவதற்கு எத்தனையோ பெரிய கோயில்கள் இருந்த போதிலும், என் அங்கையில் வீற்றிருப்பதற்கு என்ன மாதவம் செய்தேனோ எனப் பாடி, இட்டலிங்கத்தின் சிறப்பை உயர்த்து கின்றார். பாடல் வருமாறு;

> **தன்னை ஓர்பொழுது இறைஞ்சுவான் கருதி இத்தரைமேல்**
> **மன்னும் ஆலயம் யாண்டுளது என அலமராமல்**
> **பொன்அலர் மலர்ச்சடை யுடைப்புனிதன் வீற்றிருப்ப**
> **என்ன மாதவம் செய்ததோ? எனது கைத்தலமே**
> (இட்டலிங்கக் கைத்தல மாலை-10)

இட்டலிங்கத்தின் அருமையைத் தம் குருநாதர் எப்படிப் போற்றியிருப்பார் என்பதை யூகித்த சிவப்பிரகாசர்,

> **பரம சிவமெனவும் பண்டைமறை போற்றும்**
> **பிரமம்என வும்பேர் பெறும்இலிங்கம் என்றானோ**
> (சிவ.தா.77)

எனப் பதிலையும் தருகின்றார்.

இன்னும், இட்டலிங்கம் புண்ணியம் அனைத்திற்கும் புகலிடமாகி நிற்கும் விந்தையை வியந்த சிவப்பிரகாசர்,

> **புண்ணியம் அனைத்தி னுக்கும் புகலிடம் ஆகிநின்றுஆங்கு**
> **எண்ணரும் பவம்அ கற்றும் இலிங்கதா ரணம்அதுஎன்று**
> **கண்ணுதல் அருளிச் செய்த காமிகா திகளை ஓர்ந்த**
> **நுண்ணுவார் வுடைய எல்லா முனிகளும் நுவல்வர் அன்றே**
> (சித்.சிகா.135)

என அருளிப் போந்தார்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

இட்டலிங்கத்தின் மகிமையைத் தொடர்ந்து பாடவந்த சிவப்பிரகாசர், "ஈசனே! உனக்கு உருவம் இல்லை. அருவம் இல்லை. அருவுருவும் இல்லை. அப்படிப்பட்ட நீ என் கைத்தலத்தில் இருக்கும் மூன்று இலிங்கங்களுக்குரிய உருவம், சுவை, நிறைவு ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு என் உடலோடு இருப்பது என்ன விந்தை" என்றியம்புகின்றார்.

பாடல் வருமாறு,

உருவம் சுவைநிறைவு ஆகிய மூன்றும் உவந்து கொண்டு
மருவுஅங்கம் உள்ளம் உருஅக லாதுஉள்ள வாறுநின்றாய்
அருஅன்று உருஅன்று அருஉருஅன்றி அறிவுஉருவாய்க்
கருஅன்று உலகம் படைத்துஆடும் என்கைக் கறைக் கண்டனே

(இட்.நிர.மா.29)

இட்டலிங்கம் என்பது சாதாரண மனிதர்களுக்குக் கைகூடாதது. பல பிறவிகளில் புண்ணியம் செய்தவர்களுக்குத் தாம் அப்பேறு வாய்க்கும் என்றும்; அவ்வாறு இட்டலிங்கத்தை அங்கையிலே ஏற்பவனே உண்மையான பக்தன் என்றும் கூறவந்த சிவப்பிரகாசர்,

புண்ணிய முதிர்வினால் பொருந்தி அங்கையில்
கண்ணுற நிகழ்வுறு சிவலிங்கத்தினை
எண்ணிய மனமுடன் என்றும் வந்தனை
பண்ணிய முயல்பவன் பத்தன் என்பவே *(பிரபு.808)*

என்றருளுகின்றார்.

சிவப்பிரகாசர் இட்டலிங்கத்தில் உள்ளத்தைப் பறி கொடுத்தது போல், 12ஆம் நூற்றாண்டில் பசவர் நைந்துருகுகின்றார்.

அங்கையில் உள்ளதோர் இலிங்கம் பார்த்தே
ஆழ நினைந்து கண்ணீர் சொரிந்து
பொங்கும் அன்பினுள் பூரித் திருந்து
பார்த்த பார்வையே உயிராய் இருந்துஎன்
அங்க அலங்கோலச் சங்கம் அழித்துமெய்
அடியார் சங்கக் கூட்டத் துயிராய்
எங்கும் கூடல சங்கையா இலிங்கையா
இலிங்க இலிங்கமென் றெண்ணி யிருப்பேன்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

என்பது பசவர் பாடல்.

இன்னும் இட்டலிங்க வழிபாட்டின் உயர்வை உயர்த்த நினைத்த பசவர், தென்னையின் வேருக்கு இட்டநீர், அதன் தலையாலே இளநீராய்த் தரப்படுவது போல், இட்ட லிங்கத்திற்குச் செய்யும் வழிபாடு, எல்லாப் பயன்களையும் கொண்டு வந்து சேர்க்கும் என்கிறார்.

"மரத்தடி வேரே வாயென நீர்விடின், மரமேல் இலைகள் தளிர்ப்பது போல அறைலிங்க வாயே மெய்யர் வாயென, இனிப்புப் பொருள்களை இயைந்தே அளித்தால் தருவான் அனைத்துப் பொருளும் பின்னே! சத்திய அன்பனை அரன் எனக் கண்டு நரனெ பின்னர் நலியக் கருதிடின், நரகம் தப்புமோ? வரமருள் சங்கம்" என்றவாறு தம் கருத்தினைப் பதிவு செய்கிறார் பசவர்.

இட்டலிங்க வழிபாடும் ஐக்கியமும் வீரசைவத்தின் இருகண்களாகும். உயிரின்றி உடல் இயங்காதவாறு போல, இட்டலிங்கம் இன்றி வீரசைவம் இயங்காது.

6. சங்கமம்

வீரசைவத்தில் சங்கமம் என்று சொல்லப்படுபவர்கள், ஜீவன் முக்தர்கள் ஆவர். ஜீவன் முக்தர்களை 'அணைந்தாரின் தன்மை' என்று, மெய்கண்டார் 'திருவருட்பயன்' என்னும் நூலில் கூறுவார். இறைவனுடைய அடிகளைச் சிந்தித்தபடியே இந்நிலவுலகத்தில் நீடுவாழ்பவர்கள். இறைவனுடைய திருவடிகளை அணைந்த வண்ணமாகவே வாழ்பவர்கள் என்றும் சொல்லலாம். "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடுவாழ்வார்" என்பதுதான் ஜீவன் முக்தர்களுக்குரிய இலக்கணம் ஆகும். சித்தர்களையும் ஜீவன் முக்தர் எனச் சொல்லலாம். சங்கமரும் ஏறத்தாழ ஜீவன் முக்தர்கள்தாம்.

குரு, இலிங்கம், சங்கமம் எனும் மூன்றிடத்தும் உடல் வருந்து மாறு செய்கின்ற பூசனையில்லாதவன், உணவு உண்ணும் பிணத்திற்குச் சமம் என்றார் சிவப்பிரகாசர்.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

அரும்குரு லிங்கசங் கமத்திற் காகமெய்
வருந்துறு தொழிலற வறிதுக் கிருப்பவன்
அருந்திறு பிணம்என அறையும் மாற்றம்நீ
தெரிந்திலை யோவெனச் செய்பவ மேயினான்

(பி.லீ.601)

சங்கமர்களைச் சரலிங்கம் என்று சொல்லும் வழக்கமும் உண்டு. நிகம, ஆகம என்ற சொற்களைப் போலச் "சங்கமம்" என்ற சொல்லில் உள்ள 'கம' என்ற வேர்ச் சொல்லில் இருந்து, 'இவர்கள் அறிவுத் தோற்றத்திற்குக் காரணமானவர்கள்' எனச் சொல்லலாம். வீரசைவர்களை வழிநடத்திச் செல்லும் பணியில் ஈடுபட்டவர்கள், சங்கமர்கள். கடவுள் தொடர்பும் மக்கள் தொடர்பும் ஒருங்கே பெற்றவர்கள்; ஒரே இடத்தில் தங்கி-யில்லாமல் பல்வேறிடங்களுக்கும் செல்பவர்கள் ஆகையால், சரலிங்கம் என்றும், சரணர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

சங்கமர் வேறு; சரணர் வேறு என்ற கொள்கை உண்டு. சங்கமர்கள் கூட்டத்தவராக இருப்பர். சரணர்கள் தனித்தவர்கள். சங்கமர்கள் அவதாரப் புருடர்களைப் போன்றவர்கள். அல்லமப் பிரபு, வசவர் போன்றவர்கள் கடவுளால் பணிக்கப் பெற்று, சில குறிப்பிட்ட பணிகளுக்காக வந்தவர்கள். அவர்கள் கர்மாவை வென்றவர்கள். கர்மாவினால் வந்து பிறந்தவர்கள் அல்லர்; ஜீவன் முக்தர்கள். சரணர்களும் ஜீவன் முக்தர்களே. ஆனால், அவர்கள் இவ்வுலகில் நம்மைப் போலப் பிறந்து தம்முடைய சடுத்தல முயற்சியில் வெற்றி பெற்று ஜீவன் முக்தர்களாக ஆனவர்கள்.

வீரசைவர்கள் மூன்று வகையினர். 1. வீரசாமானியர், 2. வீரவிசேஷர் 3. வீரநிராபர்ர். வீரநிராபரர் மூன்று வகையினர். பரம், சரம், சுயம் எனப்படுவர்.

மூவகைத் தீட்சையுடன் சங்கம தீட்சையும் பெற்று காடுகளில் வாழ்பவர்கள் 'பரம்'. இவர்கள் எப்போதாவது ஊர்ப்பகுதிகளுக்கு வருவர். உணவு கேட்டு உண்ணவும் செய்வர். சரம்: மூவகைத் தீட்சைகளைப் பெற்று, அந்த மூவகைத் தீட்சைகளை உரியவர்களுக்கும் செய்யத் தகுதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெற்றவர்கள். பலவிடங்களுக்கும் சென்று தீட்சை செய்வது இவர்களுடைய வாடிக்கை.

சுயம்: திருமடங்களில் தங்கியிருந்து, சமயவாதிகளைக் கடைப்பிடித்து, மற்றவர்களையும் கடைப்பிடிக்கச் செய்து, சமய வழிகாட்டிகளாகத் திகழ்பவர்கள், சுயம். அறிந்தும் ஆணவத்தால் பழமை மறந்து தருக்கித் திரிபவர்களைத் திருத்த முற்படும் இறைவன், உடனிருந்தே அனைவரையும் நன்முறையில் பயிற்றுவதற்கு, அனுப்பப்பட்ட திருவுருவங்களே சங்கமர்கள்!

ஒரு சங்கமரின் இயல்பைப் பசவர் கீழ்க்கண்டவாறு உரைக்கிறார்:

பக்தி என்னும் நிலத்தின் மேலே,
பயிற்று குருவே விதையோடு விழுந்து
பக்கம் கிளைத்துச் செடியாய் ஆகிச்,
சொக்க இலிங்கமாம் இலையாயிற்று;
ஒக்கமெய் யுணர்வே பூவாய் மலர்ந்து
சிக்கென முழுமையே பழமாகிக் கனிந்தது
தக்க சமயம் பார்த்துச் சங்கமன்
தரையில் விழுமுன் தனக்கெனக் கொண்டான்

எனச் சங்கமன் தயாரான விதத்தை, ஓர் உருவகத்தாலே உணர்த்தி விட்டார். மேலும், உலகத்தவர் கண்களுக்குச் சங்கமர் தென்படும் விதத்தைப் பசவர்,

அனைத்தும் நீயே! அருள்பவன் நீயே!
அனைத்துப் பொருள்களையும் தன்னுள் அடக்கி
நினைக்கும் பொருளில் நிற்பவன் நீயே!
நீதிக் கூடல சங்கமத் தேவனே!
குறையற் றவனும் நீயே! முறையாய்,
குவலய மெல்லாம் உன்உரு வாமே
நின்றதோள் கண்முகம் எல்லாம் உலகிற்கு
நின்வடி வாக நீயே ஆனாய்

எனச் சங்கமனே, சங்கரனாகத் திகழ்வதையும் அழகுற எடுத்துரைக்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பசவர், 'பரம்' ஆகிய சங்கமர்களையும் பாடியிருக்கிறார். சுயம் ஆகிய சரணர்களையும் பாடியிருக்கிறார். சரணர்கள் மனிதர்கள் அணியும் ஆடையைப் போன்றவர்கள். ஆடை-யில்லாமல் மனிதன் வாழ முடியாது. ஆடையில்லா மனிதன் மானமில்லா மனிதன் ஆவான். சரணர்களின் துணையை நாடாதவர்களைச் சபேசன் தம்முடன் சேர்ப்பதில்லை என்பார் பசவர் பாடல் வருமாறு:

உடுப்புகள் உன்னுடன் பிறந்திலை ஆயினும்
உடுத்திய வுடன்உன் நாணம் அகன்றது
இடையில் வந்ததற் காகவே உலகினில்
அடையும் மகிழ்ச்சி அளவிலா திருக்கையில்
கருணையில் பிறந்தநல் சரணரின் ஒழுக்கம்
கண்டுஅதை உடுத்தபின் விடாமல் இருங்கள்
உருவிலா உடுப்பிதை விடநீர் நினைப்பில்
உற்றவன் கூடலன் உருட்டியே விடுவாள் (பச.பா.676)

பசவர் சிவனடியார்களை ஒரு தாய் தம் மக்களைக் காப்பது போல் காப்பாற்றினாராம். பாடல் வருமாறு

மொழியினாய் நினைவால் நோக்கால்
முக்கணன் அடியவர் வேண்டிற்று
ஒழிவிலாது உதவித் தாய்போல்
ஓம்புமின் ..... மலிபுழ்ச் சைவம் என்றும்
பழியிலா வழிநடப்பப்
பண்ணினன் வசவன் (பி.லீ.525)

சாளுக்கியப் பேரரசின் தலைநகரமாகிய கல்யாண் நகரில் பசவர் அனுபவமண்டபம் எனும் தெய்வீக ஞானசபையை நிறுவினார். இப்பேரில்லத்தில் 770 சரணர்கள், ஞானிகள், குருமார்கள் தங்கியிருந்தனர். வீரசைவத்தின் வளர்ச்சிக்கு இவர்கள் ஆற்றிய தொண்டு மகத்தானது. வீரசைவர்கள் எங்கெங்கு எல்லாம் கூடினார்களோ, அங்கெல்லாம் பரந்த மனத்துடன் விவாதம் நடத்தி, மக்களின் மனத்தில் ஆழப் பதிந்திருந்த குருட்டு நம்பிக்கைகளை எல்லாம் அழித்து, வீரசைவ நெறிகளை விவேகத்துடன் விதைத்தவர்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இச்சபையில் ஆண், பெண்; ஏழை, பணக்காரன்; சாதி ஏற்றத் தாழ்வுகள் என்ற எந்த வேறுபாடும் கிடையாது.

சங்கமன்சிவபெருமானின்அம்சங்களைத்தாங்கியவராகவும், அவனுடைய வடிவாகவும் இருத்தல் வேண்டும் என்பதை,

உலகுஉரு வாகிய ஒருவித னிச்சிவம்
இலகுஉறு தன்வடி வாக என்றுமே
மலைவற உணர்பவன் யாவன், மற்றுஅவன்
அலைவறு சங்கமம் ஆகும் என்பவே *(சித்.சிகா.390)*

எனும் பாடல்வழி சிவப்பிரகாசர் அருளிச் செய்கிறார்.

சங்கமர்களின் சங்கமம் எல்லாவிதமான நன்மைகளையும், சித்திகளையும் கொண்டு வந்து சேர்க்கும் என்பதை,

மெய்ப்பர சிவனது மெய்ம்மை உற்றுஉணர்ந்து
அப்பர சுகத்து அழுந்தும் மேன்மையால்
ஒப்பறும் ஒருசில யோகி சங்கம்இங்கு
எப்பயன் உதவிடாது இயம்பும் காலையே *(சித்.சி.396)*

என்பதன்மூலம் உணர்த்துகிறார் சிவப்பிரகாசர்.

பசவர் ஒருவரே குரு -லிங்கம் - சங்கமமாகிய தத்துவங் களைக் கடைப்பிடித்து, ஒரு புதிய கோட்பாட்டையே உருவாக்கியிருக்கிறார். அதனைச் சிவப்பிரகாசர்,

பசவ செய்தால் ஆயிற்று குருநிலை
பசவ செய்தால் ஆயிற்று லிங்கம்
பசவ செய்தால் ஆயிற்று ஜங்கமம்

என்று பிரபுலிங்கலீலையில் வியந்து போற்றுகின்றார்.

அட்டாவரணத்தில் சங்கமம் அடிநாதமாகவும், ஆதார சுருதியாகவும் விளங்குகின்றது. வீரசைவத்தைப் போற்ற வந்த சிவப்பிரகாசர், சரணன் ஐக்யம் எனும் அங்கமும், பிரசாதலிங்கம், மகாலிங்கம் எனும் இலிங்கமும் ஆகிய நான்கும், தங்குமிடம் சங்கமம் என்கிறார். அதற்குரிய பாடல் தாலாட்டு (42) நூலில், **"ஒழிந்த அங்க லிங்கம் ஒருநான்கு நம்பால, எழுந்தருளச் சங்கமமென் றின்பத் தருவானோ"**

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

என்று இடம் பெற்றிருக்கிறது. இறைவன் நேரே வந்து நிகழ்த்த வேண்டிய காரியங்களைச் சங்கமமே நிறைவேற்றி விடுவதால், சங்கமம் அட்டாவரணத்தில் சிவப்பிரகாசரால் சிறப்பாகப் பேசப்படுகிறது.

7, பாதோதகம்

அட்டாவரணத்துள் ஏழாவதாக இடம்பெறுவது பாதோதகம்: சங்கமர், சரணர்களுடைய பாதத் தீர்த்தத்தைப் பாதுகாப்பதற்கு முன்னர், பகவானுடைய பாத தீர்த்தத்தைச் சேமிக்க வேண்டும் என்றார் சிவப்பிரகாசர். என்புமாலையை அணிந்தவனுடைய திருவடி தீர்த்தமல்லாது, பிறவிப்பயன் நீங்காது என்பதை, **“அங்கம் புனைவோன் அடிப்புன லல்லாதுபவப் பங்கம் கழுவப்படாது என்று சொன்னானோ”** எனும் தாலாட்டுப் பாடலின் (79) மூலம் எடுத்துரைக்கின்றார்.

திருவடி, குருவின் திருவடி, சங்கமர்களின் திருவடிகளைத் திருமஞ்சனமாட்டிய நன்னீரை எடுத்து வீட்டில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். வீட்டிற்குப் பயன்படுத்தும் தண்ணீர், சமையலுக்குப் பயன்படுத்தும் தண்ணீர் ஆகியவற்றில் சிறிது பாதோதகம் கலந்துதான் பயன்படுத்த வேண்டும். பாதோதகம் சம்பந்தப்படாத எந்த ஒன்றையும், வீரசைவர் உட்கொள்ள லாகாது.

சைவத்திலும் வைணவத்திலும் அடியார்கள் - ஆசாரியர்களின் திருவடிகளுக்குப் பாதபூசை செய்து, அந்நீரைத் தலையில் தெளித்துக் கொள்வது உண்டே தவிர, வீரசைவத்தில் வகுக்கப்பட்ட பாதோதகத்தைப் போல ஒரு கொள்கை - கோட்பாடாக வரையறை செய்யப்படவில்லை.

திருமந்திரத்தில் ஏழாம்பத்தில் சிவபூசை, குருபூசை, மாகேசுவர பூசை என மூவகைப் பூசைகள் பற்றிப் பேசுகிறார். மேற்சொன்ன மூவருக்கும் செய்த திருவடிபூசை மூவேழ் தலைமுறையினருக்கும் உரித்தாம் என்பதைத் திருமூலர்,

மாத்திரை ஒன்றினில் மன்னி அமர்ந்து உறை
ஆத்தனுக்கு ஈந்த அரும்பொரு ளானது
மூர்த்திகள் மூவர்க்கும் மூவேழ் குரவர்க்கும்

Digitization by Hindu Heritage Foundation of America (HHFA USA)

தீர்த்தமது ஆம்அது தேர்ந்து கொள்வீரே **(தி.ம.1859)**

என்று இயம்புகிறார்.

பாதோதகம் என்பது பலவகைப்படும் என்றாலும், நம் வசதிக்காக மூன்றாகப் பிரிக்கலாம். 1. குருபாதோதகம் 2. இலிங்க பாதோதகம் 3. சங்கம பாதோதகம் என்பன மூன்றும் ஆகும். இம்மூன்றிலும் உயர்வுடையது குருபாதோதகம் எனலாம். சீடனானவன் தமக்குத் தீட்சை செய்து வைத்து இலிங்கத்தைத் தம் கையில் எழுந்தருளச் செய்த குருவினைச் சென்று வணங்கித் திருவடி பூசை செய்தல் வேண்டும். திருவடிப் பூசையின்போது குருவின் திருவடிகளை நன்னீரால் முழுக்காட்டுதல் வேண்டும். அந்த நன்னீரை அவர்தம் திருக்கரத்தால் எடுத்துக் கொடுக்கக் கொண்டுவந்து, ஒரு புனிதப் பாத்திரத்தால் வைத்துக் கொள்ள வேண்டும்.

குருபாதோதகம் கிட்டாதபோது, இட்டலிங்கத்தைத் திருமஞ்சனம் செய்து, அந்த நன்னீரைக் கொண்டு, பாதோதகக் கடமையினை நிறைவேற்றலாம். சங்கமர்கள் இல்லத்துக்கு எழுந்தருளும்போது, அவர்களுக்குத் திருவடிபூசை செய்து, அதனால் கிடைக்கும் நன்னீரும் பாதோதகம் ஆகும். பாதோதகம் ஒருவனுடைய பிறவிப் பிணிகளை அறுத்தெறியும் என்பதைச் சிவப்பிரகாசர்,

பரிவுடைய இட்டலிங்க பாததீர்த் தத்தால்
விரிவுடைய கன்மவினை வெட்டும்

என்பதன் மூலம் சுட்டுகிறார்.

பாதோதகத்தில் மூழ்கி எழுந்த ஒரு புழுவுக்குக் கிடைத்த பேறு, கங்கை முதலிய புனிதத் தீர்த்தங்களில் ஆடிவரும் அந்தணாளருக்குக் கூடக் கிட்டாது என்பார் சிவப்பிரகாசர்.

பந்தம் அகன்ற சிவபக்தர், பாதம் விளக்கும் புனற்குழியில்
வந்து பிறந்து மூழ்கி, அதில், வைகும் புழுவின் பெரும்பேறு
முந்து கங்கை முதலவா முற்றும் படிந்து தீவினைகள்
சிந்தும் அந்த ணாளருமே சேரார் என்று மறைசாற்றும்

(பி.லீ. 785)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பது பிரபுலிங்கலீலை.

குரு-சங்கம, சரணர் திருவடிகளுக்குத் திருமஞ்சனம் செய்து பெற்ற பாதோகத்தைப் பருகி, உண்டு வாழ்வோர் எப்போதும் சிவநேசம் கொண்டிருப்பார் என்பதைச் சிவப்பிரகாசர்,

பக்தி கொண்டுஅரன் பாதப்புனல் எனச்
சத்து எனும்குரு சங்கம மெல்லடிக்கு
உய்த்த ஒண்புன லும்களித்து உண்பரால்
நித்த லும்சிவ நேசம் அடைந்துளார் (சித்.சிகா.286)

எனும் பாசுரத்தின் வழி விளம்புகிறார்.

இவ்வாறாகப் பாதோதகம் சிவப்பிரகாசர் நோக்கில் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

8. பிரசாதம்

அட்டாவரணத்துள், எட்டாவது பிரசாதம். இதன் பெருமை கருதி **“உயர் பிரசாத குண்டத்தின் ஒண் கரை”** என்றார் சிவப்பிரகாசர் (பி.லீ.795) பிரசாதம், சைவம் - வைணவம் - வீரசைவம் ஆகிய மூன்றனுக்கும் ஒப்புடைய ஒரு நடைமுறை ஆகும். மகேசுவரருக்குப் படைத்த உணவு உருத்திரன், திருமால், நான்குமுகன் ஆகிய மூவரும் உண்ட பெருமை உடையதாகும். சித்தம் தெளிவுடையார் மிச்சத்தை (சேடத்தை) உண்டால், முத்திப்பேறு அடைவர் என்று திருமூலர், திருமந்திரத்தில் கூறுகின்றார். பாடல் வருமாறு

வித்தக மாகிய வேடத்தவ ருண்டவூண்
அத்தன் அயன்மால் அருந்திய வண்ணமாம்
சித்தம் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியாம் என்று நம்மூலன் மொழிந்ததே (1866)

இதன்மூலம் பிரசாதத்தை ஏற்றிருப்பது தெளிவாகிறது.

இராமாயணத்தில் குறித்த நேரத்தில் படையுடன் வராத சுக்கிரீவனைத் தேடிக் கொண்டு இலக்குவன் போகின்றான். கிட்கிந்தைக்கு வந்த இலக்குவனுக்குச் சுக்கிரீவன் உணவு படைத்து, உண்ணுமாறு வேண்டுகிறான்: அப்பொழுது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இலக்குவன் இராமபிரானுடைய சேடத்தைத் தவிர வேறு உணவை உண்ணுவதில்லை என்கிறான்.

பச்சிலை, கிழங்கு, காய், பரமன் நுங்கிய
மிச்சிலே மிசைவது; வேறு நான் ஒன்றும்
நச்சிலேன்; நச்சினன் ஆயின், நாயுண்ட
எச்சிலே அது; இதற்கு ஐயம் இல்லையால்

என்று கம்பர் பாடுவதால், பகவானுடைய சேடமே பாகவதனுக்குப் பிரசாதம் என்பது, வைணவத்தாலும், ஏற்றுக் கொள்ளப் பெற்றிருக்கிறது.

வீரசைவத்தில், பிரசாதம் எட்டாவது இடத்தில் இருந்தாலும், அதன் சிறப்பு நோக்கியே அவ்வாறு வைக்கப்பட்டது. தொல்காப்பியர், **சிறப்புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல்** என்று யாத்திருப்பதை இவ்விடத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும். குருவினாலும், சங்கமர்களாலும் ஏற்றுக் கொள்ளவும் கொடுக்கவும் பெற்ற எல்லாம் பிரசாதமே! வீரசைவர்களின் திருமடங்கள்-திருமாளிகைகளில் பிரசாத குண்டம் இருக்கும்! சிவஞானியரும் சங்கமர்களும் இட்டலிங்கமும் உண்டு எஞ் சிய சேடம் அங்கே சேகரிக்கப்படும். சேடம் தெய்வத் தன்மை வாய்ந்தது. ஏழை பணக்காரன் ஏற்றத்தாழ்வையும் சாதி ஏற்றத் தாழ்வையும் சேடம் போக்குகின்றது.

கன்னடத்தில் மருள சங்கம தேவர் (ஆடை தைத்துக் கொடுக்கும் தொழிலாளி) பிரசாத குண்டத்தில் அமர்ந்து, சரணர் ஆனார். அல்லம தேவர், மருள சங்கர தேவர் குண்டத்தில் உட்கார்ந்து சேடம் உண்டு கொண்டிருப்பதை மற்ற வீரசைவர்களுக்குக் காட்டி, பிரசாதத்தின் பெருமையை உயர்த்தினார். மேலும், சேடத்தை உண்டவர்களுக்குப் பிராரப்தம், சஞ்சிதம் போன்ற வினைகளின் திரட்டுத் தீண்டாது என்று அல்லமர் அறிவுறுத்துகின்றார். சிவப்பிரகாசரும் சேடத்தால் வினைகளும் மனமாசுகளும் அறுபடும் என்பதைத் தாலாட்டுப் பாடலில் (80) **“அந்தக் கரதலத்து அழுக்கறுப் பதெங்கள் பரன், சந்தப் பிரசாதந் தானென்று சொன்னானோ”** என்றவாறு இயம்பியிருக்கின்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அல்லமதேவர் கூறியதைச் சிவப்பிரகாசர், பிரபுலிங்க லீலையில் (பாடல்-764) மருவசங்கர தேவர் சேடம் உண்டதால், அவரைக் குணம் மிக்கான் எனப்போற்றுகின்றார். துறவியானவர் தொழில் செய்து உண்ணுவோம் என முனைவராயில், பிற உயிர்களுக்குத் தீங்கு நேரிடலாம் என்று சேடம் உண்டாராம். அதனால், அவருடைய முப்பிறப்பு வினைகளும் நீங்குமாம்.

"தொழிலால் முயன்று நுகர்வம் எனில்
துயர் ஒன்று உயிர்க்கு விளையும்என
ஒழியா அமல சரமூர்த்தி
உண்ட மிச்சில் நுகர்வம் எனில்
பழியாதும்இலை அகன்றுபோம்
பவமும் என்னப் பிரசாதக்
குழியான் அதனை அகலாமல்
கொண்டிங்(கு) இருந்தான், குணமிக்கான்" (பி.லீ.783)

என்பது பாடல்.

பசவர் தாமே சங்கமர்- சரணரின் சேடத்தை மகிழ்ந்து உண்ணுவேன் என்பதை,

"உண்மை பக்தன் என்றெனைக் கருதி,
உயர்ந்து பறந்தே அகல்பவன் நானலன்;
வண்மைச் சரணர்கள் என்னவர் என்று,
மதித்தே அவரிடம் பறந்து செல்வேன்;
தண்ணருள் புரியும் சங்கனின் சரணர்,
தாமுண்டு உடுத்திய மிச்சந்தன்னை
உண்ணெகிழ்ந் தெனக்கே உதவுவர் ஆதலின்
உடையவ! அவரை விட்டென்றும் அகலேன்

என்னும் பாடல்வழி விளம்புகிறார்.

வீரசைவத்தின் பெருமிதமே, அது பிரசாதத்தை - சிவப்பிரசாதத்தைச் சமத்துவம் ஆக்கியதுதான். வீரசைவத்தின் தத்துவமே, பிரசாதத்தில் இருப்பதால், அதனைச் சிவப் பிரசாதம் என்றனர். அதனைப் பாட்டிலேயும் சிவப்பிரகாசர்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தத்துவ சுத்தியே அந்த சுத்திதான்
அத்தன்உண்டு ஒழிபிர சாதம் ஆயினது
ஒத்திட அரியதோர் உணர்விற்கு ஏதுவாம்
சித்தநின் மனம்தனைச் செய்யும் என்பவே (சித்.சி.372)

என்றவாறு அருளிச் செய்கின்றார்.

மற்றும் சிவப்பிரகாசர், அழுத்தமாய்ப் பிரசாதத்தின் பெருமையை எவரும் வியக்கும் அளவிற்கு எடுத்தோதுகின்றார். மூலவரின் பிரசாதம், பெற்றோர் மகளிர்க்கும், மகனுக்கும், பசுவுக்கும், அந்தணர்க்கும் நேரிட்ட கொடிய பாதகங்களை எல்லாம் தீர்க்கும். அகத்தையும் புறத்தையும் தூய்மையாக்கும். இதற்கு நிகர் வேறொன்று கிடையாது எனப் பிரபுலிங்க லீலை(986)யில் முழக்கமிட்டுச் சொல்லுகிறார். பாடல் பின்வருமாறு,

தாய்க்கு வழுவில் மகளிர்க்கு, தந்தை தனக்குப் பசுவிற்குச்
சேய்க்கு மறையோர் தமக்கு இடர்செய், தீர்வில் கொடிய பாதகமும்
போக்கும் இமைப்பில் கரணத்தைப் புனிதம் ஆக்கிச் சிவமாக
ஆக்கும் அரன்றன் பிரசாதம் ஆயின் அதற்கு நிகருண்டோ?

என்பது பாடல்.

நிறைவாக, வீரசைவத்தில் இடம்பெற்றிருக்கின்ற பிரசாத நெறி உலகத்துக்கு ஒரு புதுமை என்றும், தனக்கு மட்டும் சமைத்து உண்ணாது, சேடத்தை மட்டும் உண்டு வாழ்கிற வீரசைவர்கள் வீரசைவத்தில் மட்டுந்தான் உண்டு என்றும் சவால்விடுவதுபோல் பேசுகின்றார், சிவப்பிரகாச சுவாமிகள். பாடல் வருமாறு;

ஒன்றொரு விடயம் தன்னை, உறுசுவை நிறைவுஎன்று ஆக்கி
என்றும்எம் முகத்து அளித்திட்டு,எம்பிர சாதம் கொண்டு
துன்றுறு கருமம் உன்னாத் தூய்மைஇவ் வீரசைவத்து
அன்றிவேறு ஒருமார்க் கத்தில் அடுக்குமோ வடுக்கண் மாதோ
(பிர.லீலை.1145)

அட்டாவரணம் வீரசைவத்திற்கோர் மகுடம் போன்றது. இன்னும் சொல்லப் போனால், வீரசைவம் என்ற தேருக்கு வாய்த்த எட்டுச் சக்கரங்கள் என்று அட்டாவரணத்தைச்

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

சொல்லலாம். மேலும், வீரசைவம் என்ற மாளிகைக்கு அமைந்த எட்டுப் படிகள் என்றும் அட்டாவரணத்தைச் சொல்லலாம். அந்த எட்டுப் படிகளையும் செம்மையாகச் செதுக்கித் தந்திருக்கிறார் சிவப்பிரகாசர். வீரசைவ நெறியில் நடப்பவர்கள், தவறியும் தவறி விழுந்து விடாமல் இருப்பதற்கு, எண்வகைக் காப்புகளும் கைப்பிடிகளாக அமைந்து காக்கச் சிவப்பிரகாசர் வேலி கோலியிருக்கிறார்.

சடுத்தலம்

வீரசைவ நெறியில், யாரும் திடீரென வீரசைவர் ஆகிவிட முடியாது. சைவத்தில் முதல்நாள்வரை வேடன் ஆக இருந்தவன். மறுநாள் கண்ணப்பநாயனார் ஆகிவிட முடியும். வாழ்க்கையின் ஒரு பகுதி வரையில், போர்ப்படையில் பரஞ் சோதியாக இருந்த ஒருவர், ஒருநாள் சிறுத்தொண்டனாயனார் ஆகிவிட முடியும். ஆனால், வீரசைவத்தில் பல படிநிலைகள் உள்ளன. அப்படிநிலைகள் ஒவ்வொன்றிலும் தேர்ச்சி பெற்றால் தான், பரசிவவெள்ளத்தில் அடியெடுத்து வைக்க முடியும்.

சடுத்தலம் ஏன் தேவை? பஞ்சாசரம் என்னும் ஐவகை ஒழுக்கத்தால், ஜீவன் ஆத்மன் ஆனது. அட்டாவரணம் என்னும் எண்வகைக் காப்புத் துறையால் ஆத்மன் அங்கன் ஆனான். சடுத்தலப் பயிற்சி மூலம் அங்கன் ஐக்யன் ஆவான். சடம் என்றால் உடல்; தலம் என்றால் காப்பு. சீவனின் உடல் முழுவதும் மகாலிங்கம், பிரசாதலிங்கம், சிவலிங்கம், சங்கம லிங்கம், குருலிங்கம், ஆசாரலிங்கம் எனும் இலிங்கங்களினால் கலந்து இலிங்கமயமாகவே உள்ளதால், சடுத்தலம் என்றால் கி.பி.16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரேவணசித்தர், சடத்தலம் என்றே நூல் முழுவதும் எழுதியுள்ளார்.

பயிற்சியும் பக்குவமும் இல்லார்க்கு வீரசைவம் கைகூடாது என்பதைச் சிவப்பிரகாசர்,

தூய்தா கியநெஞ் சுடையார்க்குத்
தாமே சிவமாத் தோன்றுமால்
தீதா கியநெஞ் சுடையார்க்குத்
தெளிய அபேதம் மிகலின்றி

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA)(USA).

வேதா கமங்கள் விளம்பிடினும்
விளங்கா தென்றும் வேறென்னும்
வாதால் அழிவர் அவர்மாயை
மயக்க மயங்கு மதியினார். *(பி.லீ.1128)*

எனும்வழி உணர்த்துகிறார். எனவேதான், "நீதியினால் விளங்கும் சடலத்தை" என்று இரேவணசித்தர் புகன்றுள்ளார்.

சடுத்தலம் என்பது ஆறு இடங்களில் இணைகின்ற இணைப்பு எனச் சாற்றலாம். வீரசைவன் முதலில் பக்தி என்னும் நறும்புனலுள் மூழ்கித் தன்னைத் தூய்மையான பக்தியால் நிறைவு செய்து கொள்கிறான். பின்னர் இட்டலிங்கத்திற்குப் பூஜை செய்கிறான். தன் கைத்தலத்தில் இருக்கும் மாமணியே பதி, தான் அவனுக்குச் சதி. தன் கைத்தலத்தில் இருக்கும் மாமணியே! தன் பிராணனில் இருக்கின்ற பிராணலிங்கம் என்ற ஞானத்துடன் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும்.

தலம் என்பது இடம் என்ற பொருளைத் தரும். சடுத்தலம் என்பது ஆறுஇடம் என்ற பொருளைத் தரும். சிறு நிகழ்ச்சிகள் நிகழ்வதற்கு "தாரமாக இருக்கின்ற அமைப்பினை அல்லது சூழலைத் தலம் என வீரசைவம் வழங்குகின்றது. தலம் என்ற பெயர் பரசிவத்துக்கும் வழங்குகிறது. ஸத் என்ற சொல் எந்த இடத்திலிருந்து எல்லாப் பொருள்களையும் வெளிப்படுத்துகின்றனவோ, எந்த ஒன்று தன்னிடத்திலிருந்து தோன்றிய எல்லாப் பொருள்களையும் வயப்படுத்துகிறதோ, அந்த இடம் தலம். எனவே தலம் என்பது பரசிவம் என்ற கடந்த நிலைப்பொருள். மேலும் இன்னது என்று வரையறை செய்ய முடியாத நிலையில் உள்ள பொருளைத் தலம் என்று சொல்லும் வழக்கம் உண்டு.

சொல்லும் இடமன்று சொல்லப் புகுமிடம்
எல்லை சிவனுக்கென் றுந்தீபற
என்றால்நா மென்செய்கோ முந்தீபற. (திருவுந்தி29)

சடுத்தல யோகத்தில் *முதல்நிலை:* பக்தனும் - ஆசார லிங்கமும் (நாற்றம் - மூக்கு)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீரசைவன் ஆவதற்குரிய ஒரு பக்தன் எப்படிப்பட்டவராக இருத்தல் வேண்டுமெனில், அவர் சிவ வேடங் கண்ட அளவில் விரைந்து எழுந்து வணங்க வேண்டும். பின்னர் குருலிங்க சங்கமம் ஒருபொருள் என்றறிந்து உடல்பொருள் உயிர் மூன்றையும் அவரிடத்திலே செலுத்திச் சிவபத்தரையே உறவென்று கருதிப் பாசறைவுறவாகிய உலக விகார மயக்கங் களை விட்டுவிடுபவராய் இருத்தல் வேண்டும். இதனைச் சொலும் பாடல்,

ஈசன் அருள் திருவேடங் கண்டனவே தரியாது
எழுந்து இறைஞ்சில், குருலிங்க சங்கமம் ஒன்றெனவே
தேசிகனால் அறிந்து பொருள் உடல்உயிர் அவர்பால்
செலுத்திடுதல் உறவுசிவ பத்தரென மருவிப்
பாசவுற வெனுமுலக விகாரமயல் அகற்றல்
பத்தனியல்பு ஆகுமெனப் பகர்ந்திடும் ஆகமமே

இவ்விலக்கணத்திற்கு அப்பூதியடிகள் சிறந்த எடுத்துக்காட்டு ஆவார். அப்பரடிகளைக் கண்டவுடன்

அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாம்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார்

என்பதால் உணரலாம்.

பக்தனும் ஆசாரலிங்கமும்

குரு, சங்கம, பக்தர்கள் ஆகியோர் முன்னிலையில் அங்கமாகிய தனக்கும் இலிங்கம் என்ற வரனுக்கும் திருமணம் நடந்த நிகழ்ச்சியை உளங்கொண்டு, இலிங்கத்தை அங்கத்திலிருந்து நீக்கக் கூடாது என்ற எண்ணத்தோடும், வேறு எந்தத் தெய்வத்தையும் வணங்கக்கூடாது என்ற வைராக்கியத்தோடும், தன்னை முழுமையாக இஷ்டலிங்கத்தோடு கட்டிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற உள உறுதியோடும் கிரியை தொடங்க வேண்டும். இது கிரியையில் ஞானம்; இது இஷ்டலிங்கத்தை நோக்கிய செயல்; இஷ்டலிங்க ஆசாரம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மனைவி, மக்கள், பொன், மண் முதலிய பொருள்களில் உண்டாகும் ஆசைகளைத் தவிர்த்து, முற்பிறவிகளில் செய்த புண்ணியத்தால் சற்புத்தியில் பதிந்து நிற்கின்றோம் என்ற உணர்வோடு நிற்கவேண்டும். நற்சிந்தை என்ற கையால் தான் அனுபவிக்கும் பொருள்களில் உள்ள மனத்தை அர்ப்பிதம் செய்தல் வேண்டும். பருவுடம்பில் உள்ள நாசியே ஆசாரலிங்கத்தின் முகம் இணையும் இடமாகும். பக்தனின் உடலில் மூலாதாரத்தில் கிரியாசக்தியோடு அமர்ந்திருக்கும் ஆசாரலிங்கம், பக்தன் மூக்கைத் தம்முடைய முகமாகக் கொண்டு அவர் அளித்த மணத்தை ஏற்று, அவனுக்கு இன்பம் என்ற பிரசாதத்தை அளிப்பான்.

பல பிறவிகளில் பண்ணிய புண்ணியத்தால் தீவினை நீங்கிப் புனிதமான மனத்தைப் பெற்றவன் பிண்டம் என்னும் மூர்த்திப் பிரமப் பெயரடைவான். இதனைச் சிவப்பிரகாசர்,

அந்தக் கரண சுத்தியே அறிவை அறிதல் சாதனம்அவ்
அந்தக் கரண சுத்திதனக்கு அறையும் கருமம் ஆரணங்கள்
அந்தக் கரண சுத்திதான் ஆவது அவாஅற் றிடுதலே
அந்தக் கரணச் சுத்தியினால் அடைவன் பிண்டப் பெயரன்றே
(ப.பி.1122)

என்றவாறு அருளிச் செய்கிறார்.

சடுத்தலம்: மகேசன் குருலிங்கம் (சுவை-நான்கு) பிறர்மனை நயத்தல், பொருள் நயத்தல், சிறுதெய்வ வழிபாடு முதலிய வேட்கைகளை விட்டுவிட்டு, அட்டாவரணக் காப்பினை ஏற்றல் வேண்டும். அதனால் நைட்டிக பத்தியில் விளங்கிக் கொண்டிருக்கும் மகேசன், நற்புத்தி என்ற கையால் தான் அனுபவிக்கும் பொருள்களில் உள்ள சுவையை நாக்கில் அர்ப்பித்தல் வேண்டும். அப்படிச் செய்த மகேசன் உடலில் சுவாதிஷ்டானத்தில் ஞானசக்தியோடு அமர்ந்திருக்கும் குருலிங்கம், மகேசன் நாக்கைத் தம் முகமாகக் கொண்டு, அவன் அளித்த சுவையை ஏற்று அவனுக்கு இன்பசேடம் அருளுவான். இன்னொரு அருட்சட்டத்தை,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாற்றிநீ ரங்கமரும் புத்திரிகைகர் துவோம்
சாதாக் கியஞான சத்திகுரு லிங்க
மேற்றகலை பிரதிட்டை முகங்கிங் கவையா
பிரதமிசைந்த திரவியதனை யியல்புவிழா வகையே
யாற்றலு குபுருசி நிறைவதனை நயிஷ்டை
யாகியநற் பத்தியிலா லற்புதஞ் தருணம்
மாற்றரு மன்பினிலி ரப்பிரசாத நுகர்வோன்
மகேசுரனாம் பிரசாதி வழக்கினி மேலுரைப்பாம்
(பர.இ.ச.25)

எனும் பாடலும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இதையே,

பரநாரி பரத்திரவி யத்தினுறுந் தேர்ந்தப்
பற்றாகும் நசையகற்றிச் சித்தச்சுத்த னாதல்
வரமகா லிங்கநிட்டை புரிதல், சிவபத்தர்
மருவுமிட மேவிரும்புல் மகேசன் என்றோதும்
திரமகா லிங்கசமற் பணைனுகருமப் பயனைச்
செய்தவினை லிங்கநினைவா லுகந்துசெலுத்த லாகும்
விரவாக லிங்கசமற் பணையல்லா தெவையும்
விட்டிடுதல் பிரசாதிக் குற்றநிலை யிதுவே (பர.இ.ச.22)

சடுத்தலத்தில் குருலிங்கத்திடம் நாக்கினால், அருள்பெற வேண்டியவர்கள் என்பதால், அவர்கள் உயிர்க்கொலையைக் கேட்கும் சிறுதெய்வங்களை வழிபடக் கூடாது என்பதை,

பல்லுயிர் செகுக்க லாகாப் பரமனே யல்லால் வேறு
புல்லிய தெய்வந் தன்னைப் போதவே தோத்திரங்கள்
சொல்லியே பரவ லாகா துணிந்திவை செய்யில் மாதே
அல்பயிலான் பாவத் தழுந்துவான் பத்த னன்றே (109)

என்னும் பாடல்வழி எடுத்தியம்புகிறார் சித்தர்.

சடுத்தலத்தில் 3ஆம் நிலை: பிரசாதி - சிவலிங்கம் (ஒளி-கண்)

லௌகீக வாசனையில் கட்டுண்டு, யான் -எனது என்னும் அகப்பற்று, புறப்பற்றுக்களை விடுத்துத் தன்னிடம் அடையும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொறிபுலன் அனைத்தும் இறைவனுக்கே அர்ப்பணிக்க வேண்டும். அதனால் அவதான பக்தியில் விளக்கமுற்று நிற்கும் பிரசாதி, நிரங்காரம் என்னும் கரத்தினால் தாம் அனுபவிக்கும் பொருள்களில் உள்ள ஒளியைக் கல்மூலமாக அர்ப்பித்தல் செய்ய வேண்டும். பிரசாதி உடலில் மணிபூரகத்தில் ஞானசக்தியோடு அமர்ந்திருக்கும் சிவலிங்கம், அவனுடைய கண்ணைத் தன்முகமாகக் கொண்டு, அவன் அர்ப்பணம் செய்த ஒளியை ஏற்று இன்பசேடத்தை அருள்வான்.

மூன்றாம் நிலையில், அதாவது இட்டலிங்க பாவனை சடுத்தல யோகத்தில் ஒலியும் ஒளியும் இணைந்த நிலையில் தோன்றும். இதைச் சூனியம் என்பர். சூனியம் என்பது இல்லை என்னும் பொருளுடையது அன்று. இனத்தினுடைய இணைப்பு என்றும் சொல்லிவிட முடியாது. இணைப்புக்கு மேல் ஒரு இணைப்பைக் கடந்த நிலை, இதையே சூனியம், நிரிப்பாயலு, தலம் என்றெல்லாம் இயம்புவர்.

இந்தச் சூனிய நிலையில் ஆறுபடிகள் உண்டு. அது பாவலிங்கப் படிநிலைகள். அதில் ஏறும் இருவருக்கும் அங்கலிங்கம் என்ற பெயர் இல்லை. ஒலி, ஒளி இணைப்பு என்ற பொருளும் இல்லை. இங்கேதான் வீரசைவ நெறியின் அத்வைதம் தோன்றுகிறது. ஆறுபடிகளும் ஏறி, அதற்கு மேல் உள்ள இடம் ஏழாம் நிலை. இதைச் சூனிய சிம்மாசனம் எனக் குறிப்பதுண்டு. இதில் சென்று அமர்ந்து இந்நிலையை விளக்கியவர் அல்லமர்.

பிரசாதத்தில் ஐம்பெரும் பூதங்களில் ஒன்றான நெருப்பே உடலாகும். கைகள் அகங்காரமாகும். சாதாக்கியம் மூர்த்தி சாதாக்கியமாகும். சத்தி, இச்சா சத்தியாகும். இலிங்கம் சிவலிங்கமாகும். கலை, வித்தையாகும். முகம் கண்ணாடி ஆகும். இந்நிலையில் கிடக்கும் அவதான பத்தியில் அற்புதம் செய்து, கிடைக்கும் பிரசாதத்தினை நுகர்வோன் பிரசாதியாவான். பாடல் வருமாறு;

சட்டகமா முதாசினன் கைநீரா கங்கார
மூர்த்திசாத் தியமிச்சா சத்திசிவ லிங்க

Digitization by Hindu Heritage-Foundation of America, HHFA(USA)

மோட்டைமிகுங் கலைவித்தை நேத்திரமா னனமா
 மோங்குசுரு பயனை ருபுசிரு நிறைவின்
திட்டமுட வைதான பத்தியினா லறிந்தே
 செய்துசமற் பணைசுரும்ப பிரசாத மதனை
இட்டமுட னுகருமவன் பிரசாதி யெனவே
 இயம்புவர்கள் பிராணலிங் கியற்கையினி யுரைப்பாம்

என்பது, மேற்சொன்ன விளக்கத்திற்குரிய பாடல் (பர.இ.ச.260)

மகாலிங்கத்துக்கு அர்ப்பித்து, அதனைத் தானும் இலிங்க நினைவால் உகந்து கொண்டு இலிங்க அர்ப்பமில்லாத பொருள்களை அறிவால் விட்டிருத்தல் பிரசாதிக்குரிய நிலையாம். இதனை,

நிரமாக லிங்காமர்ப் பணைநுகரும் பயனைச்
செய்து அதனை லிங்கநினை வாலுகந்து செலுத்துதல்
விரவாக இலிங்கசமர்ப் பணமில்லா எவையும்
விட்டிடுதல் பிரசாதிக்கு உற்றநிலை இவையே

எனும் பர.இ.சடுத்தலம் பாடல் 22 மூலம் அறியலாம்.

பசவருடைய சிவானுபவ மண்டபத்தில் சென்னவசவர் மிகவும் முதன்மையானவர். அவர் சடுத்தலத்திலே தியானத்திலே இருக்கும் ஒருவர் எந்தப்படியில் இருக்கிறார் என்பதை அனுமானத்தாலே அறிந்து சொல்லிவிடுவாராம். அப்பாடல் வருமாறு;

பங்க வளற்று வழிமாற்றி
 யொருநல் வழியைப் பகர்வார்போல்
தங்கண் மதியிற் பலபிதற்றுஞ்
 சமய ருரைக டமைநீக்கி
அங்க நிலையிற் றிலிங்கநினை
 யிற்றென் றருளும் வீரசைவ
சிங்க நிலைத்த அருட்சென்ன
 வசவன் திருத்தாள் சிரத்தணிவாம். (பி.லீ.8)

என்பது பாடல்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சடுத்தலம்: பிராணலிங்கி - சங்கமணிலிங்கம் (உணர்வு - தோல்)

பிரசாதித் தலத்திலுள்ள அவதான பத்தியானது, சுவானுபவத்தில் சம்பந்தமடைவதால், அஃது அநுபவ பத்தி எனப்படும். அந்த அநுபவ பத்தியினால், ஆன்மாவிற்குப் பிராணலிங்கித் தலம் உண்டாகும். பிராணலிங்கி சங்கம லிங்கத்தில் சம்பந்தமுடையவர் ஆவார்.

எப்பொழுதும் இயங்கும் தன்மையுடைய காற்றுடன் கூடி நிலைகெட்டுத் தடுமாறி, லௌகிகங்களில்சுழலும் கலக்கங்களை அறவே விடுத்து, உண்மை நெறியில் நிற்க வேண்டும். அதனால் அநுபவபக்தியில் விளக்கமுறும் பிராணலிங்கி நன்மணம் என்ற கையால், தான் அநுபவித்த பொருள்களில் உள்ள ஊற்று (உணர்வு) இன்பத்தைத் தோல் மூலம் அர்ப்பணம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் பிராணலிங்கியின் உடம்பில் அநாகதத்தில் ஆதிசக்தியோடு அமர்ந்து, பிராணலிங்கி கொடுக்கும் ஊற்று இன்பத்தை அவனுடைய தோலின் தம்முகம் வைத்து ஏற்று, இன்பசேடத்தைக் கொடுப்பான்.

சொல்லப்பட்ட சிவச்செயலெல்லாம் விடுத்து, இன்ப துன்பங்களையும் ஒழித்து, எக்காலமும் இலிங்க நினைவிற் சம்பந்தமாயிருப்பது, நீதியாகிய பிராணலிங்கிற்கு இயல்பாகும் என்பதை,

ஓதும் உயிர்ச் செயலினை விட்டுஇன்பத் துன்பம்
ஒழித்துலிங்க நினைவினில்சம் பந்தமாதல்
நீதிதரும் பிராணலிங்கிக் கியல்ப தாகும் (செ.22)

எனும் பாடல் மூலம் அருளாளர் புலப்படுத்துகின்றார்.

சடுத்தலம்: சரணன்: பிரசாதலிங்கம் (ஓசை-செவி) பிராணலிங்கித் தலத்திலுள்ள அநுபவ பத்தியானது ஆனந்தயோகமடைவதால், அஃது ஆனந்த பக்தி எனப்படும். அந்த ஆனந்த பக்தியினால் ஆன்மாவிற்குச் சரணத்தலம் உண்டாகும். சரணம் பிரசாதலிங்கத்துடன் சம்பந்தம் உடையவன் ஆவான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உடம்பே சதி, தானே பதி என நின்று உலகவின்பங்களை அனுபவித்த முறை சரியன்று என நீக்கி, சாந்தமடையும் தானே சதி- பிரசாதலிங்கமே பதி ஆனந்த பத்தியில் நிற்பான் சரணன். அவன் தன் நன்ஞானம் என்ற கையால், தான் அனுபவித்த இசையைச் செவியில் அர்ப்பணம் செய்து, சரணின் விசுத்தி தானத்தில் பராசக்தியோடு அமர்ந்து இருக்கும் பிரசாதலிங்கம். அவன் செவியை இடமாகக் கொண்டு, இன்பமாகிய சேடத்தைத் தருகிறான். நித்தியமாகிய சரணன் நெறியைக் கூறுமிடத்துக் குற்றம் பொருந்திய ஐம்புலத்தையும் கெடுத்துத் தான் சதியுமாய் தனக்கு இலிங்கமே பதியாய்ப் பொருந்தியிருப்பதாகும். அதனை, **"நித்தியமாம் சரணன்நெறி நிகழ்த்துங் காலைத் தீதுறும் ஐம்புலன் அகற்றிச் சதிதான திகழ்பதியே லிங்கமெனச் செறிய லாகும்"** எனும் பாடல்வழி உணர்த்துகிறார், சித்தர். *(செய்யுள்-24)*

ஐக்யன்-மகாலிங்கம் *(உள்ளம்)*

சடுத்தலம் : ஐக்யன் - மகாலிங்கம்

சடுத்தலத்தில் நிறைவாக இடம்பெறுகின்ற நிலை ஐக்யன் ஆகும். சரணத்தலத்திலுள்ள ஆனந்த பக்தியானது, இலிங்காங்க சாமரஸ்யத்தின் பெருமையையடைவதால், அது சமரச பக்தி எனப்படும். அந்தச் சமரச பத்தியினால் ஆன்மாவுக்கு ஐக்யத் தலம் உண்டாகலாம். ஐக்யன் மகாலிங்கத்தின் சம்பந்தம் பெறுவான்.

சதி-பதி பேதம் அற்று எங்கும் சிவமும் தாமுமாய்க் கலந்து நிற்கும் **அகம்பிரம்மாஸ்மி** என்ற நிலையில், அபேத பாவனை கைவரப்பெற்று சாமரஸ்ய பக்தியில் திளைக்கும் ஐக்யன் நற்பாவனை என்ற கையால் உள்ளத்தின் மூலமாக இதுவரை தான் அடைந்த திருப்தியை அர்ப்பணம் செய்து விடுகிறான். ஐக்யனின் ஆக்ஞாத் தானத்தில் சிற்சக்தியோடு அமர்ந்திருக்கும் மகாலிங்கம், அவன் உள்ளத்தைத் தன்முகமாக வைத்து, அவன் தரும் திருப்தி, சாந்தம் ஆகியவைகளையும் ஏற்றுக் கொள்கிறான். அவன் பரமானந்த சேடம் அருளுவான்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

ஆதிமலமாகிய ஆணவம் முதலிய ஐந்து மலங்களையும் பஸ்பமாக்கி ஒழித்துத் தான் அருள் வடிவமாகியிருப்பது ஐக்யனுக்குரிய இயல்பாகும் என்று ஆகம வாக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இதனை,

ஆதிமலம் ஓரைந்தும் இரிய நூறி
அருள் விரவல் ஐக்யன் என்றறையும் நூலே (செ.25)

என்றவாறு இயம்பும்.

ஐக்யத்தின் அருமைபெருமைகளைச் சிவப்பிரகாசர் போல் எவரும் எடுத்துரைக்க முடியாது. "உண்பதற்காக வந்த பொருளை அப்படியே உண்டுவிடாமல், உரு,சுவை, நிறைவு என்றாக்கி, அப்பொருளினுடைய வடிவென்றும், அதனுள் இருக்கும் சுவை என்றும், அதனால் உண்டாகும் நிறைவு என்றும் பகுத்துக் கொண்டு, எப்போதும் தியாகாங்கமாகிய உடம்பில் எழுந்தருளியிருக்கும் இஷ்டலிங்க முகத்திற்கு உருவையும், யோகாங்கமாகிய சூக்கும உடலில் பொருந்தியிருக்கும் பிராணலிங்க முகத்திற்குச் சுவையையும், யோகாங்கமாகிய காரண உடம்பில் வீற்றிருக்கும் ஞானலிங்க முகத்திற்குத் திருப்தியையும் (பாவலிங்கம்) நிவேதனம் செய்து, நிவேதித்தப் பொருளாகிய பிரசாதத்தை உண்டு, தனக்கு மட்டும் பொருந்துவதாகச் சமைத்துக் கொண்ட பொருள்களால் உணவு உண்ணாத அத்தகைய தூய்மை, வீரசைவ நெறிக்கு அன்றி, வேறோர் சமயநெறிக்குப் பொருந்துமோ எனும் பெருங்கருத்தை,

ஒன்றொரு விடயம் தன்னை உருசுவை நிறைவென்றாக்கி
என்றுளம் முகத்து அளித்திட்டு எம்பிரசாதம் கொண்டு
துன்றுறு கருமம் உன்னாத் தூய்மை இவ்வீர சைவத்து
அன்றிவேறு ஒருமார்க் கத்தில் அடுக்கமோ வடுக்கண் மாதே

எனும் மகடூஉ முன்னிலைச் செய்யுள் மூலம் எடுத்துரைக் கிறார், சிவப்பிரகாசர்.

ஆறாம் நிலைக்கு ஒரு வீரசைவன் வரும்போது, முன் ஐந்து நிலைகளில் லிங்கம் கொடுத்து வந்த இன்பமாகிய பிரசாதங்களையே திரும்பவும் மகாலிங்கத்துக்கே அர்ப்பணம்

Digitization by Hindu Heritage-Foundation of America (HHFA)(USA)

செய்து விடுகிறான். முதல் ஐந்து நிலைகளில் அவன் பெற்று வந்த சேடம்: இறைவன் தந்த பிரசாதம். அதனால் அவனுக்கு ஒரு நிறைவு சாந்தி இருந்தது. அதனையும் ஆறாவது நிலையில், அந்த லிங்கத்துக்கே அர்ப்பணம் செய்து விடுகிறான். இதுவே வேறு எதிலும் காணலாகச் சிறப்புத்துறை. இதனால் வீரசைவம் மிகமிகத் தூய்மையானது எனலாம்.

எனவே, உயிர்களின் பகுதியில் எஞ்சியதாக ஒன்றும் இல்லை. இந்நிலையில் வீரசைவன்தான் அனுபவிப்பதும் இல்லை. அவன் கொடுக்க ஏற்பதும் இல்லை. இந்நெறியே பிராணலிங்க ஆசாரம் ஆகும்.

கயிலாயத்தில் இறைவன், இறைவியோடு உரையாடிக் கொண்டிருக்கையில் ஆகமத்தின் பெருமைகளை எடுத்துரைக்கிறான் சிவன். அப்பொழுது சடுத்தல நெறி பற்றி இறைவி கேட்கிறாள். "சக்தியுமை யாள்வினவப் பரமன் கூறுஞ் சடத்தலலிங் கத்தியல்பு சாற்றுங்காலை" *(5)*

இந்த நல்ல சடத்தலத் திவ்விதி
அந்த மின்றிவீ ராகம ராகிய
எந்தை யாரெனை யாளும் சதாசிவர்
சிந்தையா யாயிறை விக்குரை செய்ததே

என்று இறைவன் இறைவிக்குச் சடுத்தல நெறியை எடுத்தியம்புவதாகப் பரமஇரகசிய சடத்தலம் கூறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிறைவுரை

அறம் தழையும் மயிலைவரை எனப் போற்றப் பெறும் மயிலாசலம், அரன் உறையும் மலையுமாகும். ஸ்ரீபால சித்தரிலிருந்து 20ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் வரை போற்றி வளர்த்து வரும் புகழ்மலையும் ஆகும். தன்னை மருவினாரைத் தான் ஆக்கும் மயிலம், நல்லாற்றூர்ச் சிவப்பிரகாச சுவாமிகளையும் தன் வசம் ஆக்கியது.

'சைவத் தலைமைத் தமிழ்க்கடல்' என்றும், 'தெய்வப் புலமைச் சிவப்பிரகாசர்' என்றும் வண்ணச்சரபம் தண்ட பாணி சுவாமிகளால் ஆராதிக்கப்பட்ட சிவப்பிரகாசர், மயிலம் மடத்தால் சிறப்புப் பெற்றார்; திருமடத்திற்கும் பெருமை களைச் சேர்த்தார்.

மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடவும் திருத்தொண்டத் தொகை தரவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வருவிக்கப்பட்டதைப் போல், வீரசைவத்திற்கு ஒரு புதிய பார்வை தரச் சிவப்பிரகாசர் வருவிக்கப்பட்டார். கன்னடதேசத்தில் வீரசைவத்திற்கு மறுமலர்ச்சி தந்தவர் பசவர் என்று சொன்னால், தமிழகத்தில் வீரசைவத்திற்கு மலர்ச்சி தந்தவர், சுயம்பிரகாசமாகிய சிவப்பிரகாசர் எனலாம். "பழமறை ஆகமப் பயன் எலாம் மிகக் கழறிய சிவப்பிரகாச மூர்த்தியை" வீரசைவத்திற்குக் கிடைத்த 'மகாகவி' எனலாம். 'கவிசார்வ பௌமர்' என்றொரு சிறப்புப் பட்டமும் அவருக்குண்டு.

எம்பெருமான் இராமானுஜர் வைணவத்திற்கு ஒரு புதிய தரிசனம் தந்ததுபோல் வீரசைவத்திற்கு ஒரு புதிய தரிசனம் தந்தவர் நம் சுவாமிகள் என்றாலும், சைவம் என்ற நேர்க்கோட்டினைக் குறைக்காமலேயே வீரசைவம் என்ற கோட்டினை மிக உயர் உயரத்திற்கு உயர்த்தியவர் சிவப்பிரகாசர். பிரபுலிங்கலீலையைத் தொடங்கும்போதே **"பண்ணுதற்கரிய அமுதுறழ் முத்தமிழ் நால்வரையும் பணிகுவாம்"** என்று நால்வர் பெருமக்களைத் தோத்தரித்துவிட்டுத் தான் தொடங்குகின்றார். தொடர்ந்து பாடுகையில், சைவ எல்லப்ப

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA(USA))

நாவலர், **'சைவத்தின் மேற்சமயம் வேறில்லை'** என்று பாடியது போல், **"ஆகமம் புகல்நெறி அடைவன் ஆயினும், சோகமில் சைவநல் துறையை நன்றெனச் சேர்குதல் அரிது"** என்று சிவப்பிரகாசரும் போற்றிப் பாடுகிறார்.

வீரசைவம் என்று எழுதப்பட்ட அனைத்தையும் அனைவரையும் மகிழ்ந்து பாராட்டும் பெருந்தன்மை சிவப்பிரகாசருக்கு உண்டு. இரேணுகாச்சாரியார் வேற்றினத் தவராக, வேற்று மொழியினராக இருந்த போதிலும், அவர் வீரசைவத்தை உபதேசித்திருப்பதால், **'வீரசைவத்து ஊதியம்'** என அவரைப் போற்றித் துதிக்கிறார். அதுபோலவே சென்ன வசவரை, **"வீரசைவ சிங்கம், நிலைத்த அருட் சென்ன வசவன்"** என மனமார வாழ்த்துகின்றார்.

எதையும் வீரசைவம் என்ற அளவுகோலை வைத்துப் பார்ப்பதுதான், சிவப்பிரகாசருக்குப் பழக்கம். கி.பி.*1134*இல் பசவர் பிறக்கும்போது ஒரு சைவ அந்தணர் குடும்பத்திலேதான் பிறக்கின்றார். ஆனால், பிறந்த அக்குழந்தை, தமக்குக் குருநாதர் எனவும் தமக்குத் தலைமேலே திருவடி தீட்சை தந்ததாகவும் சிவப்பிரகாசர் எழுதுகின்றார். மேலும் சிவப்பிரகாசருக்கு வீரசைவத்தின் மேலுள்ள உறைப்பின் காரணமாக, பிறந்த குழந்தையாகிய பசவருக்கு அவருடைய தாய் மாதாம்பிகைக்குத் தெரியாமலேயே, கூடல சங்கமத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே குருவாக வந்து, திருநீற்றுக் காப்புச் செய்து, இட்டலிங்கதாரணமும் செய்ததாக நம் சுவாமிகள் அருளிச் செய்கிறார்.

தாடலை தந்துஇங்கு எம்மைஆள் நந்தி
தாய்அகட் டினும்நின்று தரைமேல்
ஏடுஅவிழ் மலர்வாள் முகம்அது தோன்ற
எழுந்தரு ளுதல்முனம் குருவாய்க்
கூடல சங்க மேசன் தாய்க்கு ஒளித்துக்
குறுகிநல் நுதலில் நீறுஅணிந்து
வீடருள் பரம சிற்கன லிங்க
மெய்யுறத் தரித்தனன் அம்மா. (பிரபு.லீ.506)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீரசைவத்தின் சிறப்பைப் போற்றுவதற்காகவே அவதரித்த சிவப்பிரகாசர், பிற்காலத்தில் சடுத்தலத்தின் மகிமையை இவ்வுலகுக்குச் சாற்ற வந்த சென்ன வசவதேவர் பிறப்புக்குத் தாய் நாகம்மைக்குக் கொடுத்த பிரசாதமே காரணம் என்கிறார். இன்னும் பிறந்த அக்குழந்தையை **வீரசைவ நன்னெறி வளர்க்க வந்த குழந்தை** என்றும் வருணிக்கிறார்.

இவ்வகை கல்யாணத்தில் இருப்பநா காம்பை என்னும்
தவ்வைநம் வசவ தேவன் தன்பிர சாதம் தன்னால்
எவ்வம்இல் முத்தி மெய்யோடு இருக்கையின் அளிக்கும் வீர
சைவநல் நெறிவ ளர்க்கும் தனையனை ஈன்றாள் அம்மா.
(பிரபு.லீ.522)

வீரசைவத்திற்குப் புதிய தரிசனம் தரவந்த சிவப்பிரகாசர் ஓர் அருமையான உத்தியைக் கையாளுகிறார். சரியை, கிரியை, யோகம், ஞானத்தால் பரமுத்தியை அடையலாம் எனச் சைவம் சொல்லும். அதனைத் தாயுமானவரும் சரியை - அரும்பு; கிரியை - மலர்; யோகம் - காய்; ஞானம்-கனி என உவமை சொல்லி விளக்குகிறார். ஆனால், சிவப்பிரகாசர் ஞானத்தால் மட்டுமே பரசிவத்தை அடைய முடியும் என்பதற்கு ஓர் அருமையான விளக்கத்தைத் தருகிறார். பயிரை வளர்க்க வேண்டுமென்றால், வானத்து மழையால் வளர்க்க முடியுமே தவிர, புகை நெருப்பால் வளர்க்க முடியாது என்கிறார்.

ஞானம் கொண்டு நணுகும் சிவபதம்
ஊனம் கொண்ட கருமத்து உறுவது
வானம் கொண்டு வளர்த்தல் புகையது
மானம் கொண்டு வளர்த்தலை ஒக்குமால் (பிரபு.லீ.963)

இதே கருத்தை, “யோகமா நெறியில் நின்றோர் உண்மை சாதித்துக் கொள்வர் (பிரபு.லீ.73) என்று மேலும் வலியுறுத்தி எழுதியுள்ளார்.

சரியை, கிரியை, யோகம் என்பன முக்கால் கிணறே தவிர முழுக்கிணறு அன்று; ஞானத்தைச் சேர்த்தால்தான், அது முழுக்கிணறு ஆகும். இக்கருத்தைக் கீழ்வரும் ஒழிவில் ஒடுக்கம் மெய்ப்படுத்தும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிறப்புடைய புராணங்கள் உணர்த்தும் வேத
சரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதற்சரியைக் கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்

சிவப்பிரகாசர் எழுந்தாலும், எழுந்து தொழுதாலும், நடந்தாலும், நிமிர்ந்தாலும் வீரசைவமே ஊடாடி நிற்கும் என்பதற்கு மேலும் ஒரு சான்றைச் சுட்டலாம். உலகில் கொள்ளக் கொள்ளக் குறையாத சிவானுபவமாகிய இன்பத்தை மக்கள் அனுபவிக்க வேண்டுமென்றால், வீரசைவம் ஒன்றே வழி *(பிரபு.லீ.1139)* என்பார்.

வீரசைவத்திற்கு ஓர் எழுநிலை மாடமே எழுப்பியுள்ளார், சிவப்பிரகாசர். முதல் மாடம்: வீரசைவம் தம் நெறியில் தாழாதது; அயல்நெறிகளைத் தடுமாற வைப்பது, மதிநுட்பம் வாய்ந்த சான்றோர் எல்லாரையும் அமைதி பெற வைப்பது என்பதை, **"மறைநெறிகள் வழுவாமல் அயல்நெறிகள் தடுமாற, மதிஞர் எல்லாம் அறிவமைதி பெற வீரசைவ நெறி"** *(சித்.சிகா.6)* எனும் பாடல் எடுத்துச் சொல்லும்.

இரண்டாவது மாடம்: அல்லம தேவனே அனைத்துச் சமயத்திற்கும் தலைவன். எனினும் அவர் அதிகமாக நேயம் வைத்தது, சைவசமயமே! சைவத்தைக் காட்டிலும் வீரசைவத்தின்மீது நனிவிருப்பம் அல்லமருக்கு: காரணம் அதுதான் பிறவி நோய்க்கு மருந்து.

பாடல் வருமாறு

எவ்வகைச் சமயத் திற்கும் இறைவனே எனினும் நேயம்
சைவநல் சமயத்து உற்றான், சைவத்தும் வீர சைவத்து
அவ்வவர் பிறவி நீக்கும் அல்லமன் விருப்பம் உள்ளான்
மைவரிக் கயல்நெடுங் கண்மடவரால் என்றான் வள்ளல்

(பிரபு.லீ.114)

மாடம் 2: சைவத்திற்குப் பெரிய புராணம் போல், திருவிளையாடல்புராணம் போல் வீரசைவத்திற்கு வாய்க்கவில்லை. ஆதிசமயமாகிய வீரசைவத்திற்கு வீரசைவத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திற்கு ஒரு பாரகாவியம் இல்லாத குறையைப் போக்க, பிரபுலிங்கலீலை எனும் காவியத்தையும் திருக்கூவப் புராணம் எனும் புராணத்தையும் அருளிச் செய்தார் சிவப்பிரகாசர். இதில் சிவப்பிரகாசர் செய்த மாபெரும் தொண்டு என்னவென்றால், பிறமொழிக் காப்பியமாகிய பிரபுலிங்கலீலையை - கன்னட மொழியில் 'சாமரன்' எனும் மாகவிஞன் *(கி.பி.1430-1460)* தீட்டிய பெருங்காவியத்தைத் தமிழுக்கு வரவு வைத்ததுதான்! இக்காப்பியம் சமஸ்கிருதம் - மராட்டியம் - தெலுங்கு மொழிகளுக்கு வந்தும், தமிழுக்கு வராதது ஒரு குறையாகவே இருந்தது. அதனைப் போக்கியவர் நம் சுவாமிகள். மேலும், சிவப்பிரகாசர் இத்தொண்டினைச் செய்திருக்காவிட்டால், வீரசைவர்களாகிய அல்லமர் - பசவர் பற்றித் தமிழர்களுக்குத் தெரியாது போயிருக்கும்.

மாடம் *3:* ஒருமுறை உமாதேவி சைவ சமயம் எல்லாச் சமயங்களைக் காட்டிலும் மேலானது; அதனைக் காட்டிலும் நல்வீரசைவம் மேலானதாக இருப்பதற்குரிய காரணம் யாது? எனச் சிவபெருமானிடம் கேட்கிறாள்.*(1141)* அதற்குப் பதில் சொல்லும் முகத்தான் சிவபெருமான் கூறியது, வீரசைவத்தின் உயர்வை எடுத்துச் சொல்வதாய் அமைகிறது. *(1142)*

எல்லாச் சமயத்தின் உத்தர பாகமாய் அமைந்தது, வீரசைவம் அதற்கும் உத்தரமாய் அமைந்தது வீரசைவம். சைவ சமயம் கருத்தளவே மட்டும் அமைந்தது; வீரசைவம் காட்சியளவிலும் அமைந்தது. (சோதிமா சிவலிங்கத்தைத் தூய்மையாய் கரபீடத்தில் போதினால் அருச்சித்துப் பொருந்தி நிற்பதால்)

மாடம் *4:* சிவபெருமானாகிய நிலவு, முற்றத்தில் வைத்திருக்கும் குடத்திலும் தெரிகிறது. (குடஆகாயம்) தெருக்குளத்திலேயும் தெரிகிறது (மகாஆகாயம்) என்று தத்துவமாய்ப் பேசுகிறது. ஆனால் வீரசைவம், ஜீவன் ஆகிய ஆற்றுநீர் பரசிவமாகிய கடல்நீரோடு சங்கமம் ஆகிறது. இரண்டாக இருந்து ஐக்கியமானதை வீரசைவம் சொல்லுவதால், அது உத்தரம் ஆகிறது என்று சிவபெருமான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உமையம்மைக்குக் கூறுகின்றார். எனவே சைவ சமயம் உத்தர பாகம்; வீரசைவம் உத்தரம் ஆகிறது.

மாடம் 5: கற்பு என்பது ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் பேசப்பட்ட ஒன்று. தமிழ்மொழியிலும் இலக்கியத்திலும் வேறு எதற்கும் கற்புப் பேசப்படவில்லை. ஆனால், சிவப்பிரகாசர் வீரசைவத்திற்கு ஒரு கற்பு உண்டு என்கிறார். வீரசைவம் தன்னுடைய கோட்பாடுகளிலும் கொள்கையிலும் எந்தச் சூழ்நிலையிலும் எதற்கும் வளைந்து கொடுக்காத தன்மையால், அதனைக் கற்பு என்று சிவப்பிரகாசர் கருதியிருக்க வேண்டும். கண்ணுதல் ஒருவற் சார்ந்த கற்புடைச் சைவம் வாழ்க *(1155)* என்று போற்றுகிறார்.

மாடம் 6: வேத வழியை ஏற்பவர்கள் ஆகமத்தை முதன்மைப்படுத்துவதில்லை; ஆகம வழியில் நடப்பவர்கள் வேதவழியைக் கருதுவதில்லை. ஆனால், சிவப்பிரகாசர் பார்வையில் வீரசைவம் வேதத்தையும் முற்றாகத் துறக்கவில்லை; ஆகமவழி ஒன்றே வழி என்று மற்றவற்றைத் துறக்கவில்லை. (வேதம், சிவபெருமானின் மூச்சுக் காற்று; ஆகமம், சிவபெருமானின் பக்திப்பூர்வமான செயல்பாடு) எல்லாவற்றின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, வீரசைவத்தின் தனித்த தன்மையையும் போற்றியவர் சிவப்பிரகாசர். வீரசைவத்தின் ஆதாரசுருதியான 'சர்வ சுருதி சமன்வயம்' எனும் தத்துவத்தைப் பிசிறு இல்லாமல் எடுத்துச் சென்றவர், சிவப்பிரகாசர்.

அருமறை முடியும் சீர்சால் ஆகம முடியும் ஒத்துப்
பொரும்மறம் இல்லாமல் முற்றும் பொருளினை விளங்கக் காட்டித்
தரும்முறை அதனால் வீரசைவமே தலைமைத் தாம்இவ்
இருமறு அறுநன் னூலும்இதில் பிரமாணம் ஆகும்

(பிரபு.லீ. 1144)

புதுவையிலே வதிந்த காரணத்தால், மகாகவி பாரதி, மயிலம் மடத்தின் வீரசைவப் பார்வையையும், சிவப்பிரகாசரின் அருட்பாடல்களையும் செவிமடுத்திருக்க வேண்டும். அதனால் பரசிவ வெள்ளம் என்னும் தலைப்பில் பாடத் தொடங்குகின்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சந்ததமு மெங்குமெல்லாந் தானாகி நின் றசிவம்,
வந்தெனுளே பாயுதென்று வாய்சொன்னாற் போதுமடா!
நித்தசிவ வெள்ள மென்னுள் வீழ்ந்து நிரம்புதென்றுள்
சித்தமிசைக் கொள்ளுஞ் சிரத்தை யொன்றே போதுமடா!

என்று பரசிவ வெள்ளத்தை மாந்தியதன் அனுபவத்தைப் பாடுகின்றார்.

மாடம் 7: சிவப்பிரகாசருக்கு முன் வீரசைவம் எனும் நங்கைக்கு அலங்காரம் இல்லை; உலா இல்லை. கைத்தல மாலை இல்லை; சூடாமணி இல்லை; சிகாமணி இல்லை; நவமணிமாலையில்லை; ஆனால், சிவப்பிரகாசர் முப்பத்துநான்கு தமிழால் ஆக்கப்பட்ட அணிகலன்களை ஆயத்தப்படுத்தினார். "மதுரம் பெருகுறு தமிழ்ச்சொல் மலர் நினக்கு அணியும் பிறவியே வேண்டுவன்" என்று தம் குருநாதரிடம் மன்றாடி வேண்டுகின்றார்.

வீரசைவம் போற்றுகின்ற சிவப்பிரகாசரைப் "பயனுதவு வீரசைவ சிவப்பிரகாசப் பெரும்பெயர் படைத்துளானே" எனப் பெயர் தெரியாப் புலவர் ஒருவர் பாடி வைத்திருப்பது எத்தனைப் பொருத்தம்?

வள்ளி மணாளன் வீற்றிருக்கும் வண்ண மயிலின் தோகையில் எத்தனைத் தங்கக் காசுகள், மரகத மணிகள், நவரத்தினங்கள் உண்டோ, அத்தனையும் சிவப்பிரகாசரின் படைப்புகளில் உண்டு. பழம்புலவர் "பயனுதவு வீரசைவச் சிவப்பிரகாசர்" எனக் கைதொழுததுபோல், "இலங்குதமிழ்க் கடலையொரு நாவாயால் கடந்து உலகம் இறைஞ்சா நின்ற பொலம்கழல் பெருந்தகையாம் சிவப்பிரகாச ஐயனின்" திருவடி தொழுகின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

“வீரசைவத்தில் சாதியமைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்த பசவரைத் தொடர்ந்து, பிறப்பு இறப்பால் எல்லோரும் ஓர்குலம் என்பதை நிலைநாட்டியவர் சிவப்பிரகாசர் என்ற உயரிய சிந்தனையை நூலாசிரியர் சுட்டியுள்ளது தற்காலத்திற்குத் தேவையானது.”

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

ISBN NO: 978-93-85508-02-8